உ

சிவமயம்

# யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி

## 2007 கலைப்பிரிவு மாணவர்களின்

# தமிழ் அலைகள்

வெளியீடு :

2007 கலைப்பிரிவு மாணவர்கள்,

வைத்தீஸ்வராக் கல்லூரி,

யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா / வைத்தீஸ்வராக் கல்லூரி

மெய்ப்பொருள் காண்பது அறிவு

வைத்தீஸ்வராக் கல்லூரி யாழ்ப்பாணம்

## 2007 கலைப்பிரிவு
## மாணவர்களின்

# தமிழ் அலைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல் : தமிழ் அலைகள்

வெளியீடு : யா / வைத்தீஸ்வராக் கல்லூரி 2007
கலைப்பிரிவு மாணவர்கள்

பதிப்புரிமை : நூல் குழுவினர்

காலம் : 2007

பக்கங்களின் எண்ணிக்கை : 100

பதிப்பு : தயா அச்சகம்,
கொம்பியூட்ட ஓ(f)வ்செற் பிறிண்டர்ஸ்,
138, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

Book Title : **Tamil Alaigal**

Publishers : **J / Vaidhyswara College,**
**Arts Students (2007)**

Copyright : **Panel of writers**

Date : **2007**

No of Pages : **100**

Printers : Thaya Printers,
Computer Offset Printers,
138, Navalar Road,
Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை

இன்றைய கால கட்டத்தில் பல நெருக்கீடுகளுக்கு முகம் கொடுக்கின்ற மாணவ சமூகம் அவற்றையெல்லாம் மீறி தமது தேடல்களை, சிந்தனை சிதறல்களை, மனப்பதிவுகளை, ஆற்றல்களை எழுத்துருவில் நல் ஆக்கங்களாக வெளியிடுகின்றமை பாராட்டுதற்குரியதாகும்.

பல பாத்திரங்களின் உணர்வுகளை சிறுகதைகளாக மிகச் செப்பமாக, நல்ல மொழி நடையில் எழுதியிருக்கும் மாணவர்களை பாராட்டாமல் இருக்க்முடியாது. நல்ல கருத்துக்களை கவிதை வடிவத்திலே கொடுத்திருக்கின்ற மாணவர்களின் புதிய ஆக்கங்களை வரவேற்கின்றோம். இந்தக் கவிதைகள் யதார்த்த பண்பும், எளிமையும், கருத்தாழமும், தத்துவங்களையும் வெளிப்படுத்துவனவாக இருப்பது சிறப்பானதாகும்.

இந்த நூலிலே விளையாட்டுச் செய்திகள் சிந்தனைத் துளிகள், வரலாறு, இலக்கியம் போன்ற பல்வேறு அம்சங்களும் பொதிந்து காணப்படுகின்றமை ஆக்கங்களை மேலும் மெருகூட்டுகின்றது.

இவ்வாறான ஆக்கங்கள் மாணவர்களிடையே காணப்படுவது காலத்தின் தேவையாகும். அந்த வகையிலே நல்லதொரு ஆக்கத்தைப் பாடசாலைக்கும், சமூகத்திற்கும் கொடுக்கின்ற மாணவர்களை வாழ்த்தி மேலும் பல ஆக்கங்களை வைத்தீஸ்வராக் கல்லூரி அன்னையின் மடியிலே தவழ வேண்டுமென இறைவனை வேண்டி ஆசி கூறுகினறேன்.

**திருமதி. மீரா அருள்நேசன்**

**உதவிக் கல்விப்பணிப்பாளர், தமிழ்துறை.**

**வலயக் கல்வி அலுவலகம்,**

**யாழ்ப்பாணம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

யாழ்ப்பாணம் வைத்தீஸ்வராக் கல்லூரியின் க.பொ.த. உயர் தர வகுப்பு இறுதியாண்டுக் (2007) கல்விப்பிரிவு மாணவர்கள், ஒன்று சேர்ந்து உழைத்து தமிழ் அலைகள் எனும் சஞ்சிகையினை கணணி அச்சில் உருவாக்கி வெளியிடுவது மிகவும் மகிழ்ச்சி அளிப்பதாகும். விரைவில் நூற்றாண்டு விழாவினை எதிர்நோக்கியிருக்கும் வைத்தீஸ்வராக் கல்லூரி, அமரர் நாகமுத்து அவர்களால் உருவாக்கப்பட்டது. ஈழத்தில் முதன் முதலாக இராமகிருஷ்ணமிஷனின் நிர்வாகத்தின் கீழ் பரிபாலிக்கப்பட்ட பாடசாலையாக விளங்கியது. சுவாமி விபுலானந்தரது ஆளுமைக்குட்பட்டிருந்தது. இந்துத் தமிழ்ப்பண்பாட்டின் நிலைக்களனாகத் திகழுவது சமய பேதமின்றி இக் கல்லூரியில் இந்து, கிறிஸ்தவ, இஸ்லாம் மாணவர்கள் கல்விபயின்ற பொற்காலம் கடந்த காலங்களில் காணப்பட்டது. நாட்டின் அசாதாரண சூழ்நிலைகளினால் மாறி நின்ற ஐக்கியம் திரும்பவும் மெல்ல மெல்ல அடியெடுத்து வைப்பது மனநிறைவைத் தருவதாகும். புகழ் பூத்த இக் கல்லூரியிலிருந்து காலத்துக்குக் காலம் பல்வேறு சஞ்சிகைகள் வெளிவந்துள்ளன. பயனுறுதிமிக்கவைகளாகவும் மாணவர் - ஆசிரியர் ஆளுமையின் வெளிப்பாடுகளாகவும் அவையமைந்தன. ஆறாத் தொடர்புடனான இப் பணியின் ஒரு பகுதியாகவே ''தமிழ் அலைகள்'' வருகையினை நோக்க முடிகிறது.

தகவல் தொடர்பு ஊடகங்களின் வளர்ச்சிக்கு ஏற்றவாறு பாடசாலைகளில் மாணவர் கல்வித் தேடல்களும், புத்தாக்கங்களும் அமைய வேண்டிய இன்றியமையாமை யதார்த்தமாகும். அதற்கேற்ப உயர்தர வகுப்புக்களில் பயிலும் மாணவர்கள் தம்மாலான ஆக்கபூர்வமான படைப்பாக்க முயற்சிகளில் அதிகளவில் ஈடுபடுவது பெரிதும் விரும்பத்தக்கது. இந்தச் சஞ்சிகையினைத் தங்களது வகுப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர் அனைவரதும் பங்களிப்போடு தயாரித்து வெளிக்கொணரும் ஆர்வமும் அக்கறையும் வியந்து போற்றுதற்குரியது. கலைத் திட்டத்தின் ஒரு பகுதியாகவும், கலையுணர்வின் வெளிப்பாடாகவும், மாணவர்களது ஒற்றுமையின் எடுத்துக்காட்டாகவும், ''தமிழ் அலைகள்'' விளங்குகிறது.

கவிதைகள் (12), சிறுகதைகள், (10), கட்டுரைகள் (05), இசையும் கதையும் (01), நாடகம் (01), இசைப் பாடல் (01), தகவல் துணுக்குகள் (04) மற்றும் நகைச்சுவைத் துணுக்குகள் சில என்றவாறு சஞ்சிகையின் உள்ளடக்கம் காணப்படுகிறது. இவை ஆக்கவியலாளர்களின் பன்முகத் தன்மையை நிதர்சனமாக்குகின்றன.

அதிகமான மாணவப் படைப்பாளிகளுக்கு எழுத்திலக்கியம் முதல் முயற்சியாகவும் இருக்கக் கூடும். இருப்பினும் உணர்வுகளை வெளிப்படுத்துவதில் ஓரளவு வெற்றி கண்டிருக்கிறார்கள் என்றே கூறவேண்டும்.

''அழகான வளர்பிறை ஒன்று
ஆலய வீதியில்
வந்தவரிட மெல்லாம்
கைகளை நீட்டி யாசகம்
நித்தம் கேட்கும்
ஆயிரமாயிரம் அடியவர்
கண்கள் அந்தச் சாலையில்
நித்தம் சன்னதமாகும்''

''உண்டியல் வாய் வேண்டாம் வேண்டாம் என்று
துப்ப துப்ப சில்லறைச் சோறு
உள்ளவர் எல்லாம் கூடி உண்ண
அன்னதான ஏற்பாடு''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

த.வினோஜித் எழுதிய ''உண்மை'' என்னுந் தலைப்பிலான அழகுக் கவிதையில் இடம்பெற்ற சில உண்மை வரிகள் இவை குறியீடு, படிமம், உணர்ச்சி ஆகியன கலந்து புதுக் கவிதை படைக்குந் திறன் இளங்கவிஞர்களிடம் வளர்ச்சி பெறத் தொடங்கிவிட்டமைக்கு சான்றாகும். ''என் இனியவளே'' என்ற தலைப்பிலான காதற் கவிதையும் நல்ல படைப்பாகும். தேவதையே, புள்ளி மானே, மௌனப் பெண்ணே, பூங்குயிலே, பஞ்சவர்ணக் கிளியே, நிலவே, பூவே, இனியவளே என்றெல்லாம் காதலியை வர்ணிக்கும் இனிய அனுபவ தரிசனங்களைக் காட்டியுள்ளார் இ.ராம்தீபன். எல்லாக் கவிதைகளையும் சஞ்சிகையில் இடம்பெற்றுள்ள இசைப்பாடலையும் ஆண்களே எழுதியுள்ளனர். பெண் கவிஞர்களின் பங்களிப்பின்மை குறைபாடாகும். சிறுகதைகள் பத்து இந்தப் புதிய ஏட்டில் இடம் பெற்றுள்ளன. அவற்றினை எழுதியோரின் உணர்வுகளின் புரிதலை எம்மால் கவனத்தில் கொள்ள முடிகிறது. ஆனால் இன்னும் வளர வேண்டிய தேவை அதிகமுண்டு எனலாம். அடிபட்ட மனதில் ஆழப்பதிந்த உணர்வுகள், சமகாலப் பிரச்சினைகளின் வடுக்கள் சிறுகதைகளாக உருமாறியுள்ளன. பத்துச் சிறுகதைகளும் பெண்களாலேயே படைக்கப்பட்டுள்ளன. ஆண்களுக்குக் கவிதைகளும், பெண்களுக்குக் கதைகளும் என ஒதுக்கிச் செயற்பட்டுள்ளமை புலனாகிறது.

இவை தவிர ''இசையும் கதையும்'' ஒன்று இடம்பெற்றுள்ளது. அதிலிடம்பெற்றுள்ள பாடல்கள் பேச்சுத் தமிழையும் கலப்புத் தமிழையும் கையாண்டு படைக்கப்பட்டுள்ளன. சிறிய நாடகமொன்றுடன் ஐந்து பயனுள்ள கட்டுரைகளையும் இச் சஞ்சிகை தாங்கி வெளிவருகிறது. க.பொ.த. உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு உதவும் விதமாக, அவர்களது பாடத்திட்டத்துடன் இணைந்ததாக மூன்று கட்டுரைகள் காணப்படுகின்றன. அத்துடன் நான்கு தலைப்புக்களில் பொது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவு சார் தகவல்கள் இணைக்கப்பட்டிருப்பது பயனுள்ள முயற்சியாகும். ஆங்காங்கே இடைநிரப்பும் நகைச்சுவைத் துணுக்குகளும் சிந்தனையைத் தூண்டும் விதத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. இச் சஞ்சிகையை வெளியிடுவது, குறித்த வகுப்பு மாணவர்களுக்குப் புதிய அனுபவமாகும். கல்லூரியின் அதிபர் மற்றும் ஆசிரியர்களின் வழிகாட்டல்கள் அவர்களது இம் முயற்சியை வெற்றிகரமாக்கியுள்ளன. வைத்தீஸ்வராக் கல்லூரி அன்னையின் புகழார்ந்த மணிமுடியில் ''தமிழ் அலைகள்'' இன்னும் முத்து புதிதாகப் பதிக்கப் பெற்று ஒளி வீசுகிறது. அதற்காக உழைத்த மாணவர்களை வாழ்த்துகின்றேன். இப் பணியானது மேன்மேலும் தொடருமென நம்புகின்றேன். காலத்தை வென்று கல்விப் பணியாற்றி வரும் வைத்தீஸ்வராக் கல்லூரி, இத்தகைய அறிவுசார் கலைப்பணிகளாலும் பெருமை பெறும் என்பதில் ஐயமில்லை.

**15.02.2007**

**பண்டிதர், கலாநிதி செ.திருநாவுக்கரசு,**
**முதுநிலை விரிவுரையாளர்,**
**ஆசிரிய கலாசாலை, கோப்பாய்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபரின் வாழ்த்துரை

எனது பாடசாலையில் கா.பொ.த. உயர்தர கலைப் பிரிவில் கல்வி கற்றுக் கொண்டிருக்கின்ற மாணவர்கள் தமது சுய ஆக்கங்களான கவிதை, கட்டுரை, சிறுகதை போன்ற அம்சங்களைத் தொகுத்து ''தமிழ் அலைகள்'' என்ற பெயரில் வெளியிடுகின்ற நூலுக்கு வாழ்த்துரை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். மாணவர்கள் கற்கும் போதே தமது சிந்தனை களைத் தூண்டி, கற்பனையில் மிதந்து, அதனூடு தமது உளக்கிடக்கைகளை வெளிப்படுத்த தமிழ்மொழியை ஊடகமாக்கி ஆக்கங்களை தந்திருப்பது பாராட்டக்குரியதும் பெருமைக்குரி யதுமான காரியமாகும்.

பள்ளிக் காலத்திலே இவ்வாறான வெளியீடுகளை இவர்கள் வெளியிடுவது வராலாற்று ஆவணமாகுவதோடன்றி எதிர்கால மாணவச்சமுதாயத்திற்கு ஓர் எடுத்துக் காட்டாகவும் விளங்குகிறது. இவர்கள் பணி தொடரவும், மேலும் பல வெளியீடுகளை வெளியிடவும் ஆசி கூறுகின்றேன். இவர்களுக்கு ஊக்கமளித்த ஆசிரியர்களுக்கும் எனது நன்றிகளை தெரிவிப்பதோடு வெளியீடு சிறக்கவும் வாழ்த்துகிறேன்.

**நா.வன்னியசிங்கம்**
**அதிபர்.**

**யா/வைத்தீஸ்வராக் கல்லூரி**
**யாழ்ப்பாணம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வகுப்பாசிரியரின் வாழ்த்துரை

''தமிழோடு இசைபாடல் மறந்தறியேன்'' என்ற திருநாவுக்கரசரின் பாடலின் படி சமயமும் தமிழும் இரு கண்கள் என்பது புலனாகிறது. அந்த வகையில் அமிழிதினும் இனிய தமிழ் சாகரத்தில் பல முத்துக்கள் உள்ளன. அம் முத்துக்களை எல்லாம் ஒன்று சேர்த்துக் கோர்த்து ''தமிழ் அலைகள்'' என்ற இச் சஞ்சிகையை எம் கல்லூரியின் உயர்தர கலை வகுப்பு மாணவர்கள் ஆக்கி இருப்பது குறிப்பிடத் தக்கதாகும்.

எத்தனையோ நெருக்கிதல்களுக்கிடையேயும், இச் சஞ்சிகை வெளி வருவது வரவேற்கத்தக்கது ஆகும். இம் மாணவர்களின் முயற்சியும் அவர்களின் ஆக்கங்களின் செயற்பாடுகளையும், அவற்றுக்கு ஊக்கம் கொடுத்த ஆசிரியர்களது அரும் பணியையும் பாராட்டாமல் இருக்க முடியாது.

இவ்வாறு பல சஞ்சிகைகள் மாணவர் களிடமிருந்து மேலும் மேலும் வர வேண்டும் என்று எதிர்பார்ப்புடன் இவ்வுரையை முடிக்கின்றேன்.

**திருமதி. அழகுதாசன்**
ஆசிரியர்,
யா/ வைத்தீஸ்வராக் கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்து

எம் மாணவச் செல்வங்கள் தம் மனதிலே முகிழ்ந்த எண்ணங்களை இலக்கிய வடிவங்களாக வெளியிட்டிருப்பது எனக்கு பெரும் மகிழ்ச்சியை அளிக்கிறது.

இந்த இலக்கிய படைப்பு பல இடர்பாடுகளைத்தாண்டி முழு உருப்பெற்று வர இம்மாணவர் எடுத்த முயற்சி பாராட்டுக்குரியதே. இவர்கள் பதித்துச் செல்கின்ற பாதச்சுவடுகளை இனிவரும் மாணவரும் தொடர வேண்டும் என எதிர்பார்க்கின்றேன். பாடசாலையில் மட்டுமன்றி தாம் செல்லும் திசையில் எல்லாம் தம் இலக்கியப் பணியை தொடர வேண்டும் என்பதே என் அவா.

**நன்றி.**

யா / வைத்தீஸ்வராக் கல்லூரி
யாழ்ப்பாணம்.

**வி. ஜெயபால்**
ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியீட்டுரை

நீண்டகால பாடசாலை பயணத்தில், எங்கள் பயணம் முடிவுறும் காலம் நெருங்கிக் கொண்டிருக்கும் இத்தருணத்தில் எமது இலக்கிய ஆர்வத்தின் காரணமாக "தமிழ் அலைகள்" மேலெம்புகின்றன. காற்றில் கரைந்த எமது கருத்துக்களையும், உணர்வுகளையும் இங்கு கவிதைகளாக, சிறுகதைகளாக, கட்டுரைகளாக மற்றும் பாடலாகவும் நாடகமாகவும் தந்துள்ளோம். எமது கன்னி முயற்சியினால் எழுந்த "தமிழ் அலைகள்" உங்கள் சிந்தனைக்கு விருந்தாக அமையும என எதிர்பார்க்கின்றோம். எம்மைப் போல் எமது சகோதரர் சகோதரிகளும் இலக்கிய முயற்சிகளில் ஈடுபட்டு எமது கல்லூரியின் புகழை மேன்மேலும் மெருகூட்ட வேண்டும் என்பது எமது ஆசை. மாணவர்கள் மத்தியில் இலக்கிய ஆர்வத்தினை உருவாக்கும் அலைகளாக எமது "தமிழ் அலைகள்" திகழும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

இந்நூலை வெளியிட பல வகையிலும் உதவி புரிந்த அன்பிற்கும் மதிப்பிற்கும் உரியவர்களை நன்றியுடன் நோக்குகின்றோம்.

இத்தகைய இலக்கிய முயற்சியை செய்ய வேண்டும் என எம்சிந்தையில் தூண்டிய இறைவனுக்கு முதற்கண் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, நாங்கள் ஒரு நூல் வெளியிடப் போகிறோம் எனக் கூறியதும் அதற்கு அனுமதி தந்ததுடன் ஆசிரியுரை வழங்கியதோடு ஆக்கங்களையும் பார்த்து ஊக்கம் கொடுத்த எமது பாடசாலை அதிபர் மதிப்பிற்குரிய திரு. நா. வன்னியசிங்கம் அவர்கட்கு எமது நன்றி தெரிவித்துக் கொள்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது நூலிற்கு குறுகிய காலத்தில் சிறந்த வகையில் அணிந்துரை வழங்கிய பண்டிதர் கலாநிதி திரு. செ. திருநாவுக்கரசு அவர்கட்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். மற்றும் ஆசியுரை வழங்கிய தமிழ்த்துறை உதவிக் கல்விப்பணிப்பாளர் திருமதி. மீரா அருள்நேசன் அவர்கட்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எமது வகுப்பாசிரியர் திருமதி பாலகுமாரி அழகுதாசன் அவர்கள் எமக்கு ஆலோசனை வழங்கியதோடு வாழ்த்துரையும் தந்துள்ளார். அவர்கட்கு எமது நன்றிகள். மற்றும் எமது தமிழ் பாட ஆசானும் தொடர்ச்சியாக கவிதை நூல்களை வெளியிட்டு வருபவருமாகிய திரு. வி. ஜெயபால் அவர்கள் எமது இலக்கிய முயற்சிக்கு ஆலோசனை வழங்கியதோடு இறுதிவரை வழிகாட்டியாகவும் திகழ்ந்தார். அவர்கட்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்தக் கொள்கின்றோம்.

எமது நூலை கணனி வடிவமைப்பு செய்து தந்த அன்புக்குரிய சகோதரிகள் சோ. நிருபாலினி, அ. வித்தியா அவர்களுக்கும், மற்றும் இந்நூலைப் பதிப்பித்துத் தந்த தயா அச்சகத்திற்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**நன்றி.**

அன்புடன்,

**நூல் குழுவினர்,**

2007 **கலைப்பிரிவு மாணவர்கள்,**

**யா / வைத்தீஸ்வராக் கல்லூரி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளடக்கம்


| கவிதைகள் | பக்கம் |
|---|---|
| 1. உண்மை | 1 - 2 |
| 2. தாயின் கருணை | 3 - 4 |
| 3. நட்பு என்பது | 5 |
| 4. என் எண்ணத் துளிகள் | 6 |
| 5. என் இனியவளே | 7 |
| 6. உனது வாழ்க்கை | 8 - 9 |
| 7. இதய கன்னியின் உதய தரிசனம் | 10 |
| 8. பதில்கூறு | 11 |
| 9.: இதயத் துடிப்பு | 12 |
| 10. தாய்மைக்கு நான் சொன்ன தாலாட்டு | 13 |
| 11. எனக்குள் நான் புலம்பிக்கொண்டவை | 14 |
| 12. பூமடியில் விழுந்த நெருப்பு | 15 |

| சிறுகதைகள் | |
|---|---|
| 1. பெத்தமனம் | 17 - 18 |
| 2. தினம்தினம் தவிப்பு | 19 - 20 |
| 3. லாவில் மரம் | 21 - 22 |
| 4. மீண்டும் ஒரு வெள்ளைச் சட்டை | 23 - 25 |
| 5. வாழ்க்கையில் | 26 - 27 |
| 6. வரிசை | 28 - 30 |
| 7. விண்ணுலக நட்பு | 31 - 33 |
| 8. குமரபுரம் | 34 - 36 |
| 9. மனப்பதிவுகள் | 37 -38 |
| 10. இறந்த காலக் கனவுகள் | 39 - 42 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரைகள்

1. தமிழ் நாட்டார் பாடல்கள் 43 - 45

2. யாழ்ப்பாண இராச்சியம் தோன்றுவதற்கு முன் தமிழ் இலக்கிய வளர்ச்சி 46 - 48

3. நிச்சயமான வாழ்க்கை 49 - 51

4. தமிழுக்குத் தொண்டாற்றிய தமிழக பெரியார்கள் 52 - 60

5. வெற்றியின் இரகசியம் 61 -62

பாடல்

1. அன்பே 63 - 64.

இசையும் கதையும்

1. என்றும் நட்போடு 65 -68

நாடகம்

1. சுருதியின் எண்ணங்கள் 69 - 74

தகவல் துணுக்குகள்

1. தமிழில் முதன் முதல் 75 - 76

2. இலங்கையின் கல்வி 77

3. சிந்தனைத் துளிகள் 78 - 80

4. விளையாட்டுச் செய்திகள் 81 82




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்மை

அழகான வளர்பிறை ஒன்று

ஆலய வீதியில்
வந்தவரிடம் எல்லாம்
கைகளை நீட்டி யாசகம்
நித்தம் கேட்கும்.....
ஆயிரம்மாயிரம் அடியவர்
கண்கள் அந்தச் சாலையில்
நிதம் சன்னதமாடும்
இந்த ஒரு சாண் வயிற்றின்
அடியவனுக்கு மட்டும்
அவை காட்சிப்படுவதில்லை
மடிப்புக் குலையாத பட்டாடை
தலைக்கு மேல் தங்க நகை
உண்டியல் வாய் வேண்டாம் வேண்டாம் என்று
துப்பத் துப்ப சில்லறைச் சோறு
உள்ளவர் எல்லாம் கூடி உண்ண
அன்னதான ஏற்பாடு
சாமி மட்டுமல்ல சாமியின் சந்ததியே
தங்க பெரு வீடு
இறைவன் வீதியிலே நிற்கிறான்
நெற்றியிலே மட்டுமல்ல சட்டையிலும்
பல கண்கள் வைத்துக் கொண்டு
உள்ளே எதைத் தேடுவாரோ?
தெரியாது வீதியின் நின்ற இறைவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருடத் தலைப்பட்டான் முன்பு
அரங்கேறாத அந்த நடிகன்
மாட்டியும் கொண்டான்
நாலு பேர் கூடி நன்றாகவே அடித்தனர்
மனிதா அடிப்பதற்கு நான்கு
கைகளை உருவாக்க முடிந்த
உன்னால் அரவணைத்து அறிவுரை கூற
ஒரு கையை உருவாக்க
முடியாத வரை
நீ கட்டிய கோயிலும் கும்பிட்ட தெய்வமும்
வெறும் கல்தானடா
நித்தம் ஆலயங்களில்
நீ ஏற்றும் தீபங்களில்
ஒன்றை ஒரே ஒரு முறை
உன் மனதுக்குள் ஏற்றிப்பார்
எது உன்னால் வெறுத்து
ஒதுக்கப் படுகிறதோ அது நிச்சயமாய்
உன்னாலேயே உருவாக்கப்பட்டது.

**ஆக்கம் :- த . வினோஜித்**

**என்ன மிஸ்டர் அந்த வீட்டில் இருந்து ஒரே புகை புகையாக வருகிறது.**
**அந்த வீட்டுக்கார அன்ரி அங்கிள்மீது எரிந்து விழுகிறா. அதுதான்!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயின் கருணை



பிறப்பின் பயன்
மனிதனின் பிறப்பு
ஆண்டவனின் கட்டளை
தாயின் கருவில் உருவானது......!

காலத்தின் கட்டாயம்
மண்ணில் அவன்
வாழ்வைத் தொடர்வது.....!

இருள் சூழ்ந்த
கருவறையில் இருந்து
எந்தன் உயிர் பூமியிலே
விலகிப் போகும் வரை.....!

சுமந்தவளின் மனக்கணக்கின்
எண்ணிக்கையில் இருந்தன
என் எதிர்காலப் பயணம்.....!

அதோ அந்த
தாயின் அரவணைப்பில்
ஏதும் அறியாத
சின்னஞ் சிறு பிராயத்திலே.....!

அவளுக்குத் தான்
என்னால் உருவான
வேதனைகள் எத்தனை எத்தனையோ
சொல்லத்தான் முடியுமா.....?

உணர்ச்சிகளால் எனக்கு
உணர்வு ஏற்படும் போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துள்ளிக் குதித்து நான்
கொண்ட ஆனந்தத்தினால்
வயிற்றுக்குள் கால்கைகளை
நீட்டி உதைத்து
சந்தோசப்பட்ட பொழுது.....!

என்ன பாடுபட்டிருப்பாள்
என்னால் பாடுபட்டுப்போன
காயத்தை பிள்ளைப்
பாசத்தால் வாங்கியிருப்பாளே....!

உலகை எட்டிப்பார்க்க
நான் நினைத்த பொழுது
பிரசவ வலியால் அந்த
தாய்மை எப்படிதுடித்திருக்கும்......!

தாயில்லாமல் நானில்லை
தாயே நீயே
எந்தன் தெய்வம்......!

உன்னையின்றி எனக்கு
வேறு உலகமில்லை என்
வாழ்நாளில் உனக்கென நான்
எதுவும் செய்யவில்லை உன்
தியாகத்துக்கு ஈடு ஏதுமில்லை.....!

**ஆக்கம் :- இ. கஜேந்திரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நட்பு என்பது...



என்னுடைய
வேதனை துன்பங்களில்
பங்கு கொள்பவனும்
நான் அலட்சியமாகும்
வேளைகளில்..........
ஞாபகத்தை ஊட்டுபவனும்
எனது தேவைகளை
தனது தேவைகள் எனக்கருதி
இரவு பகல் பாராது
தன் முதுகு கொடுப்பவனும்
நட்புக்கு இலக்கணம்
துரியோதனன் கர்ணன் என்று
உதாரணம் காட்டிய தெல்லாம்
மலையேறிப் போக.........
நட்புக்கு இலக்கணம்
நம்மை உதாரணமாக
காட்டி கொண்டால்
நண்பனே........
ஆண்டவன் எல்லா இடத்திலும்
இருக்க முடிவதில்லை
அதனால் தான்
நட்பென்ற நம்மை
படைத்தான்
உண்மையான நட்பென்பது
நீ அழும்போது உண்மையிலேயே
நண்பனுக்கு அழுகை வருகிறது
என்றால்.........
அதுதான் நட்பு
அந்த வகையில் நான்
அதிஷ்டசாலி.

**ஆக்கம் :– ரஜீபன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் எண்ணத் துளிகள்

நிச்சயார்த்தம் நடந்த பெண்ணை
மறக்கலாம் மறுக்கலாம் ஆனால்
மனதிலே நிச்சயமான பெண்ணை
மறக்கவோ மறுக்கவோ முடியாது.



அறிந்தவரிடம் அறியாததை கேட்டு
தெளிவு பெற வேண்டும்
அறியாதவரிடம் அறிந்ததை கொண்டு
அறிவித்து வாழவேண்டும்.

பலதை விற்பனை செய்யலாம்
எனக்கென்று பலதை கற்பனை செய்யலாம்
அதை அடைய சூழ்ச்சியும் செய்யலாம்
அதில் ஒன்று தான் சொந்தம் என்று
இறைவன் விதிக்கலாம்.

கிடைத்த புகழை தொலைத்து விடக்கூடாது
கிடைக்காத புகழை வேண்டி நிற்க கூடாது
எழுந்து நிற்கச் சொன்ன தந்தையையும்
வாழ்வில் நடக்கச் சொல்லித் தந்த
குருவையும் மறக்கக் கூடாது.

ஆண்டவன் தந்தது அறிவு
தனிமையில் வருவது அமைதி
அனுபவம் தருவது பாடம் - ஆனால்
தானாக கனிவதில்லை கல்வி.

**ஆக்கம் :- க . கஜதீபன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் இனியவளே



நட்சத்திர சிரிப்பினிலே
கைது செய்தாய்.........
காந்த விழிகளிலே
சிறை வைத்தாய்.........
நீ எப்போது நலம் விசாரிப்பாய்
என் தேவதையே.........
என் விழிகள் நலம் விசாரிக்கின்றனவே
என் புள்ளி மானே...........
மௌனமாய் செல்லும் என்
மௌனப் பெண்ணே...........
புரியவில்லையோ நான் பாடும்
மௌன ராகம்............
அமைதியின் உருவான என்
நீதி தேவதையே..........
உன் தீர்ப்புக்காய் காத்திருக்கும்
குற்றவாளி நானே..........
உன்னுடன் கதைக்க வந்தால்
என்னுள் தடுமாற்றமே.........
வார்த்தைகள் எல்லாம்
தலைமறைவாகிறதே...........
கடைக்கண் பார்வை தனிலே
காயப்படுத்தாதே என் மனதை........
குளிர் காற்று கூட சுட்டெரிக்குதே
பூங்குயிலே......................
கோடை வெயில் கூட சில்லென்றுள்ளது
என் பஞ்ச வர்ணகிளியே.........
நித்தம் உன்னை பார்க்கா விட்டால்
நித்திரை இல்லையடி நிலவே..........
காலையில் உன்னை காண வழி மீது
விழிகள் உள்ளது பூவே.........
நீயே என் சுவாசமாய் வர எத்தனை
காலமும் காத்திருப்பேன்
என் இனியவளே.......................

**ஆக்கம் :- இ. ராம்தீபன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உனது வாழ்க்கை

நண்பனே..........

இன்று தொடக்கம் உன்

விடியலை நீயே எழுப்பு

மற்றவர்கள் மீது வைக்கின்ற

நம்பிக்கையை.......

உன்மீது வை

தோல்விகள் எப்போதும் நிரந்தரமல்ல

தோல்வியே வெற்றியின்

முதற் படி அதை மறவாதே.........



நண்பனே.........

உனது மனச்சாட்சி தான்

உன்னுடைய சிறந்த வழிகாட்டி

அதன் படி நீ நட.......

உன்னைக் கேள்வி கேட்க

ஒருவர் முன் வரமாட்டார்..........

நண்பனே.......மரணத்தின் முன்

செர்க்கமோ....... நரகமோ..... கிட்டுவது

மரணத்தின் முன் நீ வாழ்ந்த

வாழ்க்கையை பொறுத்தது.........

நண்பனே..........

நம்மை தவிர எதுவுமில்லை

என்று நினைக்காதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது உன்னுடைய ஆணவம்
நம்மிடம் எதுவுமில்லை
என்று நினைப்பது
உன்னுடைய பெருமிதம்
நீ கற்றதை உன்னோடு
நிறுத்தி விடாதே.........
அதை நாலு பேருக்கு
கற்பித்து விடு- உனக்கு
புண்ணியமாகும்.

நண்பனே
உன்னுடைய முன்னேற்றத்தை
பற்றியே சிந்தி......
அப்போது......
மற்றவர்களை விமர்சிக்க
நேரமிருக்காது
நண்பனே
இரவின் முடிவு - விடிவு
தோல்வியின் முடிவு - வெற்றி
உனது வாழ்க்கை
உன் கையில்.......

**ஆக்கம் :- றஜீபன்**

**நீ எப்படி மாட்டிக்கிட்டே?**
**அலாரம் திருடியதும் அது சரியா வேலை செய்யுதான்னு அங்கேயெ நின்னு செக் பண்ணிப் பார்த்தேன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதய கன்னியின் உதய தரிசனம்



செந்தமிழ் மொழியிலே கயல் மீன் விழியிலே
தேனமுத பேச்சினிலே தேனிலவின்
முகத்திலே அன்ன நடை அழகிலே
வந்தவள் என இதயக்கன்னி.

வெள்ளைத்தாவணி அணிந்து வந்து
குலைத்து விட்டாள் மனதை பித்துப்பிடித்த
மனம் அவள் செல்லும் பாதையில்
விழிகள் நோக்கி செல்கிறதே.

சட்டென்று திரும்பி கன்னத்தில் குழிவிழ
பொற்குடச் சிரிப்புடன் இமையோரம் வீழ்ந்த
கூந்தலை மலர் விரல்களால் வாரி
தழுவிக்கொண்டு என் விழியிலிருந்து மறைந்தாயே

வீதியோரம் வீற்றிருந்த என் விழிகள்
குருடானதேன்? இவள் தேவலோக
கன்னியோ தேவர்களின் கன்னியோ என்னை
கூறுபோட வைத்த கூற்றுவனின் கன்னியோ.

**ஆக்கம் :- யோ . ஆனந்தராசா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பதில் கூறு

அழகான கவிதையே
பார்க்கிறேன் பார்க்கிறேன்
இன்னமும் நீ பொருள் படுகிறாய்
இல்லையே - உன்னை யார்த்தவர்
எழுத்துக்கள் தோறும்
வித்துவச் செருக்கை ஊற்றி
அல்லவா வைத்திருக்கிறார்
நான் வித்துவான் அல்ல
உன்னை படித்து
பொருள் கொள்ள
ஆதலால் என்னுயிரே- நீயே
சொல்லி விடு செய்வாயா?
இல்லை என்னை வித்துவான்
ஆக்கிவிடச் சொல்வாயா?

**ஆக்கம் :- த . வினோஜித்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதயத் துடிப்பு



காதல் என்ன பட்ட மரமா
படீர் என்று முறிவதற்கு
காதல் என்ன வீசும் காற்றா
மாறி மாறி வீசுவதற்கு
காதல் என்ன
கரும் பலகையில் எழுதிய எழுத்தா
வேண்டாம் என்றவுடன் அழிப்பதற்கு
காதல் என்ன கண்ணாடியா
தவறி விழுந்தவுடன் உடைவதற்கு
காதல் என்ன மண் பானையா
போட்டு விட்டதும் உடைவதற்கு
காதல் என்ன
காலையில் மலரும் பூவா
மாலையில் வாடி விடுவதற்கு
காதல் என்ன
பருவ கால மழையா
இடைக்கிடையே
பொழிவதற்கு
காதல் ஒரு இதயதுடிப்பு - உயிர்
இருக்கும் வரை
துடித்த வண்ணமே
இருக்கும்.

**ஆக்கம் :- கு . ரஜீபன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்மைக்கு நான் சொன்ன தாலாட்டு



வேதனை சோதனை தாண்டி
எம்மை பெற்றெடுத்த - அம்மா
எனத்தரும் அருட் சோதியே......
பாரினில் உனக்கு ஈடாக
ஏதும் உண்டோ................

வாழ்க்கை என்ற நிலைக் கோணத்தில்
பெண்மையின் சிறப்பது "அம்மா"
இந்த அகிலம் புகழ்ந்திடும்
சக்தியும் நீயே............
தாய்மையின் இந்த அகிலம் கண்டிடும்
உண்மையும் இதுவே........

ஆயிரம் தான் உறவுகள் இருந்தாலும்
தாயின் பாசத்திற்கு ஈடாகுமோ?
துள்ளித் திரியும் வேளையிலே
தூக்கிச் சென்றிடுவாய்
இன்மை முழுதும் எமை வளர்த்து
துயரெல்லாம் போக்கிடுவாய்

உன்னை விட வேறு தெய்வம்
எமக்கு இல்லை இப்பாரினிலே.

**ஆக்கம்:- இ. விஜயகுமார்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனக்குள் நான் புலம்பிக் கொண்டவை

கண்ணெனும் கருங் குழியில்
அமர்ந்திருக்கும் செந்
தாமரைப் பூவே நீ உதிர்ந்தாலும்
மொட்டாக மலர்வாய்
இது கற்பனை அல்ல நிஜம்.

வாழ்க்கை என்ற ஓடம் தனில்
கடந்து போகின்ற
மானிடர் உன்னுடைய அகத்தில்
இருக்கின்ற ஒவ்வொரு
சொற் புணர்ச்சியும் விளிப்பு தன்மை
கொண்டவை இதை
நீ செயற்படுத்து இன்றேல்
அற்பமாய் மண்ணில்
மறைந்து விடும் வாழ்க்கை.


மானிட வாழ்கை என்பது
வெறும் ஜடம் போன்றது
இல்லை ஒரு தெய்வத்தின்
கிரீடம் போன்றது.
இதனை அற்பமாக்காதே மனிதா
நீ வெறும் ஜடமாகிவிடுவாய்.

**ஆக்கம்:- இ. விஜயகுமார்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூமடியில் விழுந்த நெருப்பு



பாவி என் மனச் சிறையில்
வந்துதிர்ந்த பூவே நீ
கொட்டி விட்ட வார்த்தைகள்
என் மனதை சின்னா பின்னமாக
சிதறடித்து விட்டது. வார்த்தைகள்
ஆயிரம் இருந்தும் நீ
உன் மனச் சிறையில் மௌனத்தில்
புதைத்து வைத்திருந்த
வார்த்தை தான் என்ன?

காதல் என்ன பணத்தின் வடிவா?
இல்லை இது தெய்வம் உறையும்
மனத்தின் வடிவம் பெண்ணே
உன் மனதில் ஜீரணமாகாமல்
கிடக்கும் வார்த்தைகளும் - என்
கண்ணில் இருந்து வழியும் - கண்ணீரும்
அர்த்தமற்றவை தானடி - நம்மை
சேர்க்க இரண்டிற்கும் வலுவில்லையே.

**ஆக்கம்:- இ. விஜயகுமார்**

**"இட்லி ரொம்பவும் பூப்பொல இருக்கேப்பா.......**

**"அதுக்கு ஏன் சார் கவலைப்படுணும்...."**

**"இல்லே........... சாப்பிட்டப்புறம் நானும் இவ்வளவு**

**நைஸா மாவு அரைக்கணுமேன்னு தான்!"**

படங்கள்:- **உ. சுஜனி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்

அகிலத்தின்
ஆணிவேர்!
குழந்தைகளின்
உலகம்!
பாசத்தின்
பிறப்பிடம்!
தியாகத்தின்
சொரூபம்!

# சிலை

சிற்பியின் கற்பனை
கல்லின் வேதனை
உளியின் சாதனை

# கடற்கரை

அழகின் பிறப்பிடம்
ஆதவனின் இருப்பிடம்
மீனின் வதிவிடம்
மீனவனின் தொழிலிடம்
கழியாட்ட புகழிடம்
கவிஞனின் கவியிடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுகதைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெத்த மனம்

அந்த கிராமத்தினையே சீரழித்த மலேரியா கண்ணம்மாவையும் விட்டு வைக்கவில்லை. பசியும் பட்டினியும் அவளை பதறவைத்தது. "என்னங்க ரவியிட்ட சொல்லி அனுப்பிவிடுங்க பெற்றவங்க என்ற கடமைக்காவது எதாவது உதவி செய்வான் தானே" என்று தன் கணவனிடத்தில் வேண்டிய கண்ணம்மா மீண்டும் போர்வையை இழுத்து போர்த்திக் கொண்டு சுருண்டு படுத்தாள் "கண்ணம்மா எனக்கு அவன் வந்து பார்ப்பான் என்று நம்பிக்கை இல்லை என்றாலும் உன்னுடைய விருப்பிற்கு நான் தடையாக இருக்கமாட்டேன். சரி சொல்லிவிடுகிறேன்" எனக் கூறி செல்லையா யாரோ படலையைத் திறந்து உள்ளே வருவதை கவனித்தார்.

அங்கே ராசாத்தி தேனீருடன் வந்தாள். "யாரது ராசாத்தியோ ஒருக்கா பிள்ளை உன்ர மகனை அனுப்பி கண்ணம்மா வருத்தத்தில் கிடக்கிறத என்னுடைய மகனுக்கு சொல்லி விடு அவனுக்கு சொல்லுறதுக்கு எனக்கு கொஞ்சம் கூட விருப்பமில்லை. கண்ணம்மா தான் சொல்லிப் போட்டு கிடக்கிறாள்" எனக் கூறியபடி செல்லையா அருகிலிருந்த சில்வரை எடுத்து ராசாத்தியிடம் கொடுத்தார். "ஐயா நான் இன்று உங்கட மருமகளை சந்தையில் கண்டு கதைத்தனான். அப்போ அவ சொன்னா உங்கட மகனுக்கு வருவதற்கு நேரமில்லையாம். நேரம் கிடைத்தால் வருவாராம். சொல்லச் சொன்னவா" என்று தேனீரை ஊற்றி செல்லையாவிடம் நீட்டினாள் ராசாத்தி. சொல்லையா-கண்ணம்மாவின் குடும்பம் ஒரு காலத்தில் பெரிய செல்வந்தர்களாக வாழ்ந்து வந்தனர். அவர்களுக்கு ஒரே மகனாகப் பிறந்தவனே ரவி ரவியை அவர்கள் செல்லமாக ஒரு குறையும் வைக்காது வளர்த்தனர் செல்லையாவின் வியாபாரத்தில் ஏற்பட்ட சிறிய நட்டம் பெரிதாகி கொஞ்சம் கொஞ்சமாக அவரை ஏழ்மை நிலைக்கு இட்டுச் சென்றது.

இப்படியாக இருந்த போதிலும் அவர் தன் மகனிற்கு கல்விச் செல்வம் வேண்டுமென்ற காரணத்தால் பல இடங்களிலும் கடன்பட்டு கூட படிக்க வைத்தார். ரவியும் கல்வியில் சிறந்து விளங்கி உயர் பதவியையும் பெற்றான். ரவி தான் விரும்பிய பெண்ணை திருமணம் செய்வதற்கும் அவனது தாயும் தடைவிதிக்கவில்லை. இவ்வாறாக நாட்கள் வளர்ந்தன. தாய், தந்தையரை பார்க்க வருவதையும் ரவி குறைத்து கொண்டான். ஆனால் அவனது பெற்றோரோ அவன் மேல் வைத்திருந்த அளவு கடந்த பாசத்தினால் அவன் வீடு தேடிப் போய் பார்ப்பார்கள். நாட்டுபுற மாமன் மாமி தன் வீட்டிற்கு வருவதை மருமகள் விரும்பவில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதை கணவனிடம் கூறினாள். மனைவியின் சொல்லை மந்திரம் என மதிக்கும் ரவியோ பெற்றோரை பெரிதாக மதிக்காமல், "இங்கே படித்த பெரியவர்கள் எல்லாம் வந்து போறவங்க நீங்கள் இங்கே வரக்கூடாது. எனது மனைவிக்கும் பிடிக்கவில்லை.

எனவே நீங்கள் இனி இங்கு வரவேண்டாம்" என சாமர்த்தியமாக கூறினான். ரவி கூறிய வார்த்தை அவர்களுக்கு ஆயிரம் ஊசி கொண்டு தங்களை குத்தியது போலிருந்தது. இருந்த போதும் மகன் தானே அவ்வாறு சொன்னவன் என தங்களுக்குள்ளே ஆறுதல் அடைந்தனர். ரவிக்கு சம்பளமும் உயர்ந்து கொண்டே சென்றது. ஆனால் அவனோ பெற்றோருக்கு எப்பாவது ஒரு தடவை தான் காசு கொடுப்பான். அதையும் குறைத்து கொண்டு சென்றான். கொடுக்கும் பணத்திற்கும் கணக்கும் கேட்பான். நாட்செல்லச் செல்ல கண்ணம்மாவை மலேரியா கடுமையாக தாக்கியது. மகனை பார்த்து அவனுடன் பேச வேண்டுமென்ற அவாவுடன் அவனை கூட்டிக்கொன்று வரும்படி கணவரிடம் மன்றாடினாள்.

செல்லையாவும் தன் மனைவியின் கடைசி ஆசையை நிறைவேற்றுவதற்காக ரவியின் வீட்டை நோக்கி சென்றார். ஆனால் மருமகளோ "அவர் இப்ப இங்க இல்ல வெளியில போயிற்றார் வந்தால் சொல்லுறன்" என வேண்டா வெறுப்புடன் பதிலளித்தாள். கண்ணம்மாவின் ஆசை நிறைவேறும் முன்னமே அவள் மேலுலகை அடைந்துவிட்டாள். மாதங்கள் சில கடந்தோடின. ரவிக்கு கிட்னியில் பாதிப்பு ஏற்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டான். அவன் உயிர் வாழ்வதாயின் கிட்னி மாற்றுச்சிகிச்சை செய்ய வேண்டும் அல்லது அவர் உயிர் வாழ முடியாது. யாராவது தமது கிட்னி ஒன்றை வழங்கினால் மாற்ற முடியும். என வைத்தியர் கூறினார். ரவியின் மனைவியோ தனக்கு தெரிந்தவர்களிடம் கேட்டுவிட்டார். யாருமே உதவி செய்யவில்லை. இச்செய்தி செல்லையாவின் காதுகளைச் சென்றடைந்தும் அவர் இடியேறு கேட்ட நாகம் போலானார். அக்கணத்திலிருந்து அவர் மகன் மீது வைத்திருந்த கோபத்தினை மறந்து தனது கிட்னியில் ஒன்றை மகனிற்கு வழங்குவதற்காக வைத்தியசாலை நோக்கி சென்று கொண்டிருந்தார்.

**ஆக்கம் :- த. மைதினி.**

**இன்ரவியூ நடந்தப்ப தூங்கிட்டு இருந்தாயாமே?**
**நீங்கதானே இண்டர்வியூவுல முழிச்சிட்டு**
**இருக்க கூடாதுன்னு சொன்னீங்க**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தினம் தினம் தவிப்பு

செவ்வாய்க்கிழமை என் செல்வப் புதல்வி பாடசாலை செல்லப் புறப்படுகிறாள். ஆட்கள் நடமாட்டமில்லாத அந்த வீதியில் தன்னந் தனியாக நிற்கிறாள். ஏழு மணிக்கு பஸ் வரும் என்றதால் ஆறரை மணிக்கு அங்கு போய் நிற்கின்றாள். அந்த பஸ் போனால் இனி பஸ் ஒன்பது மணிக்குத் தான். பாடசாலை தொடங்கும் நேரத்திற்கமைவாக ஏழு மணி பஸ்ஸில் தான் ஒவ்வொரு நாளும் புறப்படுவாள். ஏ9 வீதி மூடியதால் பொருட்களின் தட்டுப்பாடு ஒரு புறம், பாணிற்காக வரிசையில் முண்டியடித்து நிற்போர் மறு புறம், இவ்வாறு நின்ற எனது மகன் எப்படியோ பாண் வாங்கி வந்து விட்டான். காலைச் சாப்பாடு கைக்கு வந்தது ஆனால் கண்ணீரும் வந்தது. பாவம் என் செல்வி உண்ணவில்லையே பாண் வரப்பிந்தியதால் என் மகள் காலைச் சாப்பாடு தானும் உண்ணாது பஸ்ஸிற்காக காத்திருக்கிறாள்.

நானும் போக பஸ்சும் வந்தது. பாடசாலை பஸ்சை கண்ட என் பிள்ளை மனம் மகிழ்ந்து அதில் ஏறிக் கொண்டாள். முண்டியடித்துக் கொண்டு நின்ற மாணவர்களுடனே பஸ்சும் யாழ்ப்பாணம் நோக்கி நகர்ந்தது. சாப்பாட்டு பொதியுடன் திரும்பி வருகிறேன். பெற்ற மனம் நோகும் என்பதற்காக பாதி வழியில் நானே சாப்பிட்டேன். மன்னிப்பீர்களா தாயின் குரல் "பாண் குடுத்தனீங்களா," "ஓம் குடுத்தனான்".
வாய் நிறைய பொய் சொல்லி தாய் மனதை சமாதானம் செய்கிறேன். "அப்பா நேரம் போகுது நான் பள்ளிக் கூடம் போகனும். என சிணுங்கினான் பையன். அவனை பாடசாலை அழைத்துக் கொண்டு என் கால்கள் விரைந்தாலும் அடிக்கடி பாண் ஞாபகம் வந்தது. மனம் கொந்தளித்தது. சற்று நேரம் அமைதியாக இருந்தது. ஒரு மணிக்கொரு பரபரப்பு எழுந்தது. என் நெஞ்சு பதைத்தது. குண்டு வெடித்ததாம்! அவ் இடத்தில் நின்று பயந்தோடியவர்களுக்கு துவக்குச் சூடாம். வந்தவர், போனவர், வயோதிபர், வாலிபர், சந்தியில் நின்றவர், பஸ் ஓட்டுநர், நடத்துனர், பயணிகள் அனைவருக்கும் கண்ட கண்ட இடங்களில் சூடாம். இரத்த வெள்ளத்தில் கிடக்கிறார்களாம். படிக்கப் போன பதினாறு வயதுச் சிறுமியும் செத்துக் கிடக்கிறாளாம். என்றது செய்தி.

பதினாறு வயதா? பள்ளிப் பிள்ளையா? செத்து விட்டாளா? முருகா என் செய்வேன் நித்திரை விழித்துப் படித்த என் செல்வியும் இன்று யாழ் நகர் சென்றாள். ஏழுமணிக்கு பஸ்ஸில் ஏற ஆறரை மணிக்கே போனாள். பசியிலே இருந்த என் மகளுக்கு பாண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட கொடுக்கவில்லையே! மெத்தப் படிக்கும் என் புதல்வி அத்தனை பாடத்தையும் படிக்கிற ஆவலில் கன்ரீனுக்கு போய் சாப்பிட்டிருப்பாளோ? ஆடிச் செவ்வாய்க்கு அரை நேரத்துடன் பாடசாலை விட்டதால் அதையும் வாங்காமல் இருந்திருப்பாளே? பாவிகள் பசியோடு தான் என் மகளை சுட்டு விட்டனரா? இல்லை.. இல்லை.. அது என் மகளாக இருக்கக் கூடாது.

"கண்களால் காண்பதும் பொய் காதுகளால் கேட்பதும் பொய் என்ற பழமொழி ஞாபகத்திற்கு வந்தது. என் இதயம் பட பட வென அடித்தது. இப்ப நான் எப்படி யாழ்ப்பாணம் செல்வது பாசம் எனக் கொரு பலத்தைத் தந்தது. வேகமாக செல்கிறேன். வந்த வண்டிகளை மறித்தும் பாக்கிறேன். எந்த வண்டியிலும் காணவில்லை. பதினாறு வயது பிள்ளை எனது மகள் தானே உடல் நடுங்கியது, நாக்கு வரண்டது, படை வருமென்ற பயத்தினால் பிரதான வீதியால் செல்லாமல் ஒழுங்கைக்குள் என் வண்டி திரும்புகிறது. சுட்டு விடுவான் கவனம் என்று சொல்லி சிலர் சென்றனர். திரும்பிச் செல்ல முடியுமா? அந்த நேரம் அச்சம் பறந்திட யோசிக்காமல் செல்கிறேன். யாழ் நகரும் வந்தது.

மக்கள் அலைமோதும் பஸ் நிலையம் மயானம் போல் காட்சியளித்தது. பாடசாலை மாணவர்கள் எவருமில்லை. பாடசாலைகளும் மூடி விட்டனவாம். இறந்தவர் விபரமும் இல்லை. பதைபதைத்த என் இதயம் அப்போது தான் செயற்பட்டது. "இப்ப தான் உங்கடை பிள்ளை போகிறாள் எழுநூற்று அறுபதிலை நானும் பிள்ளையைப் பார்க்க வந்தனான். அவளும் உங்கட பிள்ளையோட போயிட்டாள் வாங்கோ போவம்".

தேனும் பாலும் தெள்ளிய தமிழும் கொஞ்ச அயல் வீட்டுக்காரர் கூறினார் நானும் அவரும் பத்துக்கிலோ மீற்றர்களுக்கு இருபது ஒழுங்கை சுற்றி வந்து சேர்ந்தோம். இப்படி தானே ஒவ்வொரு வீட்டிலும், நகரத்திற்கு பிள்ளைகளை படிக்க அனுப்பிவிட்டு பெற்றோர் வயிற்றில் நெருப்பைக் கட்டிக் கொண்டு இருக்கிறார்கள். என்று நான் கூற அதை ஆமோதித்த அவர் இப்படி எத்தனை நாளைக்குத் தான் செத்து பிறக்கிறதோ தெரியாது என்றார். இன்று உயிர் தப்பிய என் செல்வப்புதல்வி நாளையும் உயிர் தப்பி வர வேண்டும்

**ஆக்கம் :- செ . கல்பனா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லாவில் மரம்

அன்று தான் ஜீன் 5 உலக சுற்றபுறச் சூழல் தினம். சூழலின் மீது அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டவள் தான் ஜெயா. அவள் உயர்தரத்தில் புவியியல் பாடத்தைக் கல்வி பயிலும் மாணவி. வகுப்பறையில் ஆசிரியை சூழலில் நாம் அன்பு கொள்ள வேண்டும் என்று அவள் மனதில் தணிக்க முடியாத சூழலைப்பற்றிய அறிவை ஊட்டினார். அதனால் தான் அவள் "இன்று உலகசுற்றுப்புறச் சுழல் தினம் அல்லவா?

நான் பிறந்து 18 வருடங்கள் ஆகியும் இந்த சுழலுக்கு என்ன செய்து விட்டேன்." என்று எண்ணியபடி வீட்டின் பின்புறம் சென்று மண்வெட்டியுடன் குப்பை மேட்டில் வளர்ந்திருந்த அழகான லாவில் கன்றுகள் இரண்டைப் பிடுங்கி வீட்டின் முன் கொண்டு சென்று அவற்றை நாட்டி தண்ணீரை ஊற்றினாள். அவள் மனதில் அன்றைய தினம் ஏற்பட்ட சந்தோசத்திற்கு அளவேயில்லை நட்டது தான் மிச்சம் நிமிடத்திற்கு நிமிடம் அதையே போய்ப் பார்த்தாள். எவ்வளவு அழகாக சிரிக்கின்றன. இக்கன்றுகள் "ஆ....... ! ஒவ்வொரு மனிதனும் ஒவ்வொரு மரங்களை நடுவானால் ஏன் இந்த சுழல் பிரச்சனைகள் என்று அவள் மனதில் ஆயிரம் கேள்விகள்.

"ஜெயா.............." என கூப்பிடும் சத்தம் கேட்க "வாறேன்....." என கூறியவளாக "அம்மா நான் இன்று மரத்தை நட்டு விட்டேன். நான் இன்று இந்த பூமிக்கும் என் சூழலுக்கும் நன்மை செய்துவிட்டேன்." "அடிபோடி பைத்தியக்காரி இருப்பதே இரவல் வீடு அதுக்குள்ள உனக்கு மரம் வேண்டிக் கிடக்குது" ஏன் அம்மா அப்படி சொல்கிறாய் யார் வீடாக இருந்தால் என்ன இது என் பூமி நான் என் பூமிக்கு இன்று நன்மை செய்து விட்டேன்.

"ஜெயா அதை நான் சொல்லவில்லை நாங்க இந்த வீட்டை விட்டுப் போனால் பிறகு வருபவர்கள் இதைத் தறித்தா என்ன செய்வாய்." அதை பிறகு பார்ப்போம் எனக் கூறினாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்கள் கடந்து வாரங்கள் மாதங்களாகி வருடங்களுமாகின. வீட்டுக் காரன் "நீங்கள் வீட்டைவிடனும் நீங்கள் தர்ற வாடகை காணாது தயவு செய்து எழும்புங்கோ" எனக் கூற அவள் தாயும் தலையாட்டுகிறாள். மூட்டை முடிச்சுக்களைத் தூக்கிக்கொண்டு வாசலை வெளியே கடந்து வர அவள் வைத்த லாவில் மரம் கண்முன் விருட்சமாய் நிற்கின்றது. அவள் கால்கள் மரத்தை நோக்கி நகர்கின்றன. பெருமூச்சு விடுகிறாள். தாய் சொன்ன வார்த்தைகள் காதில் சன்னமாய் கேட்கிறது. அவளால் என்ன தான் செய்ய முடியும். அவள் அந்த வீட்டை விட்டுமல்லாமல் யாழ்ப்பாணத்தை விட்டே நகருகிறாள்.

பத்து வருடங்களின் பின் தன் ஊர் நோக்கி மீண்டும் நகருகிறாள். அவள் நினைவெல்லாம் லாவில் மரத்தை நோக்கியே என் லாவில் உயிரோடு இருக்கிறதா? இல்லை தறித்து விட்டார்கள்! வாகனமும் அவளுடைய பழைய வீட்டின் கேற்றில் நிற்கிறது. கால்கள் வேகமாக முற்றத்தை நோக்கி நகருகிறது. அவள் நட்ட லாவிலை கண்தேடுகிறது. அங்கு அவள் கண்ட காட்சி அவளை வாட்டுகிறது. ஏனெனில் அவள் நட்ட லாவிலை காணவில்லை. அதைத் தறித்துவிட்டார்கள். அதில் இப்பொழுது கட்டிடம் ஒன்று வளர்ந்து நிற்கிறது.

**ஆக்கம் :- ஜெ . தாரணி**

**பிச்சைக்காரர் 1: கல்யாணம் பந்தியிலே உட்காந்து சாப்பிட்டேன்னு சொல்றியே..... உன்னை யாரும் விரட்டவில்லையா?**

**பிச்சைக்காரர் 2: எல்லோரும் என்னைப் பெண்ணின் அப்பா என்று நினைத்துப் பேசாமல் இருந்து விட்டார்கள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் ஒரு வெள்ளைச் சட்டை

"லட்சுமி லட்சுமி" என்று கிணற்றடியில் நின்று கத்தினான் ராஜா. லட்சுமி ராஜாவின் மனைவி அவர்கள் இருவரும் காதலித்து திருமணம் செய்து வாழ்பவர்கள். ராஜா ஒரு கம்பனியில் வேலை செய்கிறான். அன்று அவனுக்கு அலுவலகத்தில் ஒரு முக்கியமான கூட்டத்திற்குச் செல்வதற்காகவே அவசர அவசரமாக அலுவலகம் செல்ல வேண்டும் என்பதற்காக ஆயத்தமாகிக் கொண்டிருந்த போது குளிக்க சென்ற இடத்தில் துடைப்பான்னியை மறந்து விட்டு சென்றான். அதனை எடுப்பதற்காகவே லட்சுமியை அழைத்தான். லட்சுமி அமைதியான பெண் நன்றாகவும் சுறுசுறுப்பாகவும் வேலை செய்பவள். உயர் வகுப்புவரை படித்தவள் உயர் வகுப்பு படித்து முடித்தவுடனேயே இருவரும் திருமணம் செய்து கொண்டனர். அத்துடன் அவள் படிப்பினை நிறுத்தி விட்டாள் தனது கணவன் அழைத்தது அவள் காதில் கணீர் என்று ஒலித்தது ஓடிச் சென்று என்ன என்று கேட்டு அவன் கேட்ட பொருளினை எடுத்துக் கொடுத்து விட்டு பின்பு தான் செய்த வேலையை மீண்டும் தொடர்ந்து செய்தாள். தனது கணவன் அலுவலகத்திற்கு செல்லும் மட்டும் பம்பரம் போன்று சுற்றித் திரிந்தாள்.

தனது கணவனை அலுவலகத்திற்கு அனுப்பி விட்டு வந்து திரும்பிப் பார்த்தாள் தனது மகன் பாடசாலை போகாது நிற்பதனைக் கண்டு கடும் கோபம் கொண்டு "ஏய் குமார் ஏன் இன்னும் பாடசாலைக்குப் போகாமல் இருக்கிறாய்" என்று கேட்டாள் அதற்கு குமார் "அம்மா இன்று எங்கள் பாடசாலையில் தமிழ் தின விழா அதற்கு வரும் போது அம்மா, அப்பாவையும் கூட்டிக் கொண்டுவரச் சொல்லி அதிபர் சொன்னவர்" என்றான். அதனால் தான் பாடசாலைக்கு போகவில்லை என்றான் அதற்கு லட்சுமி "நான் வாறன்" என்று சொல்லி குமாரை கூட்டிக் கொண்டு சென்றாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமாருடன் சென்ற லட்சுமி பாடசாலையைக் கண்டதும் அவள் கண்கள் கலங்கின இதை கண்ட குமார் "ஏன் அம்மா அழுகிறாய்" என்றான அதற்கு லட்சுமி "இல்லையடா மகனே நானும் இந்தப் பாடசாலையில் தான் படித்தனான்" என்றாள் விழா நடை பெறும் மண்டபத்திற்குச் சென்று அமர்ந்து கொண்டாள் . மண்டபத்தில் இருந்தவாறே மண்டபத்தையே சுற்றிச் சுற்றி பார்த்தாள் தான் படித்த காலத்திற்குப் பிறகு அன்று தான் அவள் பாடசாலைக்குச் சென்றிருந்தாள் அவளுக்கு தான் படித்த அந்த நாட்கள் எல்லாம் கடல் அலை போல் வந்து அவள் மனதை மோதின. லட்சுமியும் வாணியும் உயிர் நண்பிகள். இருவரும் மற்றவர்களைக் கேள்வி கேட்டு மடக்குவதிலும், நக்கலடிப்பதிலும் மகா கெட்டிக்காரர்கள். பாடசாலையில் இருவரும் எல்லாத்துறைகளிலும் சிறந்து விளங்கினார்கள். லட்சுமியை விட வாணி மிகவும் அழகானவள். இவர்களது வகுப்பில் படித்த சக மாணவர்கள் இவளை காதலிப்பதாக கூறும் போதெல்லாம் "என் காதலனிடம் கேட்டுச் சொல்லுறன்" என்று விளையாட்டாக கூறுவாள். மாணவர்களாக இருக்கும் போது எவ்வளவு சுதந்திரம் அம்மா, அப்பாவிடம் புத்தகத்திற்கு, பேனாவிற்கு, கொப்பிக்கு என்று கூறி காசு வேண்டி அதில் அரைவாசியை கச்சான் கடைக்கு கொடுப்பதே இவர்களது வழக்கம்.

இவ்வாறாகப் பள்ளிப் பருவத்தை ஆனந்தமாகவும், கலாட்டாவாகவும் அனுபவித்த அவர்கள் வாழ்வில் பெரும் சுனாமி வந்து தாக்கியது போல் இருந்தது அந்த நிகழ்வு. ஒருநாள் இருவரும் தமது வகுப்பு நண்பியின் பிறந்த நாள் வைபவத்திற்குச் சென்று வரும் வழியில் மோட்டார் வண்டியுடன் வாணி மோதியதில் அவளது தலையில் பலமாக அடிபட்டு விழுந்து விட்டாள். தனது நண்பியின் தலையிலிருந்து அதிக இரத்தம் வருவதைப் பார்த்த லட்சுமி மயங்கி விழுந்தாள். இவர்கள் இருவரையும் பாதையில் நின்றவர்கள் வைத்தியசாலையில் சேர்த்தனர். வாணி அவசர சிகிச்சை பிரிவில் சேர்க்கப்பட்டாள். மூன்று நாட்களின் பின் வைத்தியர் வந்து வாணிக்கு கோமா நிலையாகி விட்டது என கூறினார். இதை கேட்ட லட்சுமி சிறகு உடைத்த பறவை போல உணரப்பட்டாள். நாட்கள் நிமிடங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போல் நகர்ந்தன பள்ளியின் இறுதிப் பரீட்சையும் நெருங்கியது ஆனால் வாணியிடத்தில் எது வித மாற்றமும் தெரியவில்லை. வீட்டாரின் கவனிப்பாள் லட்சமியின் மனம் தேறிக்கொண்டிருந்தது. பரீட்சைக்கு தோற்றிய லட்சுமி பெரிதாக தேறவில்லை. வாணியின் நிலை நாளுக்கு நாள் மோசமாகிக் கொண்டே போனது. அன்று பாடசாலையின் கடைசி நாள். அனைவரும் ஆட்டோகிராபில் அவரவர் முகவரியை பதித்து சென்றனர். லட்சுமியாலோ இவை ஒன்றையும் எற்றுக் கொள்ள முடியவில்லை. கண்ணீருடன் கடைசி நாளும் விடைபெற்றுச் சென்றது. பரீட்சை மறுமொழியும் வரலட்சுமிக்கும் திருமணமும் நடை பெற சரியாக இருந்தது.

"அம்மா அம்மா" என்ற ஒரு குரல் லட்சுமியை உலுக்கியது. அது அவள் மகன் குமார் "என்னடா" என்று கேட்டாள். "அம்மா எல்லாம் முடிந்து போட்டுது வாங்கோ அப்பா வந்து பாத்துக் கொண்டு நிற்கப் போறார்" என்றான். "என்னடா சொல்லுறாய் விழா முடிஞ்சு போச்சா? இப்ப தானே நாங்கள் வந்தனாங்கள்" "இல்லை அம்மா நாங்கள் வந்து மூன்று மணித்தியாலம் ஆயிற்று வாங்கோ அம்மா போவோம்" என்றான் குமார். அப்போது தான் அவளுக்கு விளங்கியது நான் விழாவில் இல்லை எனது பள்ளி வாழ்க்கையில் ஊறிப்போய் இருந்தனான் என்று. வீடு நோக்கிச் சென்றவள் எதோ சோகத்தில் மூழ்கியவள் போல் காணப்பட்டாள்.

அப்போது யோசிக்கும் போது தான் அவளுக்குப் புரிந்தது. தான் ஒரு குடும்பம் என்ற வட்டத்துக்கு அடைக்கப்பட்ட பறவை என்று பள்ளி பருவத்தில் இருந்த சந்தோசம், சுதந்திரம் ஒன்றுமே இப்போது இல்லையே என்று எண்ணியவள். பெரு மூச்சு விட்ட படியே இப்போது எனக்கு முன்னால் கடவுள் வந்து என்ன வரம் வேண்டும் என்று கேட்டால். நான் வேண்டுவது ஒன்று தான். என்னவென்றால் எனது பள்ளி வாழ்க்கையையும் நண்பி வாணியையும் உயிரோடு திருப்பித்தா என்று வேண்டுவேன்.

**ஆக்கம் :- சோ . நிசாந்தினி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கையில்

அன்று ஒரு வெள்ளிக்கிழமை அவசர அவசரமாக தயாராகிக் கொண்டிருந்த சீனுவைப் பார்த்து எங்கே செல்கின்றார்கள் என்று ராகவி கேட்டாள். நான் எங்கே சென்றால் உனக்கு என்ன வாயை மூடிக்கொண்டு உள்ளே போ என்று அவளை பார்த்து பேசினான். இவர்கள் இருவரும் காதல் திருமணம் செய்து கொண்டவர்கள். ஆனால் ராகவி வறிய குடும்பத்துப் பெண்ணாகவும் படிக்காதவளும். ஆனால் சீனுவோ படித்தவனும் பணக்காரனும் அவளின் அழகைப் பார்த்து திருமணம் செய்து கொண்டான். இவர்களது வாழ்வு வசந்தமாக இருக்கையில் சீனுவிற்கு பின்பு தான் தெரிந்தது இவள் ஏழை என்றும் படிக்காதவள் என்றும் சீனுவும் ராகவியும் ஒன்றாக செல்லும் போது எல்லோரும் பார்த்து படித்த கதாநாயகன் கதாநாயகி வருகின்றார்கள் என்று கேலி செய்த போது சீனுவிற்கு வேதனையாக இருந்தது. இதனை தாங்கமுடியாமல் தன் தகுதிக்கு ஏற்றவள் அல்ல என்று எண்ணி விவாகரத்து பத்திரத்தை அவளிடம் கொடுத்து இதில் கையொப்பம் போடு எனக்கூற அவளும் ஏதும் அறியாதவளாக அப்பத்திரத்தில் கையொப்பம் இடுகின்றாள். இதனை வேண்டிக்கொண்டு சீனு அவளிடம் நீ உன் தந்தை வீட்டிற்கு சென்று இரு என்று கூறினான்.

மறு நாள் காலை ராகவியின் வீட்டுக்கதவை யாரோ அவசர அவசரமாக தட்டும் சத்தம் கேட்டு திறந்து பார்த்தால் அங்கு நின்றது கணவன் வீட்டில் வேலை செய்யும் வேலைக்காரன். அந்த வேலைக்காரனுக்கு ராகவி மீது அன்புகொண்டிருந்த காரணத்தினால் அவளுக்கு ஏற்படவிருக்கும் தீங்கினை அவளிடம் கூற வந்தான். ராகவி என்ன என்று கேட்கும் போது உனது கணவனுக்கும் வேறொரு பெண்ணிற்கும் திருமணம் நடை பெறுகின்றது என்று கூற ராகவி அவசர அவசரமாக திருமண மண்டபத்திற்கு சென்று இந்த திருமணத்தை நிறுத்துங்கள் என்று கூறி தன் கணவனிற்கு அருகில் சென்று முதல் மனைவி உயிரோடு இருக்கையில் இன்னொரு பெண்ணை திருமணம் செய்வது குற்றம் என்றாள். அதற்கு சீனு கோபம் கொண்டு நீ படிக்காதவள். உனக்கு என்ன தெரியும் சட்டம் என்று விவாகரத்துப் பத்திரத்தில் எடுத்துக் காண்பிக்கையில் அங்கிருந்த ஒரு பெரியவர் அதனை வாங்கி படித்து ஏனம்மா உனக்கும் அவனுக்கும் எதுவித சம்மதம் இல்லையென்று கையொப்பம் வைத்து கொடுத்து விட்டாயே பின்பு ஏன் வந்து இத்திருமணத்தை நிறுத்துகிறாய் என்று கூறுகையில் அவளுக்கு தலை மேல் இடி விழுந்தது போலிருந்தது. என்ன ஐயா கூறுகின்றீர்கள். இவர் கையொப்பம் இடு என்று கூறுகையில் ஒன்றும் கேட்காமல் அறியாமலும் இப்பத்திரத்தில் கையொப்பம் இட்டு விட்டேன் என்று கூற இதை அனைத்தையும் அறிய நீ படிக்கவில்லை என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீனு கூறுகின்றான். ராகவிக்கு முன்பாகவே மறுதிருமணம் நடைபெற்றது. இதனைத் தாங்காது அவள் வீட்டிற்கு வேதனையுடன் அறைக்குள் சென்று கதவைச் பூட்டிக்கொண்டாள். இதனைக்கண்ட தந்தை கதவைத்தட்டினார். சிறிது நேரத்தின் பின்பு கதவை திறந்து ஒரு பையுடன் வந்து தந்தையை பார்த்து நான் சித்தப்பா வீட்டிற்குச் செல்கிறேன் என்று கூறி சென்றாள். அவளுடைய சித்தப்பா நகரப்புறத்தில் வசிக்கிறார்.

இரண்டு வருடங்களுக்குப் பின்பு சீனு மனைவியுடன் சந்தேசமாக வாழ்ந்து கொண்டிக்கையில் விதி அவர்களுடைய வாழ்க்கையில் விளையாடிவிட்டது. அவர்களுடைய பணம், வீடு, வசதிகள் அனைத்தையும் இழந்து உண்ண உணவின்றி இருக்கையில் சீனுவின் நண்பனிடம் சென்று உதவி கேட்க அவன் எனது ஊரில் ஒரு வங்கியுள்ளது. அங்கு சென்று பண உதவி கேள் அவர்கள் தருவார்கள் என்று கூறினான். அவனும் சென்று அங்கு கேட்கும் போது அவர்கள் ஒரு உத்தியோகத்தில் இருப்பவரின் கையொப்பம் வேண்டும் என்று கூற அவன் யோசிக்கையில் நான் கையொப்பம் இடுகிறேன். என்று ஒரு குரல் கேட்க எல்லோரும் எழுந்து வணக்கம் கூற சீனு திரும்பிப்பார்த்து திகைத்தான். அந்த குரல் ராகவியின் குரல் அவள் அருகில் வந்து கையொப்பம் இட்டு விட்டு சென்றாள். சீனு அவர்களிடம் கேட்டபோது இவர்தான் எங்கள் வங்கியின் முதலாளி என்று கூறினார்கள். சீனு ராகவியுடன் கதைக்க உள்ளே சென்று நீ எவ்வாறு முதலாளியாக வந்தாய் என்று கேட்க அவள் நீ மறுதிருமணம் செய்து கொண்டதும் நான் இறப்பதற்கு என்ன கோழையா என்று நினைத்து சித்தப்பா வீட்டுக்கு சென்று படித்தேன். அங்கும் எனக்கு விதி விளையாடி என் சித்தப்பாவும் சித்தியும் ஒரு விபத்தில் இறந்துவிட்டார்கள். அவர்களுடைய சொத்து அனைத்தும் எனக்கு வந்தது. அதனைக் கொண்டு நான் படித்து இன்று வங்கி முதலாளியாகவுள்ளேன் என்று கூறிவிட்டு அவள் சென்றாள்.

மறுநாள் காலை சீனு ராகவியின் வீடு சென்று நான் உன்னை மனைவியாக ஏற்றுக்கொள்கிறேன். நீ என்னுடன் வா என்றான். அதற்கு அவள் நீ விரும்பி திருமணம் செய்து கொண்ட என்னை ஏமாற்றிவிட்டாய். நல்ல ஒரு கணவனாக இருந்தால் உன் மனைவி படிக்கவில்லை என்று நீ ஏமாற்றி இருக்கமாட்டாய் என்று கூற அம்மா என்று கூறி ஒரு குழந்தை வந்தது. சீனு அதனை பார்த்து யார் அக்குழந்தை என்று கேட்டான். அதற்கு ராகவி உங்களை மாதிரி ஒரு ஆண் வர்க்கத்திற்கு என்னை மாதிரி ஒரு பெண் கிடைக்கக் கூடாது. என்பதற்காக நான் அனாதைப் பிள்ளைகளையும், படிக்க வசதியற்றவர்களையும் சேர்த்து ஒரு பெண்கள் அநாதை இல்லம் நடத்தி வருகின்றேன். என்று அக்குழந்தையை துாக்கியபடி நீங்கள் போகலாம் என்று கூறி விடைபெற்றுச் சென்றாள்.

**ஆக்கம் :- ச . யோகிதா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரிசை

அந்திவானத்தில் சில் என்ற மெல்லிய சுழல் காற்று வீச சூரிய ஒளியானது எங்கும் கதிர்களை விரித்துப் பட்டுத் தெறித்தது. 60 வருடம் வாழ்ந்து உடல் களைத்து தலைமுடி பழுத்து தாடி வளர்த்த ஒரு கிழவர். அவர் தான் முருகேசன். ம்........ ம்......... என்று செருமியபடி அதிகாலை நிசப்தமான வேளையில் தனது வீட்டுக்கதவைக் கடக்க முயலும் போது அவரை எதிர் நோக்கி ஒரு குரல் அழைக்க அவர் திரும்பும் வேளையில் இளமை ததும்பிய முகம்மலர்ந்த அரைக் காற்சட்டையோடும், வெனியன் அணிந்து நீண்டு வளர்ந்த முறுக்கு மீசையுடனும் கையிலே பத்திரிகையுடனும் வந்த சின்னாவைக் கண்டார்.

சின்னா மகிழ்ச்சியுடன் ஐயா இன்று பத்திரிகை பார்த்தீர்களா? என்று கேட்க முருகேசன் பொக்கைவாயைத்திறந்து இல்லை மகனே எனப் பதில் அளிக்க சின்னா தனது கையில் இருந்த பத்திரிகையை கொடுக்கும் பொழுது முருகேசு பத்திரிகையில் என்ன சங்கதி இருக்குது என்று கேட்க சின்னா உடனே பத்திரிகையின் இரண்டாம் பக்கத்தை விரித்துக் காட்ட எனக்கு எங்க தெரியப்போது கண்ணாடியையும் விட்டுட்டு வந்திட்டன். நீயே படிச்சு என்ன இருக்கென்று சொல்லன். என்று கூற சின்னா பத்திரிகையில் இருந்த சங்கதியைத் தெளிவாகக் கூற அந்தக் கதையைக் கேட்டதும் வீட்டுக்குள்ளே சென்ற முருகேசு கையில் குடையுடனும், சுருக்குப்பையுடனும் வெளியே வந்தார்.

அவர் பாதை ஒரமாய் நடக்க ஆரம்பித்தார். வெகுதூரம் நடந்துவந்துகொண்டிருந்த போது சாலையெங்கும் சனம் கூட்டமாக நின்றது. என்ன என்று பார்க்கும் பொழுது சங்கத்துவிதானையார் இன்னமும் வரவில்லை என்றதும் களைத்துப் போன முருகேசு அருகில் உள்ள மரத்தடியில் உட்கார்ந்து கொண்டு அவருடைய கடந்த கால வாழ்க்கையை நினைக்க ஆரம்பித்தார். அவர் குடும்பமோ தாய், தந்தையுடன் சேர்ந்து ஐவராய் இருந்த பொழுது எந்த ஒரு பிரிவினையும் இன்றி குறிஞ்சிப்பூ ஒரு வருடத்ததில் பூத்து மறைவதைப் போல அவரது குடும்பத்தில் ஒரு தடவை அல்லது இரண்டு தடவைகள் சிறுசிறு சண்டைகள் பிடித்து செல்லமாகவும், பெற்றோரின் அரவனைப்பிலும் வாழ்ந்து வந்தனர்.

அவரது தங்கையின் திருமணத்திற்காக எல்லா ஆயத்தமும் செய்து வெகு சிறப்பாக திருமணம் நடக்க. பெண்ணின் சீதனமாக அவர்களிடம் உள்ள சொத்து பத்துக்களை கேட்டவுடன் முருகேசு குடும்பத்தில் முத்த பிள்ளையாக இருந்தாலும் தனது தங்கை சுகமாய் இருக்க வேண்டும் எனும் காரணத்தினால். அவர்களிடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளனவற்றை கொடுத்து திருமணம் முடித்து வைத்தார்கள். என்று நினைத்துக் கொண்டிருக்கும் போது கூட்டத்தில் நின்ற ஒருவன் ஐயா சங்கத்து விதானையார் வந்துவிட்டார். உங்களிற்குரிய இலக்கத்தைப்பெற்றுக் கொள்ளுங்கள். என்று கூறிய உடன் முருகேசு எழுந்து இலக்கத்தை எடுத்துக் கொண்டு மீண்டும் வந்து உட்கார்ந்து பழையதை நினைக்க ஆரம்பித்தார்.

மணம் முடித்தகையுடன் இவர்கள் புறப்பட்டு யாழ்ப்பாணத்தில் உள்ள கொக்குவிலுக்கு வந்தார்கள். அங்கு அவர்களுக்கு ஏற்றமாதிரி ஒரு வீடு வாங்கி வசதியாக வாழ்ந்து கொண்டிருந்தாலும் எவ்வளவு வறுமை வந்தாலும் ஒரு நேரத்தில்லாவது சாப்பிட்டு மகிழ்ச்சியடைந்திருப்பார். நாங்கள் வாழ்ந்த பழைய வாழ்க்கையைப் பார்த்து ஊர் மக்களினுடைய கண்பட்டது போல துளிர்த்த மரம் படிப்படியாக பட்டுப் போக ஆரம்பிக்க அவர்களது குடும்பம் சீரழிந்து சின்னா பின்னமாவதைக் காணக்கூடியதாக உள்ளது. தாய் தந்தையுடன் இருந்து உண்டு, உறங்கி இருந்தது போல் இந்த காலம் இல்லை.

ஏனெனில் வறுமை எனும் தலைவன் கொடிபிடித்து ஒவ்வொரு வீடுகளிலும் தாண்டவம் ஆடுகின்றான். என்பதை நினைத்துப் பார்க்க சின்னா உடனே வந்து ஐயா உங்களினுடைய இலக்கம் என்ன? இலக்கத்தின் படி எல்லாரையும் வரிசையில் நிற்கட்டுமாம். என்றதும் முருகேசு எழுந்து வரிசையில் நிற்க ஆயத்தமாகும் போது 101வது ஆளாக முருகேசு நின்று கொண்டிருநதார்.

அவருடைய பழைய வாழ்க்கையின் இன்னும் ஒரு பகுதியாக இருக்கலாம். எப்போதாவது சிறுவயதில் இருந்து வளர்ந்த பிறகு எதற்காவது இவ்வாறான ஒரு வரிசையில் நின்றிருக்கின்றோமா? இப்பொழுது மனிதனின் வாழ்க்கை வரிசை என்ற வட்டத்தினுள் அடங்கிவிட்டது. என்று நினைத்துக் கொண்டு சங்கத்து விதானையார் வரிசையில் நின்றவர்களுக்கு கொடுக்க ஆரம்பித்தார். கொடுத்துக் கொண்டிருக்கும் போது சூரியனானவன் தன்னுடைய கதிர்களை மறைத்து இருளினை பரப்ப ஆரம்பமாகிய வேளையில். முருகேசு இன்று சங்கத்து முதலியார் தரமாட்டார் போய்விட்டு நாளைக்கு நேரத்திற்கு வந்தால் வேண்டலாம். என்று எண்ணிக்கொண்டு வரிசையை விட்டு வீடு திரும்ப பாதங்களை முன்நோக்கி வைத்து நடக்க ஆரம்பித்தார். சில வினாடிப் பொழுதில் வீடுவந்தடைந்தார்.

முருகேசு வீட்டின் திண்ணையில் உட்கார்ந்திருந்த வேளை மருமகள் தேனீரை முருகேசனிடம் கோபமாக நீட்டி என்ன இன்றும் சுத்தல் தானோ. பத்திரிகை பார்த்தால் தானே தெரியும் இருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையை கொஞ்சம் சிந்தித்துப் பார்த்தா எல்லாம் புரியும் என்று அவளை மறந்து கூறிய வார்த்தைகளைக் கேட்ட முருகேசு தேனீரைக் குடித்துவிட்டு அந்த இடத்திலேயே நித்திரையாகி விட்டார். அவருடைய நித்திரையிலும் வறுமை தாண்டவம் ஆடிக்கொண்டிருந்தது. அவர் விளித்துப் பார்த்தார் சூரியன் கதிர்களைப்பரப்பவும் காகங்கள் கரைந்து மெல்லிய பனி பெய்து கொண்டிருந்தது. அதனைப் பார்த்த முருகேசு ஐயோ விடிஞ்சிற்று என்று மனதில் எண்ணிய வண்ணம் முகத்தை அலம்பிக் கொண்டு தேனீரைச் சக்கரையுடன் தொட்டுக்குடித்துவிட்டு கையில் குடையுடனும், சுருக்குப் பையுடனும் செல்ல ஆரம்பித்த போது மருமகள் கோபமாய் கறி ஏதாச்சும் வரக்குள்ள வாங்கிற்று வாங்க என்று பலத்த குரலில் சொல்ல அதைக் கேட்டும் கேட்காததைப் போல வீதி ஓரத்தில் நடக்க ஆரம்பித்தார்..

பின்னர் அவர் மீண்டும் சங்கக்கடையை அடைந்தார் அப்பொழுது அங்கு தொண்ணூற்றியெட்டாவது இலக்கம் போய்க் கொண்டிருந்தது. விரைவாக வந்த முருகேசு இலக்கத்தில் இருக்க வேண்டிய இடத்தில் நிற்பகற்காக வந்து பின்னால் உள்ளவர்களை இடித்து தள்ளிக் கொண்டு இலக்கத்தின் வரிசையில் நிற்க நண்பகல் பன்னிரெண்டு மணி கடிகாரத்தைக் காட்ட சங்கத்து முதலியார் மதிய உணவிற்காக கடையை இழுத்து மூடி அடைச்சிற்று சைக்கிளை எடுத்துக் கொண்டு செல்வதைக் கண்ட முருகேசு மனிதனின் நிலை இவ்வாறு ஆகிவிட்டது என்பதை நினைத்து சங்கத்து முதலியார் வரும் வரை காத்துக் கொண்டிருந்தார்.

**ஆக்கம் :- ச. தருமிளாதேவி**

**"உங்க கதாசிரியர் படத்துக்கு படம் கனல் பறக்கு வசனங்களை எழுதறாரே எப்படி?"**

**"இதற்கு முந்தி வெல்டிங் வேலை செய்துகிட்டு இருந்தவராச்சே"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விண்ணுலக நட்பு

இனிமையான மாலை வேளை கதிரவன் தன் கதிர்களில் சிலவற்றினின்று வெப்பத்தைக் குறைத்ததினால் இதமாக காணப்பட்டது. கடிகாரத்தின் முட்கள் வேகமாகச் சுழன்று கொண்டிருந்தன ஐந்துமணியாகியது. கோவில் வீதியில் உள்ள ராஜாவின் இல்லம் அமாக்களமாகக் காணப்பட்டது. ஏதோ பெரிய கொண்டாட்டம் நடப்பதுபோல் ஒரே அமளிதுமளிதான். அந்த அளவிற்கு ஒரு பெரிய கொண்டாட்டமோ இல்லை அது ஏனென்றால் பெண்பார்க்கும் நிகழ்வுதான். அட இதற்குத்தானா இவ்வளவுபெரிய பந்தாவும் என்று எண்ணத்தோன்றும் அந்தப் பந்தா எல்லாம் சுஜியால் தான்.

யார் இந்த சுஜி? அவள்தான் ராஜாவின் நண்பி கல்லூரி காலத்து நட்பு இன்று கலியாண வேளையிலும் நிலைத்திருக்கின்றது. இதனை என்வென்று சொல்லுவது நட்பு என்றா? அல்லாவிடில் உயர்ந்த நட்பு என்றா? அந்தளவிற்கு அவர்கள் இருவரது நட்பும் ஆழமாகக் காணப்பட்டது. "நண்பனிற்குப் பெண்பார்ப்பதற்க்கு நண்பிக்கு எவ்வளவு ஆர்வம் என்று பாரேன்" என ஒரு குரல் கேட்டது. அவ்வளவு தான் சுஜி அவ்விடத்திற்க்கு எப்படிவந்தாள் எங்கு நின்றாள் என எதுவுமே தெரியாது. வந்தவள் சும்மாவிட்டாளா? என்னுடைய நண்பனுக்கு நான்தானே பெண் பார்ப்பதற்க்கு முன்னிற்க வேண்டும்.

நீங்களா நிப்பீங்க என்றாள். அம்மாடி பெத்தவா என்னையே விடமாட்டேங்கிறியே ஏன் ஒருக்கா என்னையும் விடேன்டீம்மா நான் ஏதாச்சும் செய்கிறேன். இல்லையம்மா இனிமேல் உங்க மருமகவந்திடுவா. அப்புறம் அவளுக்கு நீங்கதானே எல்லாம் செய்யவேண்டிவரும். அதற்காகத்தான் இன்றிலிருந்து கலியாணம் நடக்கும் வரைக்கும் நானேதான் எல்லாம் செய்வன் சரியா. இல்லடீம்மா இல்லம்மா நீங்க எதுவுமே பேசாதீங்கம்மா ஏதாது பேசிக்கொண்டு நின்றீகளென்றால் ராஜாவோட நான் தனியாகச் சென்று உங்க மருமகளப் பார்த்து விட்டு வந்திடுவேன். அதோட கலியாணத்திற்க்கும் நாள் குறித்துவிட்டு ஓரேயடியா கலியாணத்தையும் நடத்தி வைத்து விடுவேன் இதற்கெல்லாம் சம்மதம் என்றால் நீங்க தாரளமா கதையுங்கம்மா ஐயோ என்ன பிள்ள இப்படிச் சொல்லிட்டாய் எப்பிடீம்மா நீ முதலில என்னுடைய பிள்ளையை கூட்டிக் கொண்டுவா? நான் பேசாமல் இருக்கிறன் ராஜாவின் தாயின் அருகில் இருந்தவர் ஒருவர் எதுவுமே பேசாது வாயை கைகளினால் மூடிய படி இருந்தார். சுஜி அவரைப் பாரத்து என்னங்க அப்பா எதுவுமே பேசாமல் இருக்கின்றீகள் என்றாள். நான் எதுவுமே பேசவில்லையம்மா நீ உன்ட அம்மாவுக்கு சொன்னவற்றிலிருந்து நானும் சிலவற்றை எனக்கும் எடுத்துக் கொண்டேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ எதுவுமே எனக்கு சொல்ல வேண்டாம் நீ போய் முதலில உன்னோட நண்பனைக் கூட்டிக் கொண்டுவாம்மா. நேரமாயிட்டே இருக்குது சரி அப்பா என்றாள். அப்பாதான் நல்ல அப்பா என்று கூறிக்கொண்டே அறையினுள் சென்றாள். சிறிது நேரத்தின் பின் ராஜாவுடன் வந்தாள் அவனின் அம்மாவும் அப்பாவும் ராஜாவைப் பார்த்து சந்தோசப்பட்டார்கள் ராஜாவின் அம்மா, அப்பா, சுஜி மற்றும் சில உறவினர்களுடனே புறப்படலாயினர்.

நகரின் மத்தியிலிருக்கும் ஓர் வீட்டினை வாகனம் சென்றடைந்தது. அது தான் நித்தியாவின் இல்லம் நித்தியாவைத்தான் ராஜாவிற்க்குப் பெண் பார்ப்பதற்காக எல்லோரும் சென்றுள்ளார்கள். எல்லோரையும் பெண் வீட்டார் இனிதே வரவேற்று வீட்டினுள் அழைத்துச்சென்றார்கள். பெண்பார்த்தல் நிகழ்வு இனிதே நடைபெற்றது. நித்தியாவை எல்லோருக்கும் நன்றாகப் பிடித்துப் போனது கலியாணத்திற்கு நாள் குறிக்கப்பட்டது. பெண்வீட்டாருக்கும் ராஜவைப் பிடித்துப்போனதால் நேரம் மிச்சமானது.

கலியாணத்திற்கு இன்னும் முற்பது நாட்களே காணப்பட்டது. ராஜா வீட்டில் எல்லோரும் குதுாகலமாகக் காணப்பட்டார்கள் ஆனால் நித்தியா வீட்டிலேயோ பெரிதாக எவருக்கும் சந்தோசம் இருப்பதாகத் தெரியவில்லை. எல்லோரும் ஏதோ ஒரு கலவரத்துடனே காணப்பட்டார்கள். சிறிது நாட்களின் பின் ராஜா வீட்டிற்கு தொலைபேசி மூலமாக இந்தக் கலியாணத்தை நிறுத்திவிடுவோம். என்று கூறினார்கள் இதனால் ராஜாவும் அவனது பெற்றோரும் மிகுந்த கவலை அடைந்தார்கள். அதனை விட சுஜிக்குத்தான் பெரும் தாக்கம். தானே முன்னின்று ஏற்பாடு செய்த இந்தத் திருமணம் தடைப்பட்டு விட்டதே என்பதுதான் காரணம். சுஜி உடனடியாக நித்தியாவின் வீட்டிற்க்குச் சென்றாள். அங்கு நித்தி மட்டும் தான் இருந்தாள். சுஜியை வரவேற்றாள் சிறிது நேர மௌனத்தின் பின் சுஜி பேசினாள் ஏன் நித்தி உங்களுக்கு ராஜாவைப் பிடிக்கவில்லையா? என்றாள் எனக்குப் பிடிச்சிருக்கு ஆனா என்று இழுத்தாள் என்ன ஆனா சொல்லுங்க என்றாள் இல்ல என்னோட உறவினர்கள் எல்லாம் நீங்களும் ராஜாவும் எல்லா இடங்களிற்கும் ஒன்றாக செல்வதையும், ஒன்றாக இருப்பதையும் விரும்பவில்லை அதனால் தான் அவங்கஉங்கள் நட்பைத் தவறாகப்புரிந்து கொண்டு விட்டார்கள்

இன்று அவர்கள் அவ்வாறு நினைத்தது நல்லதிற்காகத்தான் என்று இப்போது எனக்கும் புரிகின்றது. ஏனென்றால் திருமணத்திற்க்கு முன்னரே உறவினர்களுக்கு இந்த எண்ணம் எழுந்தது போல் திருமணத்தின் பின் எல்லோருக்கும் எழாது என்பதில் என்ன நிச்சயம்? தயவு செய்து இதனை இத்துடனே விட்டுவிடுங்கள். சுஜியின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்களிலிருந்து கண்ணீர் பொல பொல வென்று கொட்டியது. உடனே எழுந்து சென்றுவிட்டாள். வழியில் ராஜாவைப் பார்த்த போது அவன் அவளை அவனது வீட்டிற்கு அழைத்துச் சென்றான். அவனது வீட்டிற்க்குச் சென்றதும் நாற்காலியில் இருந்து அழுது கொண்டேயிருந்தாள். என்ன விசயம் என்று சொல்லன்டா? இப்படிஅழுது கொண்டே இருக்கிறாயே. சொல்லடா? என்றான். நடந்தவற்றைக் விபரமாக கூறினாள். கூறிவிட்டு எழுந்து அவளது வீடு சென்றுவிட்டாள் அங்கு சென்றவள் தனது பெற்றோருக்கு நடந்தவிடயங்களை விவரமாகக் கூறிவிட்டு அறையினுள் சென்று கதவைத்தாப்பாள் போட்டாள். ஒரு தாழும் பேனாவும் கையில் எடுத்தாள். அன்பின் ராஜாவுக்கு, என்னை மன்னித்து விடு. என்னால் உனது வாழ்க்கைக்கு எந்தப்பாதிப்பும் வருவதை நான் விரும்பவில்லை. மீண்டும் ஒருமுறை நாம் இந்த மண்ணில் பிறந்தால் இருவரும் ஒ ந்தாய் வயிற்றில் பிறக்கவேண்டும் என இறைவனை பிராத்திக்கின்றேன் இப்படிக்கு என்றும் உன்னை நினைக்கும் சுஜி.

"ராஜா ராஜா கொஞ்ச நேரம் வெளியே வா" ஒரே அறையினுள் எத்தனை மணிவரை இருக்கப் போகின்றாய்? என ராஜாவின் தாயார் கேட்டார். ராஜா எதுவுமே பேசவில்லை. கதவைத் தள்ளிப்பாத்தார் அவனின் தாய். கதவு திறபட்டது உள்ளே ராஜா கட்டிலில் உறங்கிக் கொண்டிருந்தான். அட நித்திரை கொள்கிறான் என எண்ணிய தாயார் அருகில் ஒரு கடதாசி காற்றில் பறப்பதை க் கண்டாள். அதன் அருகில் சென்று அதை எடுத்தார். அன்பின் நண்பி சுஜிக்கு, என்னை மன்னித்து விடு எமது புனிதமான உறவை களங்கப்படுத்திவிட்டுவிட்டார்கள். எனக்கு இன்று நடத்தது போன்று நாளை உனக்கும் நடக்கக் கூடாது. என் வாழ்வை இத்துடன் முடித்துக் கொள்கின்றேன். அன்புடன் என்றும் உன்னை நினைக்கும் ராஜா.

கடிதத்தை படித்துமுடித்ததும் ராஜாவின் தாய் கதறினார். இரண்டு வீட்டிலும் மரண ஓலம். ஆனால் "வான் வீட்டிலோ கொண்டாட்டம்." மானிடராய்ப் பிறந்து நல்ல நட்புடன் உறவாடிய இரண்டு உள்ளங்கள் பிரிவினையே தேடாது இறப்பிலும் ஒன்றாக வான் வீட்டில் ஒன்றிணைந்த ராஜாவையும், சுஜியையும் பார்த்த மகிழ்வினாலே கொண்டாடினார்கள். இந்தக்காலத்திலும் இப்படி நட்பிற்காக உயிரைக் கொடுப்பவர்களும் இருக்கிறார்களா? என மக்களே வியந்தார்கள் பூவுலகில் நட்பினால் சங்கமித்த இரண்டு உள்ளங்கள் விண்ணுலகிலும் நட்பினால் சங்கமித்தது வாழ்கின்றது.

**ஆக்கம் :- உ . சுஜனி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குமர புரம்

புரண்டு புரண்டு படுத்துக் கொண்டிருந்த குமரனுக்கோ உறக்கம் வரவில்லை. எப்பொழுது விடியும். என நினைத்து நினைத்து கடிகாரத்தை பார்த்து பார்த்தே சலித்துக் கொண்டான். பின் எப்படியோ ஐந்து மணிக்கெல்லாம் எழும்பி தனது காலை கடன்களை முடித்து விட்டு நேர்முகப் பரீட்சைக்கு போவதற்கு தயாரானான். இருந்தாலும் அவனின் மனதில் எங்கோ ஒரு மூலையில் ஏக்கம் குடிகொண்டிருந்தது. ஏனெனில் அவன் சென்ற எல்லா வேலைகளுக்கான நேர்முகப்பரீட்சையிலும் தோல்வியே காத்திருந்தது. இந்த வேலையாவது கிடைக்காதா? என்ற ஒரு நப்பாசையோடே புறப்பட தயாரானான். அப்பொழுது தாய் சமையலறையிலிருந்து குமரா எல்லா ஆவணங்களையும் சரிபார்த்து எடுத்துக் கொண்டாயா? என்று குரலோடு தேனீரையும் கையிலேந்திக்கொண்டு குமரனுக்கருகில் வந்தாள். குமரனும் ஓமம்மா எல்லா ஆவணங்களையும் சரி பார்த்து விட்டேன். எனக் கூறி தாயார் கொடுத்த தேனீரை குடித்தான். அது இனிப்பு இல்லாவிட்டாலும் தாயின் கையால் கொடுத்த தேனீரானது அவனுக்கு தேனாமிர்தமாக இருந்தது.

பிறகு அவன் புறப்பட தயாராகின்றான். வாசலில் வந்து அம்மா நான் போயிற்றுவாறேன் என தாயார் பக்கம் திரும்பிக் கூறினான். அப்போது தாயாரின் கண்கள் கலங்கி இருப்பதைக் கண்டு ஏம்மா அழுகிறாய்? என தன் ஆதங்கத்தை கேட்டான். உனக்கு ஒரு வேலையும் கிடைக்கிறமாதிரி இல்லை ஒவ்வொரு வேலைக்குச் செல்லும் போதும் நீ ஏமாற்றத்தோட திரும்பி வாற இந்த வேலையாவது உனக்கு கிடைக்குமாப்பா? என்று தாய் கவலையோடு கூறினாள். கண்டிப்பா எனக்கு இந்த வேலை கிடைச்சிடும் என்று குமரன் சொன்னான். போப்பா நீ உன்னுடைய தகுதிக்கேற்ற வேலையை செய்யிறதைப் பார்க்கத்தான் நான் ஆசைப்பட்டேன். அதை நான் கண்மூடுறத்துக்கிடையில் பார்க்க ஆசையாய் இருக்கு. என தாய் தன் ஆதங்கத்தை மகனுக்கு வெளிப்படுத்தினாள். இந்த வேலைக்கேற்ற தகுதி எனக்கு இருக்கும்மா கண்டிப்பா எனக்கு இந்த வேலை கிடைக்கும். கவலைப்படாதையம்மா எனக்கூறி விடைபெற்று வீதியால் நடந்து வந்து. புகையிரத நிலையத்துக்கு வந்து. ரயிலில் ஏறி இருக்கையில் அமர்ந்து கொண்டான்.

அப்போது ரயிலும் அவன் மனம் போல் மிக மெதுவாக ஓடியது பிறகு வேகமாக ஓடத்தொடங்கியது. அப்போது முன்னைய நினைவுகளை மீட்டுப் பார்க்கலானான். யாழ்ப்பாணத்திலே காணப்பட்ட அழகிய சிற்றூர் அது அந்த அழகிய சிற்றூரே வீரமலை. அந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிற்றூரிலே வாழ்ந்த தம்பதியினருக்கு நீண்ட காலம் பிள்ளைகள் இல்லாமல் சில காலத்துக்குப் பின் அவர்கள் இரண்டு குழந்தைகளை பெற்றெடுத்தனர். அவர்களுக்கு பிறந்த புதல்வர்கள் தான் குமரனும், மாலினியும். அவர்கள் இவர்களுடைய சொத்து இந்த பிள்ளைகள் தான் இவர்களுடைய வீட்டினுள் இருந்தே நிலாவைப் பார்க்கலாம். இது மட்டுமல்ல ஒரு நேரம் உணவு உண்பதற்கே மிகவும் கஸ்ரம். அந்தளவுக்கு மிகவும் வறுமைப்பட்ட குடும்பம் அது. குமரன் வளர்ந்து பாடசாலை செல்லும் படி நிலையை எய்தி விட்டான். ஆனால் பாடசாலை செல்வதற்கு வேண்டிய பணவசதி அவர்களிடம் கிடையாது. ஆனால் தன்னுடைய பிள்ளைகள் படிக்க வேண்டும் என்ற ஆசை தந்தை, தாய்க்கு இருந்தது. இதை அவர்கள் நேரடியாக தன் மகனுக்கு முன்னரே கூறியிருந்தார்கள்.

அதனால் தான் குமரன் தன் அப்பா வேலை செய்துவரும் பண்ணையாரிடம் சென்று எனக்கு படிக்க ஆசையாயிருக்கு சிறிது பண வசதி செய்வீகளா? என கேட்டான். ஆனால் பண்ணையாரோ உனக்கு படிப்பு ஒரு கேடா நீயும் உன் அப்பாவோட சேர்ந்து வேலைக்கு வா என்று கிண்டலாக கூறினான். குமரனுக்கோ இதைக் கேட்டவுடன் உள்ளுக்குள் கோபமாய் இருந்தாலும் வெளியில் அதைக் காட்டி கொள்ளாமல் அவ்விடத்தை விட்டு அகன்று வீதி வழியில் நடந்தான். அப்போது அவன் அருகில் பாடசாலை மாணவர்கள் வந்த பொழுது ஒரு ஏக்கப்பார்வையோடு அவர்களை பார்த்து விட்டு எனக்கு இது கிடைக்காவிட்டாலும் என் தங்கையாவது படித்துப் பெரிய ஆளா வர வேணும். என மனதிற்குள் நினைத்துக்கொண்டு மிக வேகமாக நடந்து சென்று வீட்டுப்படலையை திறந்த பொழுது வீட்டின் முன்னால் கூட்டமாக சனங்கள் நிற்பதை கண்டு மிகவும் பதற்றத்துடன் நடந்து சென்றான்.

அவன் வருவதைக் கண்ட ஒருவர் குமரா உன் அம்மாவும் அப்பாவும் ஆலயத்திற்கு சென்று விட்டு வீட்டுக்கு திரும்பி வரும் பொழுது வாகனத்துடன் மோதுண்டு இறந்து விட்டார்கள் என கண்ணீர் மல்க கூறினார் அதை அவன் கேட்டதும் மயக்கமுற்று வீழ்ந்து விட்டான் பிறகு சுய நினைவிற்கு வந்ததும் பெற்றோரின் நினைவுகளை சுமந்த படி கதறி அழுதாள். பின் அவர்களுக்கு செய்ய வேண்டிய கிரியைகளை செய்து ஒரு உலகிற்காக தன்னை தயார் செய்தான். தன் தங்கை படிக்க வேண்டும் என்னும் கொள்கைக்காக அவன் களை பிடுங்குதல் போன்ற சிறு வேலைக்கு சேர்ந்தான். தங்கையையும் பாடசாலைக்குச் சேர்த்தான். இவன் மாடாய் உழைக்க அவள் பாடாய் படித்தாள். மாலினி படிப்பில் கெட்டிக்காரி இவ்வாறு அவள் படித்து கொண்டிருந்த பொழுது மலேரியா நோய் வடிவில் அவன் தங்கைக்கு காலான் வருவான் என அவன் நினைத்து பார்க்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு சில நாட்களிலேயே தனது தங்கையையும் இழந்தான். இனி தான் அநாதை தான் எனும் உணர்வோடு கால் போன போக்கிலேயே நடக்கலானான். அப்போது அவனை கவனித்து கொண்டிருந்த ஒரு தாய் குமரனை கூப்பிட்டு உன்னை நான் என் மகனாக கொள்கிறேன். நீ நல்லா படிக்கணும், நல்லா சம்பாதிக்கணும் இந்த கிராமத்துக்காக நீ உதவனும் என தைரியமூட்டினாள். அந்த வளர்ப்பு தாயின் மூலம் வளர்ப்பு மகனாக இருந்து தன் தாய் தந்தை சொன்ன சொல்லை நினைத்துக் கொண்டு அந்த உந்துதலின் மூலம் படித்து பட்டம் பெற்று விட்டான் .இவ்வாறு பழைய நினைவுகளுடன் இருக்கும் போது தம்பி இறங்க வேண்டிய இடம் வந்திட்டுது இறங்கவில்லையா? என அவனது தோளில் கையை வைத்து ஒருவர் உழுப்பினார். அப்போது சுய நினைவிற்கு வந்தவனாய் தனது ஆவணங்களை எடுத்துகொண்டு ரயிலை விட்டு இறங்கினான். பின்னர் நிறுவனத்திற்கு சென்ற பொழுது உள்ளே இன்னும் தன்னைபோல பலர் நேர்முகப் பரீட்சைக்காக நிற்பதைக் கண்டு தானும் ஒருவராக அவர்களுடன் நின்று கொண்டான். பிறகு அந்நிறுவனத்தின் அதிபர் ஒவ்வொருவராக அழைத்து பார்த்து ஒவ்வொருவருக்கும் அந்த பதவிக்கு தகுதியில்லை என்று அனுப்பி விட்டார். பின் கடைசியாக குமரனை அழைக்க அவனும் மிகவும் பதற்றத்துடன் உள்ளே சென்று தனது ஆவணங்களை காட்டினான். அவற்றை பார்த்த அந்நிறுவன அதிபர் உனக்குத்தான் இந்த பதவி பொருத்தம் எனவே நீ நாளையே வேலைக்கு வந்து சேர்ந்துகொள் என்று கூறினார். இதைக் கேட்ட குமரன் மிகவும் ஆச்சரியத்துடனும், மகிழ்ச்சியடனும் அவரிடமிருந்து விடைபெற்று வீட்டுக்குச் சென்றான். வீட்டுக்குச்சென்று தனது சந்தோசத்தை தாயுடனும் பகிர்ந்து கொண்டான். பிறகு அவன் வேலைக்குச் சென்று தனது தாயை சந்தோசமாக வைத்திருந்ததுடன், கிராமத்தையும் வளர்ச்சி பெற பெரிதும் உதவினான். இதனால் தான் அந்த கிராமத்தை அவ்வூர் மக்கள் குமரன் பெயர் கொண்ட குமரபுரம் என அழைக்கலாயினார்.

**ஆக்கம் :- ம . நிரோஜினி**

**"இன்னிக்கு மாதிரி என்னிக்கும் அலுப்பு ஏற்பட்டதில்லை!"**

**"ஏன்... ஆபீஸ்ல அவ்வளவு வேலையா....?"**

**"ஆமா.... அஞ்சு வருஷமா தேங்கி கிடக்கும் ஃபைல்களையெல்லாம் புரட்டிப் பார்த்த மாதிரி கனவு கண்டேன்...!"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனப்பதிவுகள்

பதினைந்து வருடங்களுக்கு பிறகு இன்று தான் கற்ற பாடசாலைக்கு சமூகமளித்திருந்தாள் பிரவீனா. அவள் தனது பாடசாலையில் நடைபெறும் பரிசளிப்புவிழாவிற்கு பிரதம விருந்தினராக வருகை தந்திருக்கிறாள். அவளுடைய மனதில் மட்டற்ற மகிழ்ச்சி. சேர்.... விழா தொடங்க நேரமிருக்கு தானே? நான் ஒருக்கா பாடசாலையை சுத்திப்பார்த்து விட்டு வரட்டா? ஓம்.... தாரளமாக யாருக்கும் தான் படித்த பாடசாலையை பார்க்க நிச்சயமாக ஆசையிருக்கும் தானே...... நீங்கள் தாராளமாகப் போகலாம். நன்றி என விடைபெற்றாள்

கால்கள் வேகமாக பாடசாலையின் உள்வளாகம் நோக்கி நகருகிறது. பாடசாலையின் வகுப்பறைகள் தென்படுகின்றன. அவளுடைய காலின் வேகங்கள் தடைப்படுகின்றன. அவள் பன்னிரண்டாம் தரத்தில் கல்விகற்ற போது படித்த வகுப்பறைதான் அது. அந்த வகுப்பறையில் எத்தனை நாட்கள் கூடி மகிழ்ந்திருப்போம், உண்டிருப்போம். அவள் வகுப்பறையின் முன் நின்ற அந்த மட்னிமரம் இன்று விருட்சமாய் பரந்து விரிந்திருக்கின்றது. அவளுடைய கால் மரத்தை நோக்கி நகருகின்றன. அந்த மரத்தை உற்று நோக்குகிறாள் இந்தமரத்தைச் சுற்றி எத்தனை கேளிக்கைககள், விளையாட்டுகளில் ஈடுபட்டிருப்போம். மகோகனி மரத்தில் பொறித்திருந்த அந்த பெயர்கள் அவளுடைய கண்ணில் படுகின்றன. எண்ணங்கள் நினைவுகள் பின் நோக்கி நகர்கின்றன.

அன்று ஒரு வெள்ளிக்கிழமை இடைவேளை நேரம் இருக்கும். நானும் என் நண்பி வதனாவும் இணைந்து எங்கள் இருவரின் பெயரையும் அந்த மரத்தில் பொறித்தோம். வதனா நாங்க எங்கட பள்ளிக்கூடத்தை விட்டுப் போனாலும். எங்கட பெயர் இந்த மரத்தில் எப்பவும் இருக்கும். நீ சொல்றது உண்மை தான் பிரவீனா. இவ்வாறு ஓரிரு மாதம் கடந்திருக்கும். ஒரு நாள் பிரவீனாவை தமிழ்தின போட்டிக்குச் செல்ல வேளைக்கு வரும் படி ஆசிரியர் கட்டளையிட்டிருந்தார். அன்று வேளைக்கே பாடசாலைக்கு சமூகமளித்திருந்தாள். தன்னுடைய வகுப்பறைக்கு சென்ற பிரவீனாவுக்கு அதிர்ச்சியே காத்திருந்தது. அவளுடைய உயிர் நண்பி வதனா பக்கத்து வகுப்பு பிரகாசுடன் கதைத்துக் கொண்டிருந்தாள். என்ன இவள் ஒரு பெடியளோடையும் கதைக்க மாட்டாளே? அமைதியானவளே? எதுக்கும் பக்கத்து வகுப்பிட்ட விசாரிக்கிறது நல்லது என எண்ணியவளாய் தனது அயல் வகுப்பு நண்பியுடன் சென்று பிரியா உங்கட வகுப்பில் படிக்கிற பிரகா ஆ! பிரகாசுக்கு என்ன?

ஒன்றுமில்லை அவன் வதனாவோட நெடுகலும் கதைக்கிறான். வதனா சாதாரணமாக எல்லாப் போய் சோடையும் கதைச்சா சாதரணமாக எடுக்கலாம். ஆனா இவா இவனோட மட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் கதைக்கிறா...? அது தான் உன்னட்ட கேப்பமென்று வந்தனான். என்ன பிரவீனா தெரியாத மாதிரி கேட்கிறாய். வதனாவும் பிரகாசும் ஒருத்தர ஒருத்தர் காதலிக்கின்றார்கள். என்ன சொல்றாய். என வியப்புடன் கேட்டவள் தான் விறுவிறுவென தன் வகுப்பிற்கு சென்று வதனா..... வதனா...... வா உன்னோட நான் கொஞ்சம் கதைக்கனும். இருவரும் மகோகனிமரம் முன் நின்றனா. என்ன பிரவீனா என்னட்ட கதைக்கனும் என்று சொன்னாய்? படார் என வதனாவின் கன்னத்தில் அறைந்தாள் பிரவீனா.

நீ யெல்லாம் ஒரு நண்பி உன்ன நினைக்க எனக்கு கேவலமாயிருக்கு என்ன சொல்றாய்? என்னத்த சொல்றது நீ அந்த பக்கத்து வகுப்பு பிரகாசை விரும்புறாய் என்று கேள்விப்பட்டேன். என்ன வதனா நீ காதலிக்க வேண்டாம் என்று நான் சொல்லவில்லை. ஆனா இது காதலிக்கிற வயசில்லை பள்ளிக் காதல் படலைமட்டும் நீ கேள்விப் படவில்லையா? நல்லாபடிப்போம், முன்னேறுவோம். பேந்து நீ காதலி நான் தடுக்கல. அந்த பிரகாஸ் நல்லவனில்ல நான் சொல்றதை சொலிற்றேன் என்று கூறினாள் பிரவீனா.

நண்பிகள் இருவரது கண்ணும் குளமாகின. பிரவீனா என்ன மன்னிச்சிடு நான் இனி அவனோட கதைக்க மாட்டேன். சரி வா வதனா வகுப்புக்குபோவோம். காலம் கடந்தது அவர்கள் தரம் பதின்மூன்றாம் வகுப்புக்கு மாற்றப்பட்டார்கள். அந்த வகுப்பறைக்கு சென்று ஓரிரு நாட்கள் இருக்கும் வதனா தொடர்ந்து பல நாட்கள் பாடசாலை வரவில்லை. ஐயங் கொண்ட பிரவீனா பக்கத்து வகுப்புக்கு போய் பிரகாஸ் பள்ளி வரவில்லையா? இண்டைக்கு இல்லை அவன் ஒரு கிழமையாய் வரவில்லை என பதில் கிடைத்தது. அவளுக்கு எல்லாவற்றையும் சிறிது நேரத்தில் விளங்கியது. பிரவீனா வதனாவின் வீட்டிற்கு சென்றாள். அங்கு அவளுடைய தாய் அழுதாள், கதறினாள் என்ன பிள்ளை நண்பியென்று இருக்கிறாய் உனக் கொண்டும் தெரியாதோ? இல்லை நீயும் கூட்டுச்சேர்ந்து தானே என வதனாவின் தாய் பேசினாள்.

மடம் உங்கள சேர்வரட்டாம் பரிசளிப்பு விழா தொடங்கப் போகுதாம். என கூற நினைவிற்கு வந்தவள். சென்று தனக்குரிய பிரதம விருந்தினர் ஆசனத்தில் அமருகிறாள். அவள் எண்ணங்கள் இங்கில்லை. எல்லாம் வதனாவை நோக்கியே அவள் எப்பிடியிருக்கின்றாளோ? என்ன ஆளாளோ? என நினைத்தபடியே தனது ஆசனத்தில் அமர்ந்திருந்தாள்.

**ஆக்கம் :– ஜெ . தாரணி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறந்த கால கனவுகள்.....

கற்பனைகளிடம் வார்த்தைகளை யாசகம் கேட்டு வெற்றுக் காகித வாயிலில் காத்திருக்கும் கவிஞனைப் போல என்றோ உறங்கிவிட்ட உணர்வுகளை மெல்லத் தட்டி எழுப்பிய படி தெட்டத் தெளிவான நீல வானம் அதில் சுட்டு நிற்க்கும் சூரியன். பத்துமாதம் மடியில் கருச்சுமந்த தாய் அதை ஈன்றெடுத்த மகிழ்ச்சியில் மனம் நெகிழ்தற் போல். தன்மடி சுமந்த கதிர்களை எல்லாம் பக்குவமாய் ஈன்றுவிட்ட தாய் எனவே கண்களுக்கு எட்டும் தூரம் வரை நீண்டு பரந்த விளை நிலங்கள். அவற்றினிடையே மருக்களாய் உயர்ந்து நிற்கும் வைக்கோற் போர்களும், ஏர்பிடிக்கும் பாட்டாளிகளின் பூமி அது.

அங்காங்கே சுகந்தமான சுந்தரச் சோலைகளும், அந்தச் சோலை கண் நடுவே முட்டுக் குடிசைகளும், அந்த முட்டுக் குடிசைக்குன்றும் மானிடத்தின் வாழ்க்கைப் போக்கை விடாத மகத்தான மனிதர்களோடு முடக்கி இறைவனின் கொடை என்று ஊர் ஓரத்தே பெரிய குளமொன்று. குளத்தின் கரை எல்லாம் பச்சைப்பசும் புல் வெளிகளில் மேய்கின்ற மாடுகள், ஆடுகள் இவை எல்லாம் ஒரு மானிடகுலத்தின் வாழ்வியல் வடிவங்களோ! அன்று அவன் கற்ப்பனைப் பசிக்கு தீனியாகவில்லை. அந்த வடிவங்கள் ஊர் நடுவே நீண்டு படுத்திருந்த நெடுஞ்சாலை அதில் நகரும் வண்டிகள், கால்நடைகள், கால் நடைகளோடு கால்நடையாய் நகரும் மக்கள் என சாலை எப்போதும் நிறைந்திருக்கும். இப்போ! விடைதேடும் முன்னமே பிரதான வீதியில் நகர்ந்து கொண்டிருந்த பேருந்து நின்றது. குளம் இறக்கம் இறக்கிறவங்க கெதியா! வாங்கப்பா என கண்டெக்ரரின் வார்த்தைகளை வலுவாய் வாங்கிக் கொண்ட ராகுலின் செவிகள். அவனது கண்திறந்து உறக்கத்தை கலைத்துவிட மெல்ல மெல்ல எழுந்து வெளியே இறங்கினான். "அண்ண என்னுடைய நீல பாக்" என அடையாளம் காட்டி பஸ்சின் மேல் போடப்பட்டிருந்த பாக்கை பெற்றுக் கொண்டான். பின்னர் பஸ் மெல்ல நகர்ந்து அவனைதாண்டிச் சென்றது. கண்முன்னே விரிந்த காட்சி மனதில் தீப்பொறியாய் கட்டியது. "என்னடா இது தான் ஊரா" மனம் கேட்கின்ற கேள்வி இன்றைக்கு 15, 16 வருடத்திற்க்கு முன் கண்கள் கண்ட காட்சிகள் கால வெள்ளத்தில் கரைந்து போயின வோ. ராகுலின் மௌனத்தில் பிறந்தன. பல கேள்விகள் குளம் ஊருக்கு ஒரே வாயில் பிரதான சாலையில் இருந்து இறங்கி 4, 5 மைல் உள்ளே நடக்க வேண்டும். சூரியன் உச்சி வானைத் தொட்டிருந்தது. ராகுல் மெல்ல நடந்து சாலையைக் கடந்தான். ஒடுங்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்பாதை குன்றும், குழியுமாய் வரண்டு கிடந்தது. கையில் ஒரு பையும், தோளில் ஒரு பையும் போட்டு சாலையில் இறங்கி நடக்கத் தொடங்கினான். ராகுல் ஏர்முனை தாங்கி தன்னில் உயிர் மருந்து சுமந்த பூமியெல்லாம் பிணம் விழுந்து அவற்றின் தினம் ஊறி புல் கூட முளைக்க முடியாமல் சருகாகிக் கிடந்தது. நெல் விதைக்கும் பூமி யெல்லாம் கன்னி வெடிவிழுந்து சிவப்பு, வெள்ளைக்கம்புகளால் காவல் வேலிகள் காத்திரமாய் கண்ணில்பட்டது. விதைத்தவன் யார்? அறுவடை காலம் எதுவோ? ராகுல் மனதில் கேள்விகளோடு நகர்ந்து கொண்டிருந்தான் கண்களுக்கு எட்டும் தொலைவில் கறுத்த உருவ மொன்று ராகுலின் நடை சற்று வேகமானதோடு அருகில் சென்றான். இடுப்பைச் சுற்றி வெள்ளை வேட்டி தலையில் ஒரு துணி. உரமேறிய உடலும் அருகில் சென்ற ராகுலை தலை அசைத்துப் பார்த்தது மெல்லிய புன்னகையோடு "என்ன ஊருக்கு இப்பதான் வாறிங்களா ஓம் இப்ப தான் வாரன் என்ற சொந்த ஊர் இது. நான் நான்கு வயதில் வெளிநாடு போயிட்டன் இப்ப அம்மா அப்பா எல்லாம் வெளிநாட்டில் தான் நான் மட்டும் தான் என்ர நண்பர்கள், சொந்தக்காரர்களைப் பாக்கப் போறன் ராகுலின் வார்த்தைகளைக் கேட்ட அம் மனிதர் இதான் சொந்த ஊரா? உங்கட பெயர் என்ன "ராகுல்" நல்லது என்னோட ஊரும் இதான் வார்த்தைகள் பரிணமிக்க கால்கள் நடந்து கொண்டிருந்தது ராகுல் கேள்விகளைத் தொடர்ந்தான் ஊர்ல விவசாயம் எல்லாம் எப்படிப் போகுது நட்டன திரும்பிப் பார்த்த அம்மனிதர் விவசாயமா மெல்லிய புன்னைகையோடு அப்படி ஏதும் இப்ப இல்லையப்பா பொல்லாத யுத்தத்தில் எல்லாம் பாழாப் போச்சு வீடு வாசல் ஆடு, மாடு எல்லாம் உயிர் மட்டும் மிச்சம் அதுவும் விடையார் அப்பா சொல்வார் உணர்வுகள் அழுதன அணை கடந்த வெள்ளம் போல் உள்ளிருந்து மூச்சு விரைவாய் வெளியேற ஊர் வாசல் கண்களில் பட்டது

சரியப்பா நான் வாறன் விடை பெற்றார் அம்மனிதர் அன்றோர் நாள் பாடசாலை அந்த ஊர்வாயிலைத் தாண்டித்தான் பாடசாலை செல்ல வேண்டும் பெரிய மதகு கீழே பெரிய வாய்க்கால் மந்திகளாய் சிலர் குந்தியிருக்கினம் பள்ளிக்கு வாறேல்ல பெண்டுகளைப் பார்க்கினம் யார் குந்தி இருந்தார் என்று தெரியாது ஆனால் இருந்தவர் பள்ளிக்கூடப் பிள்ளையள் என்று தட்டித் தடவிப் பார்த்திட்டு கற்றதைக் கொட்டுவார் கணக்கு வாத்தியார் நினைவுகள் நீள மதவில் தன்னையறியாது உட்க்கார்ந்தார் சீமெந்துப் மதகு செல்விழுந்து ஒருபக்கம் கம்பி மட்டும் இருந்தது சோலையாய் நின்ற ஊர் பாலையாய் நின்றது பார்க்கக் கண்கள் பொறுக்கவில்லை ஊரெ வெறிச்சோடிக்கிடந்தது மனை இல்லை, மக்களில்லை பற்றைகள் மட்டும் படு செளகரியமாய் காற்றில் அசைந்து கொண்டிருந்தன சூனியப் பூமி சூனியம் கலைத்தது போல் தூரத்தே சிலர் நடமாட்டம் தெரிந்தது தன்னை அறியாது வியக்கினைத் தேடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டில்ப் பூச்சியாய் எழுந்து வேகமாய் நடந்தான் வெட்ட வெளியாய் ஒரு இடம் பிறந்து வளர்ந்த பூமியில் அப்படி ஒரு இடத்தை அவன்வாழ்நாளில் பார்த்ததில்லை விரல் விட்டு எண்ணக்கூடிய குடிசைகள் மனிதர்கள் குழந்தைகள் நடமாடிக் கொண்டிருந்தார்கள் ஆன போதும் ராகுலின் கண்கள் ஒரு ஜீவனைமட்டும் தேடிக் கொண்டிருந்தது. அதுதான் அவனுடைய ஆருயிர் நண்பன் சந்துரு மூலை முடக்கெல்லாம் கண்கள் பார்வைகள் தேடின தேடல்களுக்கு விடை கொடுக்கவில்லை காலம் தயாராக இல்லை கடல் கடந்து வந்து தன் நண்பனைக் காணமுடியாத ஜடமாய் நின்றான் முன்னும் பின்னும் பலர் நடக்கின்றார். யார் கண்ணும் இவனை காட்டிக் கொடுக்கத் தயாராக இல்லாதபோது மூங்கில் காட்டில் இருந்து வரும் சங்கீதமாய் "நீங்க ராகுல்" ஜடம் ஒன்று உணர்வுகள் பெற்றது சட்டெனப் திரும்பினான் முகில் மூடிய சந்திரனாய் ஒளி இழந்த வாடிய முகமொன்று ஏனோ நாணப்பட்டு நாணமாய் தலைசாயந்து நின்றது "ஓம் நான் தான் ராகுல்" விடைகண்டதும் தான் நிமிர்ந்தால் இதயத்தில் முள் ளொன்று தைத்தது நான் சங்கீதா என்ற மறு மொழி கேட்டு உள்ளத்தில் எழுந்த மகிழ்ச்சிக்குரல் முகத்திரை வழியே வெளியேறியது என்ன சங்கீதா எப்படி இருக்கிறா" ம்.... இப்படி இருக்கிறன் அன்றைக்கு கண்ட அந்த நளின்றைப் பேச்சு இண்டைக்கும் மறையவில்லை மெல்லச் சிரித்தபடி கலியாணம் முடிஞ்சா மௌனித்த பார்வைகளோடு இல்லை என்றவள் நீங்க எப்படி ம்.... நான் சுகம் நானும் இன்னும் முடிக்கேல்ல வார்தைகள் வடம் பிடித்தன என்ன மாதிரி அம்மா, அப்பா எல்லாம் சுகமா இருக்கினமா? ராகுலின் கேள்விகள் இடியாய் சங்கீதா நெஞ்சில் பாய்ந்தது கண்களில் இருந்து நீர் செட்ட அவர்கள் மோசம் போயிட்டினம் அண்ணாவோட தான் இருக்கிறன் ராகுல் தன்னைத்திட்டிக் கொண்டான் இல்ல தெரியாமல் என்று இழுத்தான் பரவாயில்லை என்று முடித்தாள் இருவர் உணர்வுக்குள்ளும் தூங்கிக் கொண்டிருந்த பழைய காதல் உணர்வுகள் விழித்துக் கொண்டன. சங்கீதா பழைய ஞாபகம் எல்லாம் இருக்கா ராகுல் உள்ளம் பேசத் தொடங்கியது ம்.... இல்லாமலா இத்தன வருசத்துக்கு பிறகு கண்டுபிடிச்சன் பசுமையான அந்த நினைவுகள் சுடுகாட்டில என்னோட பிணம் எரியிறபோதும் மறக்காது வார்த்தைகள் பகிரப்பட்டன இருவர் மனதுக்குள்ளும் தூங்கிய காதல் விழித்திடவே இருவரும் சங்கக் புலவன் சொல்லிட்ட செம்புல்ப் பெயர் நீர் போல் தாம் கலந்தனர் சரி சங்கீதா என்னோட உயிர் நண்பன் அதான் உம்மட மச்சான் சந்துரவப் பார்க்கத்தான் வந்தனான் அவன் எங்க ராகுலின் சிறகடிப்புக்கள் சந்துரவை நோக்கியதாயே இருந்தது மாமா மோசம் போட்டார் மாமி யோடதான் குறிஞ்சிக் குளத்தில இருக்கிறதாக கேள்விப்பட்டனான் வீட்டு விலாசம் இருக்கு நாளைக்கு போகலாம் நானும் வாறன் அந்தி சாய்ந்து கொண்டிருந்தது சங்கீதா வீட்டிற்க்கு அழைத்துச் சென்றால் போர்கண்டும் பதையுண்டு போகாத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்பாடு வாங்க என வரவேற்று குடிசைத் திண்ணையில் அன்னிய தேசத்தில் பஞ்சப் படு சௌகரியமாய் இருக்க வேண்டியவன் இரவு முழுவதும் உறக்கமின்றி விழித்திருந்தான். விடியற்க் காலை சங்கீதா வெளிக்கிட்டபடி நேரத்துக்கு போனாத்தான் பஸ் பிடிக்கலாம் அண்ணாவிடமும் அண்ணியிடமும் விடை பெற்று வேகமாய் கால்கள் நடந்தன பிரதான வீதியில் வந்த பஸ்சை மறித்து ரவுணுக்கு போய்ச்சேர சூரியன் உச்சியைத் தொட்டது அங்கிருந்து குறிஞ்சிக் குளம் போக மாலை ஆனது விலாசம் தேடி ஊர் எல்லாம் அலைந்து கடைசியில் ஒரு முட்டு ஒழுங்கை வாழைப் பூச்சருகுகளால் அடைக்கப் பட்ட வேலி காற்றும் புகமுடியதாது போல் கண்ணியமாய் இருந்தது உள்ளே ஒரு குடிசை தெருவில் நின்ற பெரிய மனிதர் அடயாலம் காட்டிய வீடு தடிகளால் ஆன கதவு திறந்து உள்ளே போனால் சந்துரவின் அம்மா வாங்க வாங்க என வரவேற்றவரை சங்கீதாவை அம்மாடி என கட்டிஅணைத்தாள் ராகுலைக் கண்டதும் ராகுல் என்றபடி கண்கள் குளமாகி கதறத் தொடங்கினாள் மேல் ஒரு மலர் போட்டுவிடு எனக்காக இல்லை உள்ளிருக்கும் செய்வாயா? கேள்விக் குறியுடன் முடிவு பெற்றிருந்தது சந்துரு செய்த சின்ன சின்ன குறும்புகள் அந்தக் குறும்புகளுக்குள்ளும் அவனிடம் இருந்த பாசம் யாவுமே இதயத்தில் முட்க்கீரீடம் சூட்டின கண்ணீர் வற்றி வறண்டு போக முன்னர் கடைசியாய் ஒரு துளிநீர் கண்களில் இருந்து விலகி ராகுல் கையில் இருந்த மலர்மீது விழ மலர் கையில் இருந்து விலக அவன் மேனியை தீண்டியது நண்பனுக்காய் அவன் கொண்ட தாகத்திற்க்காய் மெல்ல கை யொன்று தோள் தட்ட நிகழ்காலம் மீண்டு கொண்டது வாப்பா ராகுல் வா அவன் எங்கள விட்டுட்டு போட்டான் தாயின் தாகம் தனியவில்லை தாயிடம் நின்றுபிரியும் சேய் அதுவாய் தூங்கிக் கொண்டிருக்கும் தன் நண்பனதும் ஏனைய உறவுகளினதும் தூக்கத்தை கலைக் காதவனாய் அந்த மற்றவர்கள் தூங்கும் புண்ணிய பூமியை விட்டு வெளியேறி தன் தாய்நாடு விட்டு வாழ்நாடு திரும்பினான் ராகுல் மீண்டும் வருவான் என்ற நம்பிக்கையோடு வீதியில் நின்று கையசைத்து விடை கொடுத்தாள் சங்கீதா....

**ஆக்கம் :- த. வினோஜித்**

**'கள்ள நோட்டு அடிச்ச நீங்க, எப்படி மாட்டினீங்க..'**
**'பழக்க தோஷத்தில நோட்டக்குக் கீழே பிரஸ் பேரைப் போட்டுத் தொலைச்சிட்டேன்....'**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டுரைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் நாட்டார் பாடல்கள்

உலகில் உள்ள எல்லா மொழிகளிலும் உள்ளது போலவே தமிழ் மொழியிலும் நாட்டார் பாடல்கள் பல நூற்றுக் கணக்கில் நிலவி வருகின்றன. இவற்றை இயற்றியவர் யார் என்பது தெரியாதது? போலவே இவை ஏட்டில் எழுதிப் பாதுகாக்கப்பட்டாலும் மக்களின் வாய்மூலம் நீண்ட காலம் வாழ்ந்து வருகின்றன. சாமானியமான மக்களின் பல்வேறுபட்ட உணர்வுகளின் வெளிப்பாடுகளாய் இப்பாடல் விளங்குவதும் குறிப்பிடதக்கதாகும்.

மொழியறிவு, யாப்பறிவு, இலக்கணஅறிவு என்ற எவையும் இன்றி நாட்டில் வழங்கும் பேச்சு வழக்குச் சொற்களையே பெருமளவு கொண்டு நாட்டுப் பாடல்களை மக்கள் கவிஞர் இயற்றியுள்ளனர். இருப்பினும் ஓசையின்னை இசை வளம் செயற்கைத் தன்மையில்லாத இயற்கை வருணனைகள் உணர்ச்சிச் செழுமை என்பவற்றால், இப்பாடல்கள் சாகாவரம் பெற்று இன்றும் வாழ்ந்து கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது. பிறப்புத் தொடக்கம் இறப்பு வரை மனித வாழ்வில் இடம் பெறும் எல்லா நிகழ்வுகளையும் நாட்டார் பாடல்களின் கருப்பொருட்களாக அமைவது பெருஞ்சிறப்பு. வேறு வகையில் சொல்வதானால் சாமானியரின் உணர்ச்சிகளின் வடிகால்களே நாட்டார் பாடல்கள் எனலாம். குழந்தையின் பிறப்பு வேளையிலே மருத்துவம் பார்க்க வரும் மருத்துவிச்சி, தன் குழந்தையை துயில்விக்கும் தாய், கூடி ஒன்றாக விளையாடும் சிறுவர் சிறுமியர், கடலிலே படகோட்டியும், தரையிலே உழவு முதலாக பல்வகை தொழில்களில் ஈடுபட்டுவரும் தொழிலார்கள், காதல் வயப்பட்ட தலைவன் தலைவி, பிள்ளைகளைப்பறிகொடுத்த தாய், கணவனைப் பிரிந்த மனைவி, கோயிலில் வழிபாடு நடத்தும் அடியார்கள், கூத்தில் பாத்திரங்களாக கலந்து கொள்ளும் நடிகர்கள், அவர்களை பயிற்றி அரங்கேற்றும் அண்ணாவி என்ற பல மக்களும் குறிப்பிட்ட சந்தர்ப்பங்களுக்கேற்ற சந்தங்களிலே பாடியுள்ள நாட்டார் பாடல்கள் கல்லாதவர்களை மட்டுமன்றி கற்றவர்களையும் கவர்ந்து கனிவிக்கும் ஆற்றல் பொருந்தியுள்ளனவாய் விளங்குகின்றன. யுகக் கவிஞனான பாரதி கூட இத்தகைய பாடல்களிலே தன் மனதைப் பறிகொடுத்தான். என்பதற்கு அவர் பாடிய பின்வரும் பாடல் அடிகள் சான்றுகளாகும்

ஏற்ற நீர்ப் பாட்டின் இசையினிலும் நெல்லிடிக்கும்
கோற் நொடியார் குக்கு வெனக் கொஞ்சும் ஒலியினிலும்
சுண்ணம் இடிப்பார்தம் சுவைமிகுந்த பண்களிலும்
பண்ணை மடவார் பழகுவார் பழகுபல பாட்டினிலும்
வட்டமிடுபடும் பெண்களை வளைக்கரங்கள் தாமொலிக்கக்
கொட்டி இசைத்திடுமோர் கூட்டமுதப் பாட்டினிலும்
................ நெஞ்சைப் பறிகொடுத்தேன் பாவியேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டார் பாடல்களில் சந்தங்கள் அவை தோன்றிய சூழல்கள் என்பவற்றைப் பயன்படுத்தித் தத்தம் குறிக்கோள்களை நிறைவு செய்யக் கற்றவல்ல கவிவல்லாரும் பின்னிற்கவில்லை என்றால் அவற்றின் பெருமை எத்துணை என்பது புலனாகும். சுந்தரமூர்த்தி சுவாமிகளின் தேவாரங்களில் பல நாட்டார் பாடல் மெட்டுக்களைப் பின்பற்றி ஆக்கப்பட்டன. பெண்கள் விளையாடும் போது பாடிய பாடற்பாணிகளைப் பயன்படுத்தி மணிவாசகப் பெருந்தகை திருப்பொற்சுண்ணம், திருவெம்பாவை, திருப்பொன்னூஞ்சல், திருச்சாழல், திருக்கோத்தும்பி, திருவுந்தியர் முதலிய பாசுரங்களைப் பாடியருளினார். பின்வந்த சித்தர் கணத்தினர் நாட்டார் பாடல் மெட்டுக்களை பயன்படுத்தினர். என்பதற்கு சான்றுகள் உண்டு. நந்தன சபரித்திர கீர்த்தனை, கம்பரமாயணக் கீர்த்தனை ஆகியவற்றிலும் நாட்டார் பாடல்களின் செல்வாக்குக் காணப்பட்டது. புதுமைக்கவிஞர் பாரதி தொட்டு பட்டுக் கோட்டை கல்யாண சுந்தரம் வரை நாட்டார் பாடல்களின் சிந்துக்களையும், கண்ணிகளையும் தமது பாடற்கருத்துக்களின் தாங்களாகக் கையாண்டுள்ளனர். சுருங்கச் சொன்னால் படித்தறியாப்பாமரர் தம் நாட்டார் பாடல்கள் படித்தோராலும் பின்பற்றப்பட்டுள்ளமை அவற்றின் மேன்மைக்கு எடுத்துக்காட்டு என்பதில் குற்றம் இல்லை. நாட்டார் பாடல்கள் பாடியோரின் நல்லுள்ளப் பாங்கினையும் நன்கு புலப்படுத்துவனவாகும். மருத்துவிச்சியின் பாடலில் இவ்வுண்மை புலப்படுகிறது.

அயலும் புடையும் வாழவேண்டும்
அன்னமும் சுற்றமும் வாழவேண்டும்
ஆச்சியும் அப்புவும் வாழணேடும்
அம்மானும் மாமியும் வாழவேண்டும்

என்ற பாடல் அடிகளில் "எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதெல்லாம் வேறொன்றறியேன் பராபரமே......." என்ற தாயுமானவரின் குரலும் "வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்......" என்ற சம்பந்த பெருமானின் குரலும் 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்........" என்னும் திருமூலர் திருவாக்கும். எதிரொலிக்கின்றன. யாப்பறிபுலவர் உவமை, உருவகம் முதலாகிய அணி நலங்களையும் உணர்ந்து கையாள்வதில் வல்லவராய் இருப்பார். இவ்வாறு கையாள்வதற்கு அவர்களின் கல்வியும் கற்பனையும் கவித்துவ ஆற்றல் துணைபுரியும் ஆனால் கல்வியோ, கவித்துவமோ இல்லதா நாட்டார் பாடல் புலவனும் இவ்வணிகளை தன்னுணர்வு இன்றியே கையாள்வதில் வல்லமை பெற்றிருப்பதை நாம் மறுத்தல் இயலாது.

'கச்சான் அடித்த பின்பு காட்டில் மரம் நின்றது. போல்
உச்சியில் நாலுமயிர் ஒரமெல்லாம் தான் வழுக்கை..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற பாடலடிகளில் கச்சான் காற்றடித்த பின் எஞ்சி நிற்கும் மரங்கள் போன்று சிலவாகிய மயிர்களும் வெறுமையான தரை போன்ற வழுக்கை உவமையணியாய் அமைந்து இலக்கிய சுவையோடு தன்னுணர்வின்றியே கையாள்வதில் வல்லமை பொருந்தியிருப்பதை நாம் மறுத்தல் இயலாது அத்துடன் நகைச்சுவையும் வழங்குகின்றன. காதலரின் கனவுநிலை, நிறைவேறாக் காதலில் உண்டாகும் ஏக்கநிலை முதலாகிய உணர்வுகளுக்கும் நாட்டார் பாடலிலே குறைவில்லை.

"கைவிடுவேன் என்று எண்ணிக்
கவலைப்படாதே கண்ணார்
அல்லாமேல் ஆணை உன்னை
ஆடையாட்டி காட்டுப்பள்ளி".

என்ற பாடலடிகளிலே "காதல் போயின் சாதல்" என்ற தத்துவம் எவ்வளவு அழகாக உணர்ச்சியோடு எடுத்துரைக்கப்படுகிறது. பிள்ளைகளுக்கு கடும் நோய் கண்டதும் வைத்தியரிடம் தாய் மருந்து வாங்கி வந்தாள் அதை வைத்து அரைத்த அம்மி இன்னமும் காயவில்லை அதற்கிடையில் பிள்ளை மாண்டுவிட்டான் தாயின் சோகம் எத்தகையாதாய் இருக்கும்.

"அரைத்த மருந்தோ இங்கே
அம்மி பாழ் போகுதெனை
உரைத்தர மருந்தோ இங்கே
உருக்குலைந்து போகுதெனை
பொன்னும் அழிவாச்சே ஊன்
பொன்னுயிரும் தீங்காச்சே
காசும் அழிவாச்சே உன்
கனத்த உயிர் நீங்காச்சே"

இவ்வாறு பல்வேறு உணர்வுக்கிளர்வுகளையும் எதார்த்தமாகவும் நெஞ்சை தொடும் வண்ணமாகவும் புற அழகுகள் அதிகமின்றி எடுத்துச் சொல்வதில் தமிழில் உள்ள நாட்டார் பாடல்கள் தலைசிறந்து விளங்குகின்றன. என்பதற்கு ஐயமில்லை அண்மைக் காலத்தில் வட்டுக்கோட்டை மு. இராமலிங்கம், பேராசிரியர் க. வித்தியானந்தன், பண்டிதர் வி: சி. கந்தையா முகாந்திரம், சதாசிவஐயர் முதலான பலரும் நூல் வடிவில் வெளியிட்டு வருவது தமிழ் நாட்டார் இலக்கியத்தின் வளர்ச்சியை காட்டுவதைக் காணலாம்.

**ஆக்கம் :- கு . பத்மறாஜினி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண இராச்சியம் தோன்றுவதற்கு முன் தமிழ் இலக்கிய வளர்ச்சி

யாழ்ப்பாண இராச்சியம் தோன்றுவதற்கு முற்பட்டதாக விளங்கும் கி.பி 1-13 ஆம் நூற்றாண்டு வரையான காலப்பகுதியில் பெருமளவில் இலக்கிய முயற்சிகள் நடைபெற்று இருக்கலாம். எனக்கருத இடமுண்டு. இவை முறையாகப் பேணப்படாமையால் இக்கால இலக்கிய முயற்சிகளைக் காண்பது மிக அரிதாகவே உள்ளது.

அந்த வகையில் இன்று ஈழத்து முதல் தமிழ் இலக்கியம் எனக்கருதப்படுவது. கடைச்சங்ககாலப் புலவருள் ஒருவராகக் கருதப்படும் ஈழத்துப் பூதந்தேவனாருடைய செய்யுட்கள் ஆகும். இச்செய்யுட்கள் பூதந்தேவனார், ஈழத்து பூதந்தேவனார், மதுரை ஈழத்து பூதந்தேவனார் எனும் பெயர்களில் சங்க இலக்கியங்களான அகநானூறு (88, 231, 307), குறுந்தொகை (189, 343, 360), நற்றிணை (366) ஆகியவற்றில் காணப்படும் ஏழு பாடல்கள் ஈழத்து பூதந்தேவனாருடைய பாடல்களாக காணப்படுகிறது. ஆயினும் இப்புலவர் ஈழத்திற்குரியவர் தானா என்னும் சர்ச்சையும் காணப்படுகிறது. இதற்கு புலவருக்கு அடையாக வரும் ஈழம் என்னும் சொல் இவர் ஈழநாட்டவர் என்பதையே குறிக்கின்றது. அதாவது சங்க இலக்கியங்களில் இலங்கை ஈழம் என்று அழைக்கப்பட்டது. உதாரணமாக "ஈழத்து உணவும் காழத் தாகமும்............." என்னும் பட்டினப்பாலையின் செய்யுள் மூலம் இவ்விரு நாட்டிற்குமிடையே வணிகத் தொடர்பு இருந்ததன் காரணத்தினால் ஈழம் என்பது இலங்கையைக் குறித்து நிற்பதை அறியமுடிகின்றது. மற்றும் ஈழத்திலே புலவர்களை ஆதரிக்கும் நிறுவன ரீதியான அரசுகள் இல்லாத காரணத்தினால் இப்புலவர் தமிழ் நாட்டிற்குச் சென்று தமிழ் வளர்த்து மதுரையில் வாழ்ந்திருக்கலாம். இதனால் புலவர் வாழ்ந்த நாட்டையும், பிறந்த நாட்டையும் இணைத்து மதுரை ஈழத்து பூதந்தேவனார் என பெயர் சூட்டப்பட்டிருக்கலாம். இது போன்ற சான்றுகள் மூலம் இவர் ஈழத்தவராகக் கருதப்படுவதால் இவரது பாடல்கள் ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றில் ஆரம்ப நிலை இலக்கியமாக விளங்குவதோடு ஆணிவேராகவும் அமைந்து காணப்படுகின்றது.

இவற்றுடன் பல்லவர்காலத்தில் தமிழ் நாட்டின் பக்தி இயக்கம் உச்சம் பெற்றிருந்த நிலையில் ஈழத்துச் சிவாலயங்களான திருக்கேதீச்சரம், திருக்கோணேச்சரம் என்பவற்றின் மீது சம்பந்தர், சுந்தரர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்றோரால் தேவாரங்கள் பாடப்பட்டுள்ளன. இப்பாடல்கள் மூலம் சிவலாயங்களை சூழ சைவசமயக்குடியிருப்புக்கள் கல்வி, வேள்விகளில் நல்ல சான்றோர், வேத மடங்கள் போன்றன நிறைந்து விளங்கிய சான்றுகள் உள்ளன. எனவே இவ்வாறான சூழலில் இக்காலப்பகுதியில் ஈழத்தில் கல்வி, கலை, இலக்கிய முயற்சிகள் நடைபெற்றிக்கலாம் என்பது நிச்சயமாகின்றது.

இதைத் தவிர ஈழத்தில் தமிழ் இலக்கிய வளர்ச்சி மிக உன்னதமான நிலையில் இருந்தது என்பதற்கு ஆதாரமாக கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. அநூராதபுரத்தில் கி.பி 9ம், 10ம் நூற்றாண்டுக்குரியதாகக் கருதப்படும் நான்கு நாட்டார் கல்வெட்டுக்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இவை செய்யுள் வடிவில் அமைந்துள்ளது. இக்கல்வெட்டின் இறுதிப்பகுதி வருமாறு:

"போதி நிழலமர்ந்த புண்ணியன்போ லெவ்வுயிர்க்குந்
நீதி லருள்சுரக்குஞ் சிற்தையா - னாதி
வருதன்மங் குன்றாத மாதவன்மாக் கோதை
யொருதர்ம பால னுளன்"

இக்கல்வெட்டு நன்கு வளர்ச்சியடைந்த வெண்பா யாப்பில் அமைந்துள்ளமையால். அக்காலப்பகுதியில் தமிழ்க்கல்வி, தமிழ்ப் புலமை என்பன நன்கு சிறப்புற்று இருந்தன. என்பதை ஊகித்துக் கொள்ளலாம் மற்றும் கேகாலை மாவட்டத்தில் உள்ள கோட்டகம என்னும் இடத்தில் கண்டு எடுக்கப்பட்ட கல்வெடானது. ஈழம் முழுவதும் தமிழ் மக்கள் செறிந்து வாழ்ந்தமைக்குச் சான்றாகின்றது. கோட்டகம கல்வெட்டு பின்வருமாறு.

"சேதுகங்கணம் வேற் கண்ணிணையாற் காட்டினா காமர்வளைப்
பங்கையக்கை மேற்றிலதம் பாரித்தார் - பொங்கொலி நீர்ச்
சிங்கைநக ராரியனைச் சேரா வனுரேசர்
தங்கள் மடமாதர் தாம்"

இக்கல்வெட்டின் யாப்பமைதியும், கவித்துவமும் ஈழநாட்டிலே செய்யுள் இலக்கியப் பாரம்பரியம் ஒன்று சிறப்புற்று விளங்கியமையையே சுட்டிக்காட்டுகின்றது. அடுத்து கி.பி 10 ஆம் நூற்றண்டிற்குரியதெனக் கருதப்படும் பதுளைக்கல்வெட்டு அக்காலத்தமிழ் மக்கள் பற்றிய மிகவும் முக்கியமான செய்தி ஒன்றினைக் கூறுவதையும் அவதானிக்கலாம் அக்கல்வெட்டு பின்வருமாறு:

"தெமழன்டரடனா தென்தரு ஆவா
நொதென இசா..................."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கல்வெட்டானது தமிழர்களுக்கு நாட்டின் தலைவர்களின் புதல்வர், புதல்வியரை திருமணம் செய்து கொடுக்க வேண்டாம் என்பதே இக்கல்வெட்டின் செய்தியாகும். ஈழ நாட்டில் தமிழ் மக்கள் அரசியல் அதிகாரங்களில் மேலாதிக்கம் பெறுவதைத் தடுக்கும் நோக்கத்துடன் பொறிக்கப்பட்டதாகலாம். அடுத்து சோழர்காலக் கல்வெட்டுசாசனங்கள் பல கண்டெடுக்கப்பட்டுள்ளன. அவை பல செய்யுள் வடிவிலும் அமைந்திருந்தாலும் உரைநடை அமைப்பிலும் காணப்படுகிறது. இவை அனைத்தையும் தொகுத்து நோக்குமிடத்து யாழ்ப்பாண இராச்சியம் தோன்றுவதற்கு முன் உள்ள காலப்பகுதியில் ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சி வெண்பா, விருத்தப்பா என பல்வேறு யாப்பு முறைகளிலும் உரைநடை அமைப்பிலும் வளர்ச்சி கண்டுள்ளமையை அறியலாம்.

இவ்வாறாக யாழ்ப்பாண இராச்சியம் தோன்றுவதற்கு முன்னர் தமிழ் இலக்கிய வளர்ச்சியாக ஈழத்துப் பூதந்தேவனாருடைய ஏழு சங்கப்பாடல்களும், சிவாலயச் சான்றுகள் மூலம் கல்வி, கலை, இலக்கிய முயற்சிகள் நடைபெற்று இருக்கலாம் என்பதும், கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டுக்களில் இலக்கிய முறைகள் கையாளப்பட்டிருக்கும் திறனும் போன்ற தமிழ் இலக்கிய வளர்ச்சிகள் காணப்பட்டிருந்தன.

**ஆக்கம் :- துசியந்தன்.**

**"பொண்ணு அன்னம் மாதிரி இருப்பாள்னு சொன்னதும் பையன் வேண்டாம்னுட்டான்"**

**"ஏன்"**

**"பாலையெல்லாம் அவள் குடிச்சிட்டு தண்ணியை மட்டும் இவனுக்கு வைச்சிடுவாள்னு பயப்படறான்"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அர்த்தமான வாழ்க்கை

வாழ்க்கை ஆம்! நாம் ஒவ்வொருவரும் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். எம்மைப் போன்ற பலர் இந்த பூமியிலே வாழ்ந்து மறைந்தும் போயிருக்கிறார்கள். சிலர் இறந்தும் நம்முடன் வாழ்கிறார்கள் அவர்களை நாம் எளிதில் மறந்து விடுவதில்லை. அவர்களது வாழ்க்கை பாடங்கள் எல்லாம் எமக்கு உலக அறிவினை உட்டுகின்றன. அத்தகையவர்களை எம் முன்னோடிகளாக கொண்டு வாழ்பவர்களும் இருக்கின்றார்கள். இவர்களது வாழ்க்கை அர்த்தமானது. அதைப் போல எமது வாழ்க்கையையும் நாம் அர்த்தமானதாக அமைத்துக் கொள்ள வேண்டும். ஒரு சிலர் நாம் எதற்காக? யாருக்காக? எப்படி வாழ்கிறோம் என்று தெரியாமலேயே வாழ்ந்து மடிந்து விடுவார்கள். இப்படிப் பட்டவர்களினால் அவர்களுக்கோ? பிறருக்கோ? எது வித பயனும் கிடைப்பதில்லை.

நாம் வாழும் முறையினை இரண்டு வகையாக பிரித்து நோக்கலாம். ஒன்று இப்படித் தான் வாழ வேண்டும் என்பது மற்றையது எப்படியும் வாழலாம் என்பது. இவ் இரு வாழ்க்கை முறைக்கும் இடையில் காணப்படும் வித்தியாசங்களை பார்ப்போமாயின் எப்படியும் வாழலாம் என்று வாழ்பவர்கள் இடத்தில் ஓர் இலட்சியமோ அதற்கான முயற்சியோ இருப்பதில்லை ஆனால் இப்படித்தான் வாழ வேண்டும் என்று வாழ்பவர்கள் இடத்தில் நிச்சயமாக ஓர் இலட்சியமும் அதற்கான முயற்சியும் காணப்படும். மிக முக்கியமான ஒன்றாகிய தன்நம்பிக்கை இவர்களிடத்தில் அதிகமாக காணப்படும். "இலட்சியம் இல்லாத மனித வாழ்வு ஆழ்கடலில் துடுப்பில்லாத படகு போன்றது" என கூறுவர். நாம் எந்த ஊருக்குச்செல்லப் போகிறோம் என்று முடிவெடுக்காமல் பயணிக்க முடியாது. அது போலவே வாழ்க்கைப் பயணத்தில் இலட்சியப் பாதையை வகுத்துக் கொள்ள வேண்டும்.

அதன் பின்னர் அப்பாதையில் பயணிக்கும் போது வீதி விபத்துக்களை எதிர் கொள்வது போல நம் சமூகத்தால், உறவினர்களால், மற்றும் எமக்கு முகம் தெரியாதவர்களால் கூட பல்வேறுபட்ட பிரச்சனைகள் ஏற்படக்கூடும். இந்த நிலையில் மன உறுதியுடன் செயல்பட வேண்டும். வாழ்க்கையில் தவறிவிழும் மற்றவர்களால் விழுத்தப்படும் சந்தர்ப்பங்களில் எல்லாம் அப்படியே வீழ்ந்து கிடக்கக்கூடாது. மறுகணமே புத்துணர்வுடன் எழுந்து செயற்பட வேண்டும். பிறரது உதவிக்காக காத்திருக்கக் கூடாது. எமக்கு தேவையான எல்லா விதமான வலிமையும், உதவியும் எமக்குள்ளேயே குடி கொண்டிருக்கிறது. அதை நாம் சரியாக உபயோகிப்போம் ஆனால் அநேகமாக தருணங்களில் பிறரது உதவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமக்கு தேவையிருக்காது. மற்றும் எமது குறிக்கோள் உயர்ந்ததாக இருக்க வேண்டும். அப்போது தான் வாழ்க்கையில் உயர்வினை பெற முடியும்.

குறிக்கோள் மட்டும் இருந்து விட்டால் போதுமா? குறிக்கோளை அடைவதற்கான முயற்சியும் தேவை. குறிக்கோள் என்ற ஊரினை சென்றடைவதற்கு நாம் பயணிக்கும் வண்டியில் இரு சக்கரங்களாக முயற்சியும், தன் நம்பிக்கையும் இருத்தல் வேண்டும். இரண்டில் ஒன்று இல்லாவிடினும் எம்மால் பயணத்தை தொடர முடியாது. நாம் சிறு வயதில் ஆமையினதும், முயலினதும் கதையை கேட்டிருக்கிறோம். அதில் என்ன இருக்கிறது. என்று நினைக்க கூடும். அதிலும் நாம் கற்க வேண்டிய விடயங்கள் இருக்கின்றன. எந்த ஒரு சிறிய விடயமானாலும் அதை உற்று நோக்குதல் வேண்டும். சிறு துரும்பும் பல் குத்தஉதவும் அல்லவா? சரி நாம் கதைக்கு வருவோம். ஆமையுடன் ஓடுவதை ஏளனமாக நினைத்த முயல், இவர் என்னுடன் ஓடுவதா? நான் தானே வெற்றி பெறுவேன் என நினைத்துக் கொண்டு போய் ஒரு மரத்தடியில் நித்திரை செய்தது. ஆனால் மனம்தளராத ஆமை நம்பிக்கையுடன் முயற்சி செய்தது. முயற்சியின் பலனாக முயல் எழும்பி பார்க்கும் போது. ஆமை வெற்றி இலக்கை அடைந்திருந்தது. இதற்கு மாறாக முயல் நன்றாக ஒடக் கூடியது. அதனுடன் ஓடி வெற்றி பெற முடியுமா? இப்போட்டிக்கு போகாமல் இருக்கலாம் என ஆமை நினைத்திருந்தால் இவ் வெற்றியை ஆமை பெற்றிருக்காது. அதே வேளை வேகமாக ஓடக் கூடிய முயல் ஆமையின் ஒட்ட வேகத்தை பார்த்து கேலி செய்ததுடன் தனது முயற்சியையும் கைவிட்டது. இது போல தான் எம்மிடம் எவ்வளவு திறமை இருந்தாலும் முயற்சி இல்லையாயின் நிச்சயம் தோல்வியே கிடைக்கும் என்பது இக்கதையில் இருந்து புலனாகிறது.

நாம் எந்த விடயத்தையும் துணிந்து செய்ய வேண்டும். முடியும் என்ற நம்பிக்கை இருத்தல் சிறப்பானது. எம்மில் சிலருக்கு தாழ்வு மனப்பான்மை இருக்கும். அதாவது தம்மை தாமே குறைவாக மதிப்பிடுவார்கள். இவ்வளவு திறமையான ஒருவருடன் போட்டி போடுவதா? இவ்வளவு பேருக்கு முன்னாலா? என்னால் முடியாது என்பார்கள். தம்மிடமிருக்கும் திறமைகளை அறியாதவர்கள் இவர்கள். முதலில் நாம் எமது தனித்திறமைகளை அறிந்து கொள்ள வேண்டும். சிலர் பாடுவார்கள், சிலர் நடனமாடுவார்கள், வேறு சிலர் கதை, கட்டுரை, கவிதை எழுதுவார்கள், சிலர் நன்றாக விளையாடுவார்கள். இவ்வாறு பல்வேறுபட்ட திறமை உடையவர்கள் எம்மிடத்தே உள்ளனர். ஒவ்வொருவரிடமும் வெவ்வேறு பட்ட திறமைகள் இருக்கின்றன. எம்மிடம் திறமை இருந்தால் தானே முயற்சி செய்து வெற்றி பெற முடியும். என



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு சிலர் சொல்லக்கூடும். "திறமை என்பது எல்லோரிடமும் உள்ளது. அதை சரியாகப் பயன்படுத்தினால் இலக்கினை அடைய இலகுவானது" என நம் முன்னோர் கூறி உள்ளனர். எல்லோரும் திறமையானவர்களே அத்திறமைகளை வளர்த்துக் கொள்வது எம்மில் தான் இருக்கிறது. வேறு சிலர் தமது திறமைகளை அறிந்தும் இலை மறை காயாக இருப்பார்கள். இவர்கள் தம்மைத் தாம் வளப்படுத்திக் கொள்ள வேண்டும் அப்போது தான் வாழ்க்கையில் வெற்றிக் கொடியை எற்ற முடியும்.

மற்றும் அவருக்கு கிடைத்த சந்தர்ப்பத்தைப் போல் எனக்கொரு சந்தர்ப்பம் கிடைத்திருந்தால் நானும் எனது திறமையை வெளிக் கொணர்ந்திருப்பேன் என கூறுபவர்களும் நம்மிடத்தே உள்ளனர். எந்தவொரு சந்தர்ப்பமும் எம்மை தேடி வராது. நாம் தான் சந்தர்ப்பங்களை தேடிச் செல்ல வேண்டும். எந்தவொரு சிறு விடயத்தையும் அல்லது சந்தர்ப்பத்தையும் அலட்சியம் செய்யக்கூடாது. படிப்படியாகவே முன்னேற வேண்டும். ஒரே முறையில் இலக்கை அடைவது என்பது நிகழ்தகவானது. ஆனால் முயற்சி செய்வோமாயின் எதுவுமே நிச்சயமானது.

இயலாது, முடியாது, தெரியாது போன்றவை முயற்சியாளர்களிடத்தே இருக்கக் கூடாது. முட்டுக் கட்டைகள் எதையுமே முடியும் என்ற நோக்கோடு செயற்பட வேண்டும். தெரியாதவற்றை தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் எம்மிடத்தே இருக்க வேண்டும். எமக்கு தேவையான விடயங்களை மட்டுமே தெரிந்து கொள்ள வேண்டும். பாலையும், நீரையும் சேர்த்து வைத்தால் பாலை மட்டும் பிரித்தெடுக்கும் அன்னம் போல் நாமும் விளிப்புடன் செயற்பட வேண்டும். எமக்கான இலட்சியமும், இலட்சிய பாதைக்கான முயற்சியும், நம்பிக்கையும், திடமான மனதும் இருந்து விட்டால் அனைவரும் வெற்றியாளர்களே. வெற்றிக் கொடி எந்தச் சிகரத்தில் இருந்தாலும் மனவளவால் ஊனமில்லாத எவராலும் இலகுவாக ஏற்றிவிட முடியும். நாங்கள் நன்றாக இருந்தால் போதுமா? எமது சமூகத்தையும் நல்ல நிலைக்கு இட்டுச் செல்ல வேண்டும். தமது வாழ்க்கையில் வெற்றி பெற்ற பின்னரே எந்தவொருவரும் மற்றவர்களை பற்றி சிந்திப்பார்கள். எனவே நம்மோடு நமது சமூகத்தையும் வளப்படுத்திக்கொள்ள வேண்டும். சுயநலத்தோடு வாழ்வது எளிது. பொது நலவாதியாக வாழ்வது கடினம் என்பார்கள். ஆனாலும் மனமுண்டானால் இடமுண்டு அல்லவா? மனிதனால் இயலாதது எதுவுமே இல்லை. ஆகவே எமது வெற்றிக் கொடி பறக்கும். அதே நேரம் எமது சமூகத்தினது வெற்றிக் கொடியையும் ஏற்றுவோம்.

**ஆக்கம் :- யோ. கவிதா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழுக்கு தொண்டாற்றிய தமிழக பெரியார்கள்

## ❖ புதுமைப் பித்தன்

வாழ்க்கையின் விசித்திரங்களையும், மனிதரின் விந்தைப் போக்குகளையும், முரண்பாடுகளையும், கதைக் கருக்களாக சித்தரிப்பதினை நோக்கமாக கொண்டவர் புதுமைப் பித்தன். சிறுகதை மன்னன் என புகழப்படும் இவர் சிறுகதை படைப்பிலக்கணத்திற்கு பிள்ளையார் சுழி இட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. மனித நேயத்தை தொட்டுவந்த இவருடைய சிறுகதைகள் யதார்த்தம் மிக்கவை.

இத்தகைய சிறப்பிற்குரியவராக விளங்கும் புதுமைப் பித்தனின் இயற்பெயர் விருத்தாசலம் என்பதாகும். கடலூரை அடுத்த திருப்பாதிரிப்புலியூரில் 1906 ஆம் ஆண்டு எப்ரல் மாதம் 25ம் திகதி பிறந்தார். இவரது தந்தையார் பெயர் சொக்கலிங்கம். தாயார் பெயர் பார்வதம்அம்பாள். விருத்தாசலத்திற்கு எட்டு வயதாக இருக்கும் போது தாயாரை இழந்தார். இதன் பின்னர் தந்தையார் மறுமணம் புரிந்தார். இவர் திருநெல்வேலி யோவான் கல்லூரியிலும் பின்னர் இந்துக் கல்லூரியிலும் படித்து 1931ம் ஆண்டில் "பி.ஏ" பட்டதாரியானார். படிப்பு முடிந்தவுடன். இவர் இருபத்தைந்தாவது வயதில் கமலாம்பாளைத் திருமணம் செய்து கொண்டார்.

மகன் அரசாங்க வேலை செய்ய வேண்டும் என்று சொக்கலிங்கம் விரும்பினார். ஆனால் புதுமைப் பித்தனின் மனம் முழுவதும் இலக்கிய ஈர்ப்பு குடி கொண்டு விட்டது. படிக்கும் காலங்களில் ஆங்கில நாவல்களை அதிகமாக படிப்பார். நாவல்களை படித்து அதைப் போல் தானும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தகங்கள் எழுத வேண்டும், எழுத்தாளனாக வர வேண்டும் என்கிற ஆசை அவருக்கு ஏற்பட்டிருந்தது. காலப் போக்கில் அவருடைய ஆசை நிறைவேறியது. மகன் இலக்கிய பாதையில் செல்வது சொக்கலிங்கத்திற்கு விருப்பமில்லை. இதன் காரணமாக தந்தைக்கும் மகனுக்கும் இடையில் அதிக விரிசல் எற்பட்டது. பின்னர் புதுமைப் பித்தன் வீட்டை விட்டு வெளியேறினார். மனைவியை அவரின் ஊரிற்கே அனுப்பி விட்டு தான் சென்னை சென்று வேலை தேடினார்.

அக்காலத்தில் வெளிவந்த பத்திரிகைகளான ஊழியன், காந்தி, தினமணி போன்ற பத்திரிகைகளில் சிறுகதை, நாவல்கள் எழுதி இருந்தார். மற்றும் இவருடைய காலத்தில் பிரபலமான பத்திரிகையாக காணப்பட்ட மணிக் கொடியில் எழுதியதன் காரணமாக வாசகர்களிடம் நன்றாக அறிமுகமானார். இதன் பின்னர் புதுமைப் பித்தனின் எழுத்துக்கு மாபெரும் வரவேற்பு கிடைத்தது. புதுமைப்பித்தன் கதைகள், கட்டுரைகள், சிறுகதைகள், நாவல்கள் மற்றும் நாடகங்கள் என்பவற்றோடு ஒரு கவிதை இலக்கியத்தையும் படைத்திருக்கிறார்.

"என் கதைகளில் உள்ள கவர்ச்சிக்கு ஓரளவு காரணம் நான் புனைந்து கொண்ட புனை பெயராகும்" என்ற தன்னுணர்வு அவருக்கு இருந்தது. எழுதத் தொடங்கும் போதே புதுமைப்பித்தன் என்ற புனைப் பெயரில் எழுதினார். இவர் எண்ணுவது போல் "பித்தன்" என்ற பெயரில் எழுதத் தொடங்கிய பின்பு முன்னொட்டு இணைத்துக் கொள்ளப்பட்டதன்று. இது பழமைக்கு எதிராக புதுமையின் மீது கொண்ட பித்தத்தைத் தமது உலகப் பார்வையாக பறைசாற்றுவது புனைப் பெயராகும் என்பது அறிஞர்களது கருத்து. 1935ஆம் ஆண்டிற்கு பின்னர் இவர் புதுமைப் பித்தன் என்ற பெயரிலேயே கதைகளை வெளியிட்டார். இவர் நூறிற்கு மேற்பட்ட சிறுகதைகளை எழுதியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுமைப் பித்தனது இலக்கிய பயணம் 1933ஆம் ஆண்டு தொடங்கி 1946ஆம் ஆண்டு வரை மட்டுமே... இலக்கிய துறையின் எல்லையாக சினிமா துறையில் பிரவேசித்தார். காமவல்லி என்கிற படத்திற்கு கதை வசனம் எழுதினார். பிரமாதமாக ஓடிய இப்படத்தை கண்டு தானே படம் எடுக்க விழைந்தார். இதில் தோல்வியுற்றார். கடைசியாக இவரது உடல் நிலை மிகவும் பாதிக்கப்பட்டது. வறுமையும் கூடவே வாட்டியது. நோய்க்கு சிகிச்சை செய்ய கூட பணம் இல்லாது தவித்தார். தனக்கு பண உதவி செய்யுமாறு பத்திரிகைகளில் அறிக்கைவிட்டார். ஆயினும் பலன் ஏதும் கிடைக்காத நிலையில் 1948ஆம் ஆண்டு ஜீன் 30ஆம் திகதி இறையடி எய்தினார்.

## ❖ அறிஞர் அண்ணா

திராவிட முன்னேற்ற கழகத்தினை நிறுவியவரான அண்ணா அவர்கள் சிறந்த ஜனநாயகவாதி ஆவார். பாண்டவர் வனவாசம், வள்ளி திருமணம், சந்திரமதி புலம்பல், இராமர் பட்டாபிசேகம் போன்ற மூட நம்பிக்கைகளை வளர்க்கும் கதைகளுக்கும், நாடகங்களுக்கும் முடிவுகட்ட தீர்மானித்த அண்ணா அவர்கள் அறிவு பூர்வமான கட்டுரைகளையும், சிறந்த நாடகங்களையும், கதைகளையும் மக்கள் மத்தியில் கொண்டு வந்தார். இதன் மூலம் அக்கால மக்களிடம் இருந்த அறியாமையை நீக்கினார்.

தமிழக தலைவர்களில் சிறந்து விளங்கிய இவர் 1909ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15ஆம் திகதி பிறந்தார். அண்ணா அவர்கள் தாய் தந்தையுடன் வாழ்ந்த காலங்களை விட இவரது சிறிய தாயாகிய தொத்தா என்பவருடன் வாழ்ந்த காலங்கள் அதிகம். காஞ்சி புரம் உயர் பாடசாலையில் அண்ணா படித்தார். வகுப்பில் சிறந்த மாணவனாகக் காணப்பட்டார். இதன் பின்னர் காஞ்சிபுரம் பச்சையப்பன் உயர்நிலை பாடசாலையிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிப்பை தொடர்ந்தார். 1930ஆம் ஆண்டு அண்ணாவுக்கும் ரமணி அம்மையாருக்கும் திருமணம் நடந்தது. "எம்.ஏ" பட்டம் பெற்ற இவருக்கு "வக்கீல்" படிப்பு படிக்க ஆசைப்பட்டு கல்லூரியில் சேர்ந்தார். ஆயினும் வறுமை காரணமாக படிப்பை இடைநிறுத்தினார். இதன் பின்னர் அவரது ஆர்வம் முழுவதும் அரசியல் மேல் இருந்தது. பேச்சாளராக உருவாக்கம் பெற்ற இவர் தமிழகம் முழுவதும் பயணம் செய்து மிகச் சிறந்த சொல் ஆற்றல் கொண்டவர் என பெயர் பெற்றார்.

அண்ணாவுக்கு குழந்தைகள் இல்லை என்பதால். உறவினர் பிள்ளைகளை வளர்ப்புப்பிள்ளைகளாக ஏற்று கொண்டார் குழந்தைகள் மீது இவருக்கு அளவற்ற பாசம் என கூறுவர். 1942ஆம் ஆண்டில் அண்ணா அவர்கள் தனது முயற்சியால் காஞ்சியில் திராவிட நாடு எனும் இதழை தொடங்கினார். இதன் பின் திராவிட முன்னேற்ற கழகத்தின் செயலாளர் ஆனார். படிப் படியாக அரசியலில் முன்னேறிய அண்ணா அவர்களது ஆட்சி முறை சிறப்பிற் குரியது. அரசாங்க பணியில் அண்ணாவின் சாதனைகள் குறித்தற்குரியவை. அரிசிக் கட்டுப்பாட்டினை நீக்கினார். விலை ஏற்றத்தை கட்டுப்படுத்த தகுந்த நடவடிக்கைகளை எடுத்தார். இது மட்டுமன்றி எளிமையாக வாழ்ந்த அரசியல் வாதியும் ஆவார். "மேட்றாஸ் ஸ்டேட்" என்பதனை "தமிழ் நாடு" என பெயர் மாற்றம் செய்தார். மதுவை ஒழிப்பதற்காக அண்ணா பெரும் பங்களிப்பினை ஆற்றினார்.

மனிதனை தெய்வமாக்கும் முயற்சியில் ஈடுபட்டிருப்பவர்களைப் பார்த்து முதலில் அவனை மனிதனாக்க முயற்சி செய்யுங்கள் என்று இவர் எழுதியிருக்கிறார். இக் கருத்து புலப்பட பேசியும் இருக்கிறார். எழுத்திலும், பேச்சிலும் ஏராளமான திறன் கொண்டவராகக் காணப்பட்டதோடு இவர் பல புத்தகங்கள், சிறுகதைகள், நாடகங்களையும் படைத்திருக்கிறார். இத்துடன் வேலைக்காரி, ஓர் இரவு போன்ற திரைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காவியங்களை படைத்ததுடன் தானே நாடகங்களிலும் நடித்தும் பெயர் பெற்றார். உலக தமிழ் மாநாட்டை நடத்தினார். தமிழ்ச்சான்றோர்களுக்கு சிலை வைத்து தமிழ் மொழிக்கு இவர் செய்த மரியாதை அழப்பரியது. அறிஞர் அண்ணா அவர்கள் 1934ஆம் ஆண்டு தொடங்கி 1969ஆம் ஆண்டு வரை சுமார் 35 ஆண்டுகள் எழுதியிருக்கிறார். அவர் எழுதியவை கிழமை இதழ்கள் என்பதால் வாரம் ஒரு கட்டுரை எழுதி இருந்தாலும் அவை 1680 என கணக்கிடப்பட்டுள்ளன. இவர் எறக் குறைய 21 புனைப் பெயரில் எழுதியிருக்கிறார். அவர் அதிகமாக எழுதியதும் பலருக்கு தெரிந்ததுமானவை சிலவே அவை பரதன், சௌமியன், வீரன், நக்கீரன், ஒற்றன், சம்மட்டி, சமதர்மன், அண்ணாத்துறை என்பனவாகும்.

1969ஆம் ஆண்டில் அண்ணாவின் உடல் நிலை மோசமடைந்தது. அவருக்கு புற்று நோய் என தெரியவந்தது. அண்ணா அவர்களை அமெரிக்காவுக்கு அழைத்துச் சென்று சிகிச்சை வழங்கப்பட்டது. சற்று குணமடைந்த பின் மீண்டும் இந்தியாவுக்கு அழைத்து வரப்பட்டார். ஆனால் நோய் அவரை விடுவதாக இல்லை. வைத்தியர்களின் முயற்சிகள் பயனளிக்கவில்லை. 1969ஆம் ஆண்டு பெப்ரவரி திங்கள் இரண்டாம் திகதி அண்ணா பூதவுடலை விட்டு மறைந்தார். அன்னாரது இறுதி யாத்திரையில் தமிழக மக்கள் வெள்ளமென கலந்து கொண்டனர்.

## ❖ வீரமாமுனிவர்

தமிழ் மொழிக்குத் தொண்டு செய்த மேல் நாட்டு தமிழ் அறிஞர்களில் சிறப்பிற்குரியவர் வீரமாமுனிவர். இவர் இத்தாலி நாட்டைச் சேர்ந்த கிறிஸ்தவ பாதிரியார். இத்தாலி நாட்டில் உள்ள காஸ்திக்கிளியோன் என்ற நகரத்தில் காண்டால்போ பெஸ்கி என்பவரும் அவருடைய மனைவி எலிசபெத் என்பவரும் வாழ்ந்து வந்தனர். இவர்களுக்கு 1680ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஆறாம் திகதி கான்ஸ்டன்டைன் ஜோசப் பெஸ்கி என்பவர் புதல்வனாக பிறந்தார். ஆம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரமாமுனிவரின் இயற்பெயர் கான்ஸ்டன்டைன் ஜோசப் பெஸ்கி ஆகும்.

பெஸ்கி தனது பதினெட்டாவது வயதில் சமயத் தொண்டு ஆற்ற யேசு சபையிலே சேர்ந்தார். துறவியான அவர் கத்தோலிக்க பாதிரிமார்கள் கழகத்தில் பயிற்சி பெற்றார். பல மொழிகளை கற்ற இவர் 1709 ஆம் ஆண்டு குரு பட்டம் பெற்று சமய திருப்பணிக்கு உரிய தகுதிகளையும் அடைந்தார். தனது முப்பதாவது வயதில் தமிழ் நாட்டிற்கு கிறிஸ்தவ மதத்தை பரப்பும் மத போதகராக சென்றார். அங்கு சென்று தனது பெயரை தைரியநாத சுவாமி என்று வைத்துக் கொண்டார். இதன் பின்னர் இவருடைய தமிழ் புலமையைக் கண்ட மதுரை தமிழ் சங்கத்தவர்கள் வீரமாமுனிவர் என இவருக்கு பெயரிட்டனர். அந்நாளிலிருந்து சிறந்த தமிழாசிரியராக விளங்கினார். சுப்பிரதீபக்கவிராயர் என்பவரிடம் வீரமாமுனிவர் முறையாக தமிழ் மொழியை கற்றார். இத்துடன் வட மொழி, தெலுங்கு முதலிய மொழிகளையும் கற்றார்.

தஞ்சையை அடுத்த ஏலாக்குறிஞ்சி என்கிற ஊரில் மேரி ஆலயம் அமைத்து அங்கு மதப்பிரச்சாரம் செய்து வந்தார். இக்காலத்திலேயே கலம்பகம், கலிவெண்பா, அடைக்கலை மாலை போன்ற சிற்றிலக்கியங்களை படைக்கத் தொடங்கி விட்டார். வீரமா முனிவர் இயற்றிய பெரும் காப்பியம் “தேம்பாவணி” என்பதாகும். தேம்பாவணி என்பதற்கு பொருள் வாடாத மல்லிகை ஆகும். மூன்று காண்டங்களையும், முப்பத்திஆறு படலங்களையும், மூவாயிரத்தி ஆறுநூற்றிபதினைந்து பாடல்களையும் கொண்ட இந்நூல் யேசுநாதரின் வளர்ப்புத் தந்தை சூசையாரின் வரலாற்றினை பற்றி கூறுகின்றது. இந் நூலில் திருவள்ளுவர், சேக்கிழார், மாணிக்கவாசகர், அப்பர் முதலான புலவர்களின் சொற்களும் கருத்துக்களும் இடம் பெற்றுள்ளன. மேல் நாட்டுப் புலவர்களான ஹோமர், வேர்ஜில், தாந்தே, தாசோ போன்றவர்களின் கருத்துக்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேம்பாவணியில் இடம்பெற்றுள்ளன. இந் நூல் மதுரை தமிழ் சங்கத்தில் அரங்கேற்றப்பட்டது. இந்நூல் கத்தோலிக்கர்களுக்கு கலைக் களஞ்சியமாக விளங்குகிறது.

தேம்பாவணியைத் தொடர்ந்து வேதியர் ஒழுக்கம், வேத விளக்கம், வாமன கதை, ஞான முணர்த்தல் போன்ற உரைநடை நூல்களைப் படைத்தார். வீரமாமுனிவர் அத்தோடு பரமார்த்த குருவின் கதை என்கிற நகைச்சுவைக் கதையையும் எழுதினார். இவர் 1732இல் சதுரகராதி எனும் பெயருடைய தமிழ் அகராதி ஆகும். திருக்குறளின் சிறப்பை மேல் நாட்டாருக்கு அறியச் செய்த பெருமை வீரமா முனிவரையே சாரும். வீரமாமுனிவர் உரைநடை எழுதுவதில் வல்லவர். திருக்காவலூர்க்கலம்பகம், அன்னை அழுங்கல் அந்தாதி, கித்தேரி அம்மாள் அம்மானை, அடைக்கல மாலை, கல்வெண்பா மாலை ஆதிய சிற்றிலக்கியங்களையும் இவர் இயற்றினார்.

தமிழ் எழுத்தில் மாற்றம் இவருக்கு பிடித்த ஒன்று இவரது பரமார்த்த குருவின் கதை கன்னடம், தெலுங்கு, ஆங்கிலம் இன்னும் பல மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டது. இவர் தொல்காப்பியத்திற்கு விளக்கம் எழுதினார். இறுதி வரை சமய தொண்டிற்கும் தமிழ்ப் பணிக்கும் தம் வாழ் நாளை அர்ப்பணித்த வீரமாமுனிவர் 1747 ஆம் ஆண்டு பெப்ரவரி நான்காம் நாள் இறை பாதமடைந்தார்.

## ❖ கண்ணதாசன்

காரைக் குடிக்குச் சற்று தூரத்தில் இருக்கும் சிறு கூடல் பட்டியில் சிறந்து விளங்கிய குடும்பம் நல்லான் செட்டியார் குடும்பம். இக்குடும்பத்தை சேர்ந்தவர் சாத்தப்பச்செட்டியார். இவரது மனைவி விசாலாட்சி. இவர்களுக்கு ஒன்பது பிள்ளைகள். அவர்களில் மூத்தபிள்ளை முத்தையா. இதுவே கவிஞரின் இயற்பெயர். இவர் 1892 ஆம் ஆண்டு ஜீன் மாதம் 24ம் திகதி பிறந்தார் .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் உள்ளூர் பள்ளியில் ஏழாம் வகுப்பை முடித்தார். பின்பு அமராவதி புதூர் சுப்பிரமணிய செட்டியார் குரு குலத்தில் சேர்ந்து தமிழ் வித்துவான் படிப்பை மேற் கொண்டார். குடும்ப சூழ் நிலை காரணமாக படிப்பை இடை நிறுத்தினார். உறவினர் வீட்டிற்கு சுவீகாரம் போனார். பதினாறு வயதில் வீட்டை விட்டு வெளியேறியதோடு கண்ணதாசன் என்கின்ற பெயரையும் வைத்துக் கொண்டார். திரு மகள், திரைஒலி, மேதாவி போன்ற பத்திரிகைகளில் பணியாற்றி பின்பு சண்ட மாருதம் பத்திரிகைக்கு ஆசிரியரானார்.

இவரது திரையுலக பயணமாக முதலில் மாடர்ன் தியேட்டர்ஸ் படங்களில் நகைச்சுவை காட்சிகள் மட்டும் எழுதும் வாய்ப்பு கிடைத்தது. பின் விளம்பர மனேஜர் ஆனார். எழுத்து துறையில் முன்னேற வேண்டும் என்ற ஆவல் காரணமாக இந்த வேலையை இராஜினாமா செய்தார். இவர் எழுதிய முதல் பாடல் 'கங்கா திருமணமே! உன் கனவெல்லாம் நனவாகும் ஒரு தருனமே என்று தொடங்குவது ஆகும். கதை எழுதப் போய் பாட்டு எழுதும் வாய்ப்பு கிடைத்தது. அதை எண்ணி கவிஞர் அளவில்லாத மகிழ்ச்சி அடைந்தார். 1952 இல் கல்லக்குடி பெயர் மாற்றப் போராட்டத்தில் கருணாநிதியுடன் இவரும் கலந்து கொண்டு கைதானர். பதினெட்டு மாதகால சிறை தண்டனை அனுபவித்தார்.

சிறையில் இருந்த காலத்தில் கதைவசனம் எழுதிய முதல் படமாக இல்லற ஜோதி காணப்படுகிறது. திருக்கோஷ்டியூரில் தேர்தலில் நின்று தோல்வியுற்றார். இதன் பின் பிலிம்ஸ் என்ற படக் கம்பனியை தொடக்கி "மாலையிட்ட மங்கை" என்ற படத்தை தயாரித்தார். இவரே கதை, வசனம், பாடல்கள் எழுதி முற்பது நாட்களில் தயாரித்து வெளியிட்டார். இப்படம் பெரும் வெற்றி கண்டது. பாடல்கள் எழுதுவதிலும் படங்களுக்கு கதைவசனம் புனைந்து தருவதிலும் ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தில் தனக்கு இணையானவர் ஒருவரும் இல்லை என்கிற நிலையை அடைந்தார். இவர் ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட பாடல்களை எழுதி கவியரசு கண்ணதாசன் என போற்றப்பட்டார்.

கண்ணதாசனின் எழுத்துலகப் படைப்புகளில் சிறந்ததாக காணப்படுவது "அர்த்தமுள்ள இந்து மதம்" ஆகும். இந் நூலின் மூலம் கவிஞர் இந்து சமூகத்திற்கு செய்த சேவை மிகப்பெரியது. இவரது திரைப்பட பாடல்கள் கருத்துச் சுவை ஆழமானவை. அவை இன்றும் பேரும், புகழுடனும் இருக்கின்றன. அன்னாரது அரசியல் பயணம் 1961இல் ஆரம்பமானது. அகில இந்திய காங்கிரஸ் பதவி வகித்தார். 1970இல் மத்திய மாநில அரசுகளின் சிறந்த பாடலாசிரியர் விருது பெற்றார். 1987இல் தமிழ் நாட்டு அரசவைக் கவிஞராக நியமிக்கப்பட்டார். 1979இல் சேரமான் காதலிக்காக சாகித்ய அக்கடமி விருது வழங்கப்பட்டது. காவியம், கதை, கட்டுரை, நாடகம், சுயசரிதை என அவர் எழுதிய நூல்கள் 105.

டெட்ராய்டு நகர் தமிழ் சங்க விழாவில் கலந்து கொள்ள 1981 இல் அமெரிக்கா சென்றார். அங்கு உடல் நலக்குறைவு ஏற்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு 1981.10.17 அன்று இறைவனடி சேர்ந்தார். அவரது உடல் விமானத்தில் சென்னைக்கு கொண்டு வரப்பட்டு 22ஆம் திகதி தகனம் செய்யப்பட்டது. 25 ஆண்டுகளுக்கு மேல் சினிமா உலகில் கொடிகட்டிப் பறந்த கவிஞரின் புகழ் இன்றும் மறையாதுள்ளது.

உஷாத்துணை நூல் :-

1. இணையற்ற சாதனையாளர்கள்
2. உலக வரலாறு
3. பத்திரிகைகள்

**ஆக்கம்: யோ. கவிதா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றியின் ரகசியம்

சில பேருக்கு தொட்டதெல்லாம் வெற்றியாக முடியும். சில பேருக்கு தொட்ட தெல்லாம் தோல்வியாக அமையும். இதன் ரகசியம் தான் என்ன?

ஜப்பானில் பெரிய வீரர் ஒருவர் இருந்தார். அவரிடம் படை வீரர்கள் கொஞ்சப் பேர் தான் இருந்தார்கள். சிறிய படை பலத்தை வைத்துக் கொண்டு பெரிய பெரிய படைகள் எல்லாவற்றையும் அவர் முறியடித்திருக்கிறார். அவ்வளவு சாமர்த்தியம் உள்ளவர் அத்தளபதி ஒரு சமயம் அவர் எதிரியின் மீது படையெடுத்துச் சென்றிருக்கிறார். அப்போது அவருடைய படைத் தலைவர்களுக்கும் ஏனைய படை வீரர்களுக்கும் ஒரு சந்தேகம் ஏற்பட்டது. இந்தப் போரில் நாம் வெற்றி பெற முடியுமா? என்பது தான் அவர்களுக்கு ஏற்பட்ட சந்தேகம் இருந்தாலும் அதை எப்படி தளபதியிடம் தெரிவிப்பது.

மிகவும் யோசனை செய்தார்கள் கடைசியாக கொஞ்சம் துணிச்சலை வரவழைத்துக் கொண்டு மெதுவாக கேட்டு விட்டார்கள். தலைவர் பார்த்தார். அவர் சரி அதை நாம் முடிவு செய்ய வேண்டாம் எமது விகாரைக்கு போய் விட்டு வருவோம் பூவா, தலையா போட்டுப் பார்ப்போம். என்ன வருகிறதோ அதன் படி செயல்படுவோம் என்ன சொல்கிறீர்கள்?.. ஏனென்றால்.... போருக்கு செல்லும் போது முழு மனதோடு போக வேண்டும்... மனதில் ஊசலாட்டம் இருக்கக் கூடாது! என்று கூறினார். இவர் கூறியதற்கு தலைவர்களும் படைவீரர்களும் சரி என்று ஒப்புக் கொண்டார்கள். உடனே அவர்கள் எல்லோரும் அங்கே பக்கத்தில் இருந்த புத்தர் கோயிலுக்குச்சென்றார்கள்.

தலைவர் உள்ளே சென்றார். எல்லோரும் ஆவலோடு வெளியில் காத்துக் கொண்டிருந்தார்கள் ரொம்ப நேரத்திற்குப் பிறகு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தளபதி விகாரையிலிருந்து வெளியே வந்தார். அவர் படைத் தலைவர்கள், படைவீரர்கள் எல்லோரையும் அருகில் அழைத்தார் அவர்கள் முன்னிலையில் ஒரு தங்கக் காசை எடுத்தார்.

இதோ பாருங்கள்.. இப்போது பூவா, தலையா போட்டுப் பார்க்கலாம். பூ வந்தால் தோற்று விடுவோம். தலை வந்தால் வெற்றி பெறுவோம் பூ விழுந்தால் போர் வேண்டாம் அதைத் தவிர்த்து விடுவோம். தலை விழுந்தால் போருக்குப் போவோம். விதி இப்போது நம் கையில் தான் இருக்கிறது. இங்கே என்ன தீர்ப்பு கிடைக்கிறதோ அதன்படியே நாம் நடந்து கொள்வோம் என்று கூறிவிட்டு தங்கக் காசைச் சுண்டினார்.

அது சுழன்று மேலே போய் கணீர் என்று தரையில் விழுந்தது. எல்லோரும் ஆவலோடு அதைக் குனிந்து பார்த்தார்கள். தலை விழுந்திருந்தது. அனைவருக்கும் ஒரே மகிழ்ச்சி ஆரவாரம். அதன் பிறகு அவர்களுக்கு போருக்கு போவதா? வேண்டாமா? என்ற சந்தேகம் வரவில்லை. எல்லோரும் உறுதியான முடிவோடு போருக்குச் சென்றார்கள். வெற்றியோடு திரும்பி வந்தார்கள். கோலாகலமாக வெற்றி விழா நடந்து கொண்டிருக்கிறது. அப்போது துணைப்படைத்தலைவர் உரை நிகழ்த்தினார் அதில் அவர் இந்த வெற்றியைத் தங்க நாணயம் தான் முடிவு செய்தது அதனால் விதியை யாரால் வெல்ல முடியும்? என்று கூறினார்.

அவர் பேசிவிட்டு உட்கார்ந்தார் இப்போது தளபதி தன்னிடமிருந்த அந்தத் தங்கக் காசை எடுத்து இரகசியமாக துணைப்படைத்தலைவரிடம் கொடுத்தார். அவர் அதை வாங்கிப் பார்த்தார். அந்த நாணயத்தின் இரு பக்கமும். தலைதான் இருந்தது. இதிலிருந்து என்ன தெரிகிறது வெற்றியின் இரகசியம் தான் என்ன? மனஉறுதிதான். எனவே எதைச் செய்தாலும் மனதில் குழப்பம் இருக்கக் கூடாது "எண்ணித் துணிக கருமம்" இது வள்ளுவர் வாக்கு.

**ஆக்கம் :- ச . சாமிளா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பே.......

## (பாட்டு)



உன்னை கண்டது
குற்றமா.........
இல்லை காதல் செய்தது
குற்றமா........
நீ எதற்காக என்னை
வருத்துகின்றாய்.......... அன்பே................

அடி பெண்ணின் பெருமையே
மௌனம்...........
அது உனக்கே சொந்தமானதோ........
மௌனம் என்ற யோதியினுள்ளே........
காதலை எரிப்பது சரியா........
பதில் சொல்லடி பேதைப்
பெண்ணே.......

(உன்னை கண்டது குற்றமா)

கண்களின் வேதனையை
கண்ணீர் துளிகள் காட்டிடுமே........
எந்தன் வேதனையை
நெஞ்சம் காட்டிடுமோ........ பெண்ணே........
நீ எதற்காக என்னை...........
வருத்துகின்றாய்........ அன்பே

(உன்னை கண்டது குற்றமா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளையாமல் நதிகள் இல்லை
வலிக்காமல் வாழ்க்கை இல்லை
வரும் எதிர்காலம் நம் வாழ்வை
மாற்றும் என்பது நிச்சயமே............

(உன்னை கண்டது குற்றமா)

வரும் துயரம் கண்டு
சோர்ந்து விடாதே - அன்பே
நம் காதல் நிச்சயமாய்
நிறைவேறும்.......
உண்மை காதல் என்றும்
தோர்த்ததில்லை....... அன்பே

(உன்னை கண்டது குற்றமா)

**ஆக்கம் : கு . ரஜீபன்**
**பாடியவர்கள் :**
**த. விேனோஜித் , இ. விஜயகுமார்**

**ஈசன் அடியிற் பணிந்திருப்போம்**
**ஏந்து முடி மீதும் ஏறி நிற்போம்**
**பூசை செய்யும் அடியவரின் - உள்ளம்**
**பொங்கு கனிப்பெல்லாம் காட்டி நிற்போம்**
**- கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்றும் நட்போடு
## (இசையும் கதையும்)

காலை ஒன்பது மணியான போதும் ரமேஷ் கல்லூரிக்கு போகவில்லை. வீட்டு வாசலில் தவமிருந்தான். காத்து காத்து கால்கள் தான் வலித்தன. பொறுமை அற்றவனாய் அங்கும் இங்கும் நடந்தான். காத்திருக்கும் ஒவ்வொரு நிமிடங்களும் அவனுக்கு யுகங்கள் போவது போல் கனத்தன. கடைசியாக வாசல் தூணில் சாய்ந்தவனது நினைவுகள் பள்ளி வாழ்க்கையை இசை மீட்டின. ஆம் அந்தக் காலத்தில் ரமேசும் ஒரு கீரோ தான். படிப்பில் அல்ல குழப்படியில் அவனை திட்டாத ஆசிரியர்களே கிடையாது. சக மாணவிகள் கூட

“திட்றாங்க திட்றாங்க எதுக்கு திட்றாங்க
தம்மடிச்சா திட்றாங்க சயிட்டடிச்சா திட்றாங்க
றாக்கிங் பண்ணா திட்றாங்க நயிட் வாக்கிங் போனா திட்றாங்க
டாடியும் மம்மியும் திட்றாங்க ஒரு கோல்டு சவுண்டில் திட்றாங்க
திட்றாங்க திட்றாங்க எதுக்கு திட்றாங்க...”

வகுப்பு ஏற ஏற இவனது படிப்பும் குறைந்து கொண்டே சென்றது. இந்த நேரத்தில் தான் இவனுக்கு பத்மா, நிதர்சனா எனும் தோழிகளின் நட்பு கிடைத்தது. இவர்களும் சரியான அட்டகாசம். படிப்பிலும் கண்தான். பத்மா முதலாம் பிள்ளை என்றால் நிதர்சனா இரண்டாம் பிள்ளையாக வருவாள். விளையாட்டை பொறுத்த வரை நிதர்சனாவை அசைக்க அக்கல்லூரியில் எவருமே இல்லை. பூஞ்சிட்டுக்களாய் சுற்றித்திரிந்த அவர்கள் கூட்டணியில் இணைந்த ரமேசும் அன்று முதல் படிப்பில் புலி தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வானம் பெருசு தான் பூமி பெருசு தான்
அதற்கு மேலையும் நட்பு பெரிசு தான் எங்க கையில்
சுலழுது பூமி
மலையும் நமக்கு தான் நதியும் நமக்கு தான்
கடலும் நமக்கு தான் நட்பு ஏது சொந்த மென்னு காமி
நாள் தோறும் திருநாளாக வாழ்வை கொண்டாடலாம்.
ராவெல்லாம் நிலவில் விளையாடி இளமை கொண்டாடலாம்
அந்த வானம் பெருசு தான்..............."

பௌர்ணமி நிலவைப் போல் இவர்கள் நட்பும் வளரத் தொடங்கியது. இவர்கள் நட்பை புரிந்து கொண்ட வீட்டார் முழு சுதந்திரம் வழங்கினர். அன்று கல்லூரிகளுக்கிடையில் கூடைப் பந்தாட்டம் நடைபெற்றது. நிதர்சனா தலைமையில் அவர்கள் கல்லூரி அணியும் போட்டியிட்டது. ரமேசும் பத்மாவும் ஆவலுடன் பார்த்துக் கொண்டிருந்தனர். ஆனால் அவள் அணி தோற்றுவிட்டது. மிகவும் கவலையுள்ள அவள் ஒன்றும் பேசாது போனாள்.

தனது கல்லூரியும் உயிர் தோழியும் விளையாட்டில் தோல்வியடைந்தமையால் பத்மாவும் கவலையில் முழ்கியிருந்தார். இதே யோசனையில் இருந்த பத்மாவை அழைத்த நோய்வாய்ப்பட்ட அவளது தந்தை அவளுக்கு திருமணம் பேசி இருப்பதாக கூறினார். இதை கேட்டவுடன் விண்ணுலகமே தனது தலையின் மேல் விழுந்தது போல் கலங்கி நின்றாள். "இல்லை இப்போது என்ன அவசரம்?" என கூறினாள். அதற்கு அவளது தந்தை என்னை விட்டா உனக்கு யார் இருக்கினம் சொல்லுறதை கேட்டு நட என முடிவாக கூறிவிட்டார். "எனக்கு என்ர நண்பர்கள் இருக்கினம்" என்றாள். "நண்பர்கள் எத்தனை நாளைக்கு வருவீனம்" என்றார். இறுதியில் தந்தையின் வாதமே ஜெயித்தது. அவள் இப்போது கல்லூரிக்கு வருவதில்லை. ஒவ்வொரு நாளும் பின்னேரம் ரமேசும், நிதர்சனாவும் பத்மா வீட்டில் தான். ரமேஷின் முன் யாரோ மணி அடிக்கும் சத்தம் கேட்டு திடுக்கிட்டு பார்த்தான். எதிரே தபாற்காரன் கடிதத்தை நீட்டிய படி நின்றான். ஆவலுடன் கடிதத்தை வாங்கி பார்த்து விட்டு பெருமுச்சு விட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசித்த கடிதத்தை தனது சட்டைப் பைக்குள் வைத்து விட்டு அவசர அவசரமாக மோட்டார் வண்டியை எடுத்துக் கொண்டு புறப்படலானான். வண்டி முன் நோக்கிச் செல்லச் செல்ல அவனது எண்ணங்கள் பின் நோக்கியே நகர்ந்தன. அன்று கல்லூரியின் கடைசி நாள். ரமேசுவுக்கும் நிதர்சனாவுக்கும் பட்டமளிப்பு விழா குடும்பத்தார்கள், உறவினர்கள் என்று எல்லோருமே வந்திருந்தனர். ஆனால் பத்மா மட்டும் வரவில்லை. இனிப்பை காட்டி ஏமாற்றப்பட்ட குழந்தைகளை போல உணர்ந்த இருவரும் வீட்டிற்கு சென்று தமது உடைகளை ஒரு பையில் எடுத்து அடுக்கினர். இதை கண்ட நிதர்சனாவின் தாயார் எங்கே போறாய்? என கேட்டார். தெரிந்து கொண்டே கேக்கிறது நியாயமா? என தயாருக்கு பதில் கூறினாள். வழமையாக தாயார் கேட்கும் கேள்விகளை அவளின் தாயாரும் அடுக்கினாள். இவற்றையொல்லம் பொருட்படுத்தாமல் பயணமானாள். ரமேசும் நிதர்சனாவும் ரயில் நிலையத்தில் சந்தித்தனர். இரவு பகல் பயணத்தை முடித்து விட்டு வண்டியிலிருந்து இறங்கியவர்களை பத்மாவும் அவளது தந்தையும் வரவேற்று தாம் திருமணத்திற்காக எடுத்திருக்கும் வீட்டிற்கு அழைத்துச் சென்றனர். மாப்பிள்ளை வீட்டாரின் செலவில் திருமணம் நிறைவேறியது. மணமக்கள் மறு நாளே இந்தியாவிற்கு புறப்படலாயினர். ரமேசும் நிதர்சனாவும் விமான நிலையம் வரை சென்று வழியனுப்பி வைத்து விட்டு வீடு திரும்பினர்.

"பிரிவொன்றை சந்தித்தோம் முதல் முதல் நேற்று
நுரையீரல் தீண்டாமல் திரும்புது காற்று
நீ என்ற தூரம் வரை தீராதோ எங்கள் குறை
நாம் என்ற நேரம் வரை தூங்காதோ உந்தன் மழை
பிரிவொன்றை சந்தித்தோம்
முதல் முதல் நேற்று...."

வீடுகளிற்கு சென்ற இருவரும் வழமை போல் தத்தமது நாளாந்த கடமைகளில் ஈடுபட்டனர். மூன்று குருவிகளைக் கொண்ட இவர்களது கூடு இப்பொழுது இரண்டு குருவிகளைக்கொண்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருவரையும் அவர்களது வீட்டினர் வாழ்க்கையில் இணையும்படி கூறினார். அதற்கு "நாங்கள் ஒன்றாக படித்து பழகியதற்காக எம்மை திருமணம் செய்ய கூறுவது எப்படி சரியாகும். ஒரு ஆணும் பெண்ணும் பழகினால் அது கட்டாயம் காதலாக தான் இருக்க வேண்டும் என்று கூறுவது வெட்கம். நாங்கள் இருவரும் நல்ல நண்பர்கள். எமது நட்பை கேவலப்படுத்தாதீர்கள்" என்றனர். பழைய நினைவுகளுடன் சென்றவனை 'ரமேஷ் ரமேஷ்" எனும் சத்தம் தடுத்து நிறுத்தியது. என்ன ரமேஷ் வீட்டை மறந்திட்டீங்களா? என விமல் கேட்டான் "இல்லை இல்லை..... முதல் நடந்தவற்றை நினைத்துக்கொண்டு போனேன். அது தான்" விமல் ரமேஷை உள்ளே கூட்டிக் கொண்டு போய் அமர வைத்து விட்டு பரபரப்பாக இருந்த ரமேஷைப் பார்த்து ஏன் ரமேஷ் இன்றும் கடிதம் வரரேல்லையா? என்று கேட்டான். "சொல்கிறேன் முதலில் நிதர்சனாவை கூப்பிடுங்கோ" என்றான் நிதர்சனாவும் வந்துவிட்டாள். கடிதத்தை எடுத்து கொடுத்துவிட்டு "கங்கா தானாம் பாடசாலையில் முதலாவதுபிள்ளை அத்துடன் படமும் அனுப்பி இருக்கிறாள் என்று கூறி படத்தை காட்டினான். கதிரையில் சாய்ந்த ரமேசுக்கு பத்மாவின் கணவன் புற்றுநோயால் இறந்ததும் அவளும் அவளது மகளும் அநாதையாக நின்ற காட்சியே கண் முன் வந்து நின்றது. விமல், ரமேஷை தட்டிய படி என்ன யோசனையா? என்றான். இல்லை ஒன்றுமில்லை என பதில் கூறினான். "ஏன் ரமேஷ் நீ எப்ப கல்யாணம் செய்யப் போற?" என நிதர்சனா கேட்டாள். "நம்மட நட்பையும் பத்மாவின் நிலையையும் புரிந்து கொண்டு ஒரு விமல் வந்த மாதிரி எனக்கும் ஒரு பொண்ணு வருவாள்" என கூறி விடைபெற்றான்.

**ஆக்கம் :- யோ . கவிதா**

---

**"அந்த டைலர் ஆளுங்க குணத்துக்கு தகுந்த படி டிரெஸ் தைத்துக் கொடுப்பாரே........?"**

**"உனக்கு 'லூஸ்' பிட்டிங் தச்சிருக்க்கிறதைப் பார்த்ததும் நினைச்சேன்."**

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுருதியின் எண்ணங்கள்

(நாடகம்)

**பாத்திரங்கள்**

- **ஜீவா** :- (பல்கலைக் கழக மாணவன்)
- **ராகுல்** :- ஜீவாவின் வகுப்பு சக மாணவன்
- **சுருதி** :- சக மாணவி
- **பல்கலைக்கழக விரிவுரையாளர்**
- **சுருதியின் அம்மா**

(அன்று திங்கள் கிழமை விடுமுறையை கழித்துவிட்டு அனைத்து மாணவர்களும் பல்கலைக்கழகம் வருகின்றனர். அவ்மாணவர்கலுடன் ஜீவாவும் வருகின்றான்

ராகுல் :- ஏய் ஜீவா எங்கடா உன்னுடைய நண்பி சுருதி.

ஜீவா :- இன்டைக்கு அவங்க மச்சாளுடைய கல்யாண வீட்டுக்கு போய்யிட்டாங்கநாளைக்கு தான் வருவாங்க. (ராகுல், ஜீவா, சுருதி மூவரும் ஒரே பல்கலைக்கழக மாணவர்கள் சுருதி ஜீவாவின் தோழி. அவள் வீட்டின் பக்கத்திலேயே ஜீவாவின் வீடு. சுருதி பல்கலைக்கழகம் வராததைக் கண்ட ராகுல் ஜீவாவிடம் வினாவினான். இவ்வாறாக மூவரும் நல்ல மாணவர்களாகவும் நல்ல நண்பர் களாகவும் இருந்தனர் சில காலம் சென்றது. அன்று பெப்ரவரி 14).

சுருதி :- ஹாய்! ராகுல் என்றபடியே அவனருகில் வந்தாள் (அதற்கு பதிலாக ராகுல்)

ராகுல் :- ஹாய். இன்றைக்கு நீங்க ரொம்ப அழகாக இருக்கிறீங்க இன்றைக்கு நான் என்ட மனசுல உள்ளதை உங்களிட்ட சொல்லனும். சில நிமிடம் உங்களுடன் பேசவா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுருதி :- என்ன விடயம் ராகுல் சொல்லும்

ராகுல்:- நான் உங்களை எப்பபார்த்தேனோ அப்பவே இருந்து உங்களை நான் காதலிக்கின்றேன் ஐ லவ் யூ சுருதி

சுருதி :- என்ன சொல்லிறீங்க ராகுல்? (கோபம் கொண்டவளாய் கேட்டுக் கொண்டு கோபத்துடன் விடை பெற்றுச் சென்றாள். சுருதி சென்று கொண்டு இருந்தபாதைக்கு எதிராக ஜீவா நடந்து வந்தான் அவனை கண்டதும் சுருதிக்கு ஒரு சந்தோசம்).

ஜீவா :- சுருதி உங்கள நான் எங்கே எல்லாம் தேடுகின்றேன். நீங்கள் எங்கே தான் அப்படிச் சென்றீர்கள்.

சுருதி :- ஏன் ஜீவா என்ன விசயம். ஏன் தேடினீங்கள்.

ஜீவா :- நீங்க என்னட்ட தமிழ் கொப்பி கேட்டீங்கள் அதைக் கொடுக்கத்தான் தேடினேன். அதோட இன்னொரு விசயம் சொல்ல தேடினான்.

சுருதி :- அது வந்து..... அது வந்து.....நீங்க என்னை நல்லா புரிஞ்ச ஒரு நண்பி உங்களை என்னால் இழக்க முடியாது. அதனால் நான் உங்கள என்ர வாழ்கையில் சேர்க்க ஆசைப்படுகின்றேன். (அவன் கூறியதை கேட்டதும் அவளால் என்ன செய்வது என்று தெரியாமல் சற்று நேரம் அமைதியாக நின்றுவிட்டு) நான் இந்த விசயம் பற்றி யோசிக்கணும். (அன்றைய பொழுது பல்கலைக்கழகம் முடிவடைந்து அனைவரும் வீட்டிற்கு சென்றனர். சுருதியும் விட்டிற்கு சென்று அவசரஅவசரமாக அம்மாவை அழைத்தாள்)

சுருதி:- அம்மா..... அம்மா.....இன்றைக்கு பல்கலைக்கழகத்தில் ராகுல், ஜீவா இருவரும் தாங்கள் என்னை காதலிப்பதாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறினார்கள். நான் என்ன செய்வது குழப்பமாய் இருக்கிறது (என்று தாயிடம் புலம்பினாள்).

சு.அம்மா:- நீ உயர்பிரிவு படிக்கின்றாய் உனக்கு எது நல்லது எது கெட்டது என்று தெரியும். ஆகையால் யாரிடமும் கேளாது உன்னிடம் நீயே கேள்விகளைக் கேட்டு விடையை கண்டு கொள் (என்று சுருதியின் அம்மா கூறிவிட்டு உள்ளே சென்றார். மறுநாள் காலை எழுந்து சுருதி பல்கலைக்கழகம் செல்ல ஆயத்தமானாள்.)

சுருதி :- அம்மா நான் போய்யிட்டு வாரன். (என்றுகூறியபடி சென்றாள் பல்கலைகழகத்தின் உள்ளே சென்றதும் அவளை எதிர்பார்த்துக்கொண்டு ராகுல், ஜீவா ஆகிய இருவரும் காத்திருந்தனர் சுருதி வருவதை கண்ட ராகுல் சுரதியை நோக்கி ஓடிச்சென்றான்.)

ராகுல் :- நான் நேற்று சொன்னதுக்கு என்ன முடிவு எடுத்தனீங்கள்?

சுருதி :- பெரும் மூச்சு விட்டபடியே ஐ லவ் யூ ராகுல் (என்று கூறினாள். அவள் அவ்வாறு கூறியதும் ராகுல் வானத்துக்கும் பூமிக்குமாய் துள்ளிக்குதித்தான் சுருதி முகத்தில் கோபத்துடன் ஜீவாவிடம் சென்றாள்) ஜீவாஎன்னை மன்னித்துக்கொள்ளுங்கள் நான் உங்களைக் காதலிக்கவில்லை நான் காதலிப்பது ராகுலைத்தான் நீங்கள் தயவு செய்து என்னை மறந்து விடுங்கள்.

ஜீவா :- எனக்கு தெரியும் உங்களைப் போல பணக்காரப் பெண்கள் பணக்கார ஆணைத்தான் காதலிப்பீர்கள் எங்களைப் போல ஏழைகளை நண்பனாகவும் வேலைக்காரனாகவும் மட்டும் தான் பாவனை செய்வீர்கள். நீங்கள் ராகுலை காதலித்து கல்யாணம் செய்து சந்தோசமாக இருங்கள் ஆனால் உங்களை நினைத்தபடி நான் இருக்க மாட்டேன் எந்தப் பணம் என்னிடம் இல்லை என்று என்னை வெறுத்தீர்களோ அந்தப் பணம் போதும் போதும் எனும் அளவிற்கு உழைப்பேன் (என்று கோபத்துடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்திவிட்டு வகுப்பறைக்குள் சென்றான் அங்கு விரிவுரையாளர் வந்தார்).

விரிவுரையாளர் :- மாணவர்கள் அனைவருக்கும் வணக்கம். நான் ஒரு முக்கிய விடயம் சொல்லப் போகிறேன். நாளைக்கு அனைவருக்கும் கடைசி ஆண்டுப்பரீட்சை நடைபெறப் போகுது ஆகையால் அனைவரும் நன்றாக படித்துவிட்டு வந்து பரீட்சை எழுதி சித்தி பெறவேண்டும் (என்று கூறினார் பின்னர் தன்னுடைய கற்பிக்கும் கடமையை ஆரம்பித்தார்) மறுநாள் அனைத்து மாணவர்களும் படித்து விட்டு பரீட்சை எழுதும் ஆவலுடன் பல்கலைக்கழகம் வந்து பரீட்சை எழுதி விட்டு சென்றனர் இரண்டு நாட்கள் சென்ற பின் பரீட்சை முடிவுகள் வெளியாகியது அதனை அனைவரும் அவலுடன் சென்று பார்த்தனர். அங்கு ஜீவாவும் தனது புள்ளிகளைப் பார்த்தான். அவன் தான் முதலிடத்தில் பாஸ் பண்ணியவன் அவனுக்கு சந்தோசம். அச்சந்தோசத்துடன் அனைவரும் பிரிந்தனர். சில வருடங்களின் பின்பு ராகுல் ஜீவாவின் வீட்டிற்கு வந்தான்.

ராகுல் :- ஜீவா ஜீவா (என்று அழைத்தான் அவன் குரல் கேட்டு ஜீவாவின் வீட்டிற்குள் இருந்து வேறு ஒருவர் வெளியில் வந்தார்) தம்பி ஜீவா இங்கு இல்லை வேறு வீடு சென்று விட்டனர் அந்த வீட்டின் விலாசம் இது தான் என்று ஒரு காட்டை நீட்ட அதனை வாங்கிக்கொண்டு ராகுல் சென்றான் பின்னர் அவன் அந்தக்காட்டில் இருந்த விலாசத்தை தேடிப்பிடித்தான் அங்கு சென்று ஜீவா ஜீவா என அழைத்தான்.

ஜீவா :- யாரது வாங்க உள்ளே என்று சொன்னவாறே ஜீவா வெளியே வந்து பார்க்கிறான். ராகுல் அவனை கண்டதும் அதிர்ச்சியடைந்தவாறே என்ன விடயம் ராகுல் இவ்வளவு தூரம் என்று கேட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராகுல் :- எனக்கும் சுருதிக்கும் வருகின்ற 14ம் திகதி கலியாணம் அதுதான் காட் கொடுக்க வந்தேன் என்றவாறே காட்டை நீட்டினான்.

ஜீவா :- நான் நிச்சயமாக இந்தக் கல்யாணத்துக்கு வருவேன் என்று கூறினான் ஜீவா.

ராகுல் :- ஜீவா அப்ப நான் போயிற்று வரட்டுமா? என்று கேட்டு விடைபெற்றுச் சென்றான் (மூன்று நாட்களின் பின்பு ஜீவா ராகுலின் கல்யாண வீட்டிற்கு செல்ல ஆயத்தமாகி கல்யாணவீட்டிற்கு சென்றான். அங்கு மிகவும் அழகாக கல்யாண ஆயத்தம் நடைபெற்றது. ராகுல் மணமகன் கோலத்தில் வந்து இருந்தான். மணமகளாக இருக்க வேண்டிய சுருதியை அழைக்க சென்றனர்)

சு.அம்மா:- ஐயோ அடிப்பாவி இப்படிப் பன்னீட்டாயே என்று பெரிதாக கத்தினார் அதனைக் கேட்ட அனைவரும் ஓடிச்சென்று பார்த்தனர் சுருதி நிலத்தில் வீழ்ந்து கிடப்பதைக் கண்டனர் அங்கு ராகுலும் செல்கின்றான் ராகுல் சுரதியின் அருகில் சென்று பார்த்தான் அவளது கையில் ஒரு கடதாசி இருப்பதைக் கண்டு அக்கடதாசியை பதட்டத்துடன் எடுத்து படிக்கலானான்.

அன்புள்ள அம்மா. ராகுல் ஜீவா நான் இந்த ஊரை விட்டுப் போகிறேன் எனக்கு இந்தக் கல்யாணத்தில் இஸ்டம் இல்லை. நான் உண்மையில் ராகுலையோ ஜீவாவையோ காதலிக்கவில்லை. ஜீவா என்னுடைய நண்பன் அவன் என்னை காதலியாக பார்த்தாலும் என்னால் அவனை காதலனாக பார்க்க முடியாது எனது நண்பன் என்னைக் காதலிக்கிறமாதிரி நடந்து கொண்டதுக்கு ஜீவா என்னை மன்னிக்கவும். நான் உம்மலை காதலிக்கவில்லை. ஆனால் உம்மை என் நண்பனாக ஏற்றுக் கொண்டேன். நீ உம்முடைய காதலை கூறும் போது அதனை நான் எற்றிருந்தால் எப்போதும் நீ இந்த நிலையை அடைந்திருக்க முடியாது நீ இந்நிலையை அடைய வேண்டும் என்பதற்காக நான் உம்மலைக்காதலிக்காததாகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராகுலை காலிப்பதாகவும் பொய் சொன்னேன் ராகுல் அவ் வாறு சொன்னதுக்கு என்னை மன்னியும். ஜீவாவின் மனத்தை நோகச்செய்து நான் உம்மை திருமணம் செய்து கொள்ள முடியாது. எனது நண்பன் நான் எண்ணியவாறே உயர்ந்த நிலையை அடைந்து விட்டான் என் நண்பன் நல்லாக இருக்க வேண்டும். ராகுல் நான் உம்மலை திருமணம் செய்து கொண்டு பொய் வாழ்வை வாழ விரும்பவில்லை. ஆகவே தான் நான் இவ்வூரை விட்டுச் செல்லுகின்றேன். நான் தப்பான முடிவுக்கு போகவில்லை என்னைப் படைத்தவனுக்கு அர்ப்பணம் ஆகிவிட்டேன் எல்லோரும் என்னை மன்னியுங்கள். ஜீவா ராகுல் என்றும் நாம் நண்பர்கள்.

இப்படிக்கு
**நண்பி சுருதி**

(என்று கடிதம் எழுதிவிட்டு சென்றவள் அதன் பின்பு தான் ஜீவாவிற்கு தெரியும் என்னை உயர்த்தியது என் படிப்பு இல்லை என் நண்பியின் எண்ணம்)

**சோ. நிசாந்தினி**

**வாடிக்கையாளர்:** **விளம்பரம் செஞ்சதால உங்களுக்கு நஷ்டமா? அதெப்படி....?**

**கடைக்காரன்:** **கடைக்கு "வாட்ச்மேன்" தேவைன்னு விளம்பரம் கொடுத்திருந்தேன்.... நேத்து ராத்திரியே கடையைக் கொள்ளையடிச்சுட்டாங்க**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தகவல் துணுக்குகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழில் முதன் முதல்

⌘ தமிழ் மொழியில் முதன் முதல் தோன்றிய இலக்கிய கலைக் களஞ்சியத்துக்கு அபிதானசோசம் என பெயர் இயற்றியவர் ஆ.முத்துத் தம்பிப்பிள்ளை. இந்நூல் வெளி வந்த ஆண்டு 1902 இது யாழ்ப்பாணத்தில் வெளிவந்தது குறிப்பிடத்தக்கது.

⌘ முதன் முதலில் தமிழில் சதுரகராதி எனும் அகராதியை இயற்றியவர் இத்தாலி நாட்டைச் சேர்ந்த கான்ஸ்டன்டின் ஜோசப்பெஸ்கி என்ற பாதிரியார். இவரை இந்தியர்கள் வீரமாமுனிவர் என அழைத்தனர். இவ் அதராதி 1732 இல் வெளி வந்தது.

⌘ தமிழில் 1943 இல் தான் முதன் முதலாக நாட்டுப் புறப்பாடல்களின் தொகுப்பு வெளிவந்தது. காற்றிலே மிதந்த கவிதை என்ற இந்த தொகுப்பை மு.அருணாசலம் என்பவர் வெளியிட்டார்.

⌘ தமிழில் வெளிவந்த முதல் வரலாற்று நாவல் மோகனாங்கி 1895 ஆம் ஆண்டில் வெளிவந்த இந் நாவலை எழுதியவர் திருகோணமலையை சேர்ந்த சரவணமுத்துப் பிள்ளை என்பவர்

⌘ தமிழில் முதன் முதல் பத்திரிகை ஆசிரியராகவும், நூலாசிரியராகவும் விளங்கியவர் திருமதி விசாலாட்சி அம்மையார். இவர் தனது 18 வயதிலேயே லோகோபகாரி எனும் பத்திரிகையின் உதவி ஆசிரியராக சேர்ந்தார்.

⌘ தமிழில் முதன் முதலாக, தமிழ் சுருக்கெழுத்து அகராதி 1965ம் ஆண்டில் வெளியிடப்பட்டது. இதனை தமிழக அரசு வெளியிட்டு வைத்தது.

⌘ முதன் முதலில் 1948 ஆம் ஆண்டில் கலைக் களஞ்சியம் வெளியிடப்பட்டது. இதனை வெளியிட்டவர் ம.ப.பெரியசாமித்தூரன் என்பவர்.

⌘ தமிழில் முதன் முதலாக ஒரு கவிதைத் தொகுப்பு பல பதிப்புக்களை காண முடியும் என்ற சாதனையை படைத்தது. பாரதிதாசன் கவிதைகள் என்ற தொகுப்பு ஆகும்.

⌘ 1931ம் ஆண்டில் தமிழ் மேகசின் எனும் பெயரில் வெளிவந்த தமிழ் மாத இதழ் தமிழில் வெளிவந்த முதல் அறிவியல் மாத இதழ் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

⌘ தமிழில் முதன் முதலாக வெளிவந்த முஸ்லீம் இதழ் முஸ்லீம்நேசன் என்பதாகும். இதன் ஆசிரியர் சித்திலெப்பை இது இலங்கையில் 1882ம் ஆண்டில் வெளிவந்தது.

⌘ தமிழில் இலக்கிய விமர்சனத்துக்கு என்று ஆரம்பிக்கப்பட்ட முதல் பத்திரிக்கை எழுத்து. 1960 இல் ஆரம்பமான இந்த மாத இதழின் ஆசிரியர் சி.சு.செல்லப்பா என்பவர்.

⌘ இலங்கையில் முதன் முதலாக தமிழில் வெளியான மாத இதழ் உதயதாரகை என்பதாகும். இது 1841ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது.

⌘ தமிழில் வெளிவந்த முதல் வாழ்க்கை வரலாற்று நூல் 1868 இல் வெளியான அச்சுதானந்த சுவாமிகள் வரலாறு என்ற நூலாகும். இதனை சோமசுந்தர அடியவர் என்பவர் எழுதியிருந்தார்.

⌘ வெளிநாட்டு வானொலி நிலையங்களில் தமிழுக்கு இடங்கொடுத்த முதல் வானொலி நிலையம் நிலைய வாடிகள் ஆகும்.

⌘ மலேசியாவில் முதன் முதலாக தமிழ் இதழ்களை தொடக்கியவர் சி.கு.மா்ஹீம்சாய்பு என்பவர். இவர் 1875ல் சிங்கை வர்த்தமானி என்ற இதழையும் 1879ஆம் ஆண்டில் தங்கைநேசன் என்ற இதழையும் தொடக்கி நடத்தினார்.

⌘ முதன் முதலாக தமிழ் நாடகம் இந்தியாவில் உள்ள தஞ்சாவூரில் அரங்கேற்றப்பட்டது.

⌘ தமிழில் வெளிவந்த முதல் திரைப்படம் காளிதாஸ் என்பதாகும். இது 1931 ஆம் ஆண்டில் திரையிடப்பட்டது.

⌘ முதன் முதலில் இலங்கையில் வெளிவந்த தமிழ் நாவல் அஸன்பேயுடைய சரித்திரம் என்பதாகும்.

⌘ தமிழில் வெளிவந்த முதல் நாவல் பிரதாப முதலியர் சரித்திரம் ஆகும்.

மூலம் :- **முதன் முதலாக சுவையான நிகழச்சிகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் கல்வி

# (வரலாற்றுப் பார்வை)

- 1942 இலங்கை பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டது
- 1943 இலவசகல்விக்கான ஆலோசனை முன்வைக்கப்பட்டது இதனை முன்வைத்தவர் கன்னங்கர.
- 1943 தொழிநூட்பக் கல்வி மருதானையில் ஆரம்பிக்கப்பட்டது.
- 1945 இலவச கல்வி அறிமுகப்படுத்தப்பட்டது.
- 1960 பாடசாலைகள் தேசிய மயமாக்கப்பட்டது.
- 1978 பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு பல்கலைக் கழக சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டது
- 1979 இலவச பாடநூல் விநியோகிக்கப்பட்டது
- 1981 மகாபொல புலமைப் பரிசு பல்கலைக்கழக உயர் தொழில்நுட்ப கல்வி பயிலும் வறிய மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டது
- 1985 தேசிய கல்வி நிறுவகம் மகரகமவில் ஆரம்பிக்கப்பட்டது.
- 1985 கல்வியற் கல்லூரி ஒக்டோபர் 1ம் திகதி ஆரம்பிக்கப்பட்டது.
- 1989 இலவச மதிய உணவுத்திட்டம் 1989 வைகாசி 21ம் திகதி தொடக்கம் 1996ம் ஆண்டு வரை நடைமுறைப்படுத்தப்பட்டது.
- 1991 மாணவர்களுக்கு உணவுக்குப் பதில் உணவு முத்திரை விநியோகிக்கப்பட்டது.
- 1993 இலவச சீருடை விநியோகிக்கப்பட்டது. தை மாதம் 18ம் திகதி முதல்.

**ஆக்கம் :- ம . நிரோஜினி**

**"நாட்டில் பசி பட்டினியைப் போக்குமாறு மறியல் போராட்டம் பண்ணினீங்களே. ஏதாவது பலன் கிடைச்சுதா"**

**"நேத்து ஒருநாள் ஜெயில்ல வெச்சு மூணு வேளையும் இலவசமா சாப்பாடு போட்டாங்க"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தனைத் துளிகள்

ௐ தவறை ஒப்புக் கொண்டு அதனை திருத்தி கொள்பவன் வெற்றி பெறுவது நிச்சயம்.

ௐ ஒவ்வொரு நல்ல செயலும் நல்ல எண்ணமும் முகத்தில் ஒரு அழகையும் ஒளியையும் தருகிறது.

ௐ விரும்பியது கிடைக்கவில்லையென்று வருந்தாதே கிடைத்துள்ளதை விரும்பு.

ௐ அன்பு தான் கடவுள் அன்புதான் உண்மை அன்புள்ள இடத்தில் தான் இறைவன் இருக்கின்றான்.

ௐ அன்புக்கு கட்டுப்படுவன் பணத்திற்கு ஆசைப்படமாட்டான்.

ௐ நல்லது செய்து நடுவழியே போனால் பொல்லாதது போகிற வழியே போகும்.

ௐ அறிவால் ஒருவனை அறிந்து கொள் இல்லை அனுபவித்தாவது புரிந்து கொள்.

ௐ மனதில் திருப்தி இல்லாதவர்கள் என்றும் ஏழைகளே.

ௐ சந்தோசம் வேண்டுமா? ஆசையை விடு சந்தோசம் தானாக வரும்.

ௐ மனிதனின் முக்கிய தேவைகள் நம்பிக்கையும், பொறுமையும்.

ௐ உழைத்தபின் தூங்குவது சரியே உழைக்கும் போது தூங்குவது தான் தவறு.

ௐ குணம் உள்ளவனுக்குக் குறைவராது.

ௐ அன்னையும், தந்தையும் நீ தேர்ந்தெடுக்க முடியாது. உன்னால் தெரிவு செய்யக் கூடியது நண்பனை மட்டுமே.

ௐ கல்வி என்பது இலக்கல்ல அது இலக்கை எய்துவதற்குரிய ஒரு கருவியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ௐ தோல்வியைக் கண்டு அஞ்சாதே அதிலிருந்து நீ கற்றுக் கொள்ள நிறைய இருக்கின்றது.

ௐ சமூகத்துடன் ஒத்து வாழ் அப்போது தான் சமூகத்தில் தலை நிமிர்ந்து நடக்க முடியும்.

ௐ அன்பில்லாதவருக்கு அன்பு காட்டுதே நீண்ட ஆனந்தத்தைத் தரும்.

ௐ துன்பங்கலுக்கு இடையே வரும் இடை வெளிகளை தான் நாம் சந்தோசம் என்கின்றோம்.

ௐ நம்பிக்கையும் இலட்சியமும் இருந்தால் பிரார்த்தனைகள் அதிகம் தேவையில்லை.

ௐ நெற்றியைக் காயப்படுத்துவதை விட முதுமை வரவழைத்துக் கொல்வதே மேல்.

ௐ எண்ணிப் பார்க்க இதயம் வேண்டும். இயக்கி செல்ல தெளிவு வேண்டும்.

ௐ அமைதியிலும் அனுசரிப்பதிலும் அன்பினிலும் அண்ணன் தங்கை போல் உறவு இல்லை.

ௐ திறமை மட்டும் ஒருவனை எழுத்தாளனாக்கி விடாது எழுத்துக்குப்பின் இதயம் இருக்க வேண்டும்.

ௐ ரகசியமாக பேசிக் கொள்ளப்படும் பேச்சும் உரத்த கூச்சலும் கேட்கத்தகுதியற்றவை.

ௐ தன் பையை பணத்தால் நிரப்புவதோடு மனதை நேர்மையால் நிரப்ப வேண்டும்.

ௐ ஒருமனிதனின் கெட்ட குணங்களை வெறுத்துவிடு ஆனால் அந்த மனிதனை வெறுக்காதே.

ௐ துன்பத்துக்கோ கோபத்துக்கோ இடம் கொடுப்பவர்கள் அடிமைபட்டு விடுகின்றனர்.

ௐ உண்மையை நேசி ஆனால் பிழையை மன்னித்து விடு நீ உயர்ந்த மனிதானகி விடுவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ௐ எவன் ஒருவன் தன்னுடைய கடமையை உணர்ந்து செயலாற்ற நினைக்கின்றானோ அவன் தான் உண்மையான வாழ்வு வாழ்கின்றான்.

ௐ சோர்வு என்பது மனிதனைக் கொல்லும் நஞ்சு.

ௐ பேச்சு பெரிது தான் ஆனால் மௌனம் அதனிலும் பெரிது.

ௐ அளவில்லாத வேதனைகளைத் தாங்கி கொண்டு சாதனை படைக்கின்றவன் மேதை.

ௐ பிரச்சனை என்பது இன்னும் திறமையுடன் நீங்கள் செயற்பட உங்களுக்கு கொடுக்கப்பட்ட ஓர் அறிய சந்தர்ப்பம்.

ௐ மனக் குழப்பமில்லாமலிருக்கும் போது எந்த கருமமும் வெற்றியாகும்.

ௐ தாயின் பாதங்களை விடப் புனிதமானது உலகில் வேறு ஒன்றும் இல்லை.

ௐ பணம் இல்லாவிட்டால் உன்னை யாருக்கும் தெரியாது பணம் இருந்தால் உன்னை உனக்கே தெரியாது.

ௐ நல்ல அறிவு எந்த மூலையில் எவ்வளவு தூரத்தில் இருந்த போதிலும் அதனைத் தேடிச்செல்.

ௐ அறிவு இல்லாத கண்ணியம் பலவீனமானது பயனற்றது ஆனால் கண்ணியம் இல்லாத அறிவு ஆபத்தானது அஞ்சத்தக்கது.

ௐ விழுவது வெட்கமல்ல விழுந்து கிடப்பதே வெட்கமானது.

ௐ நீ சந்தோசமாக இருக்கும் போது வாக்குறுதிகளைக் கொடுக்காதே நீ கவலையோடு இருக்கும் போது கடிதங்களை எழுதாதே.

**ஆக்கம் :- சோ . நிசாந்தினி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

- 2006ம் ஆண்டில் நடைபெற்ற உலக கிண்ண கால்ப்பந்தாட்டப் போட்டியில் வெற்றி பெற்று சம்பியனாகிய நாடு

  இத்தாலி.

- 2010 இல் உலக கிண்ண கால்ப்பந்தாட்டம் போட்டி நடை பெறவுள்ள நாடு?

  தென்னாபிரிக்கா

- 2006ம் ஆண்டு நடை பெற்ற உலக கிண்ண கால்பந்தாட்டப் போட்டியில் பிரச்சினைக்கு உள்ளான வீரர்கள்

  ஸிடேன் (பிரான்ஸ்)
  மட்டிராசி (இத்தாலி)

- உதைப் பந்தாட்ட வரலாற்றில் அதிக கோல்களை அடித்த வீரர்

  ரொனால்டோ

- இறுதியாக நடைபெற்ற ஆசிய விளையாட்டுப் போட்டியில் அதிக தங்க பதக்கங்களை பெற்ற நாடு.

  சீனா (185)

- 2008 இல் ஒலிம்பிக் போட்டி நடை பெறவுள்ள நாடு

  சீனா

- டெனிஸ் விளையாட்டின் தாயகம்

  இங்கிலாந்து

- ஆசிய விளையாட்டுக்கள் 1951 இல் முதன் முதலாக எந்த நாட்டில் நடை பெற்றது.

  இந்தியா (டில்லி)

- பொது நலவாய விளையாட்டுக்கள் முதன் முதலாக ஆரம்பிக்கப்பட்ட நாடு

  கனடா (1930)

- 11,000 ஓட்டகங்களை கடந்த இலங்கை வீரர்

  சனத் ஜெயசூரியா

- ரெஸ்ட் போட்டிகளில் அதிக விக்கற்றுக்களைப் பெற்று சாதனை படைத்த வீரர்கள்

  சேர்ண் வோர்ன் (அவுஸ்ரேலியா)
  முத்தையா முரளிதரன் (இலங்கை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- 2006ம் ஆண்டு நடைபெற்ற மினி உலக கிண்ணத்தை கைப்பற்றிய கிரிக்கெட் அணி

  **அவுஸ்ரேலியா**

- 600 டெஸ்ட் விக்கெட்டுக்களைப் பெற்றவர் என்ற பெருமைக்குரிய இலங்கை வீரர்

  **முத்தையா முரளிதரன்**

- 37 பந்துகளில் 100 ஓட்டங்களை பெற்று சாதனை படைத்த பாக்கிஸ்தான் அணியைச் சேர்ந்த வீரர்

  **சயிட் அப்ரிடி**

- தற்போது ICC இன் தலைவராக நியமிக்கப்பட்டவர்

  **பேசி சொன் (தென்னாபிரிக்கா)**

- இவருக்கு முன் இருந்த ICC இன் தலைவர்

  **இசார்ன் மணி (பாக்கிஸ்தான்)**

- 2006ம் ஆண்டில் நடைபெற்ற ரெஸ்ட் போட்டிகளில் வெற்றிகள் எதையும் பெறாத நாடுகள்

  **மேற்கிந்திய தீவுகள்**
  **வங்களாதேஷ்**

- கிரிக்கெட் உலகில் ரண் மெசின் என அழைக்கப்படுபவர்

  **மொகமட் யூசுப் (பாக்கிஸ்தான்)**

- 2006ம் ஆண்டில் ஒரு நாள் போட்டிகளில் அதிகமான போட்டிகளில் விளையாடிய இலங்கை வீரர்கள்

  **சங்கக்கார,**
  **ஜெயவர்தன, டில்சான் (35 போட்டிகள்)**

- 2006ம் ஆண்டில் ஒரு நாள் கிரிகெட் போட்டியில் அதிக சதங்களை பெற்ற இலங்கை வீரர்கள்

  **சனத் ஜெய சூரிய**
  **உபுல் தரங்க**

**ஆக்கம் :- இ. ராம்தீபன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கல்லூரிக் கீதம்

வீறுகொண்ட விவேகானந்த வேதஞானக் களஞ்சியத்தைப்
பேறுகொண்ட இராமகிருஷ்ண பேரருட்செல்வத் துடனே
சாறுகொண்டு பார்முழுதுந்தானஞ் செய்து வேறுளகைம்
மாறுகொள்ளா வைத்தீஸ்வராக் கல்லூரி வாழியவே!

சாதிமத பேதமற்ற சமரசசன் மார்க்க நெறி
மேதினியிற் கால்கொளவே மெச்சு காவி பச்சை நீலம்
நீதிவளர் மூவணர்நீள் கொடியுங் குண்டலியியென்
றாதியுள இலாஞ்சனையும் அடிகளாரும் வாழியவே.

நன்னெறியோர் ஏந்துகின்ற நாகமுத்து செய்தவமும்
தன்னடிசேர் சர்வானந்தா விபுலானந்த இதயபூர்வப்
பொன்னருளும் கல்லூரி பொலிவெய்த முதல்வருடன்
இன்றருளும் வைத்தீஸ்வரன் இருங்கருணை வாழியவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தயா அச்சகம், யாழ்ப்பாணம்.